REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2022 மே 5 வியாழக்கிழமை
# தினகரன்
THINAKARAN
தினகரன்
1932 - 2022
வரு. 90 இல. 104 | Thursday 05, May, 2022 | 16 பக்கங்கள் | 40/-






**தொழிலாளர் நலன்களுக்காகவோ உரிமைகளுக்காகவோ அன்றி**

## குறுகிய அரசியல் நலன்களுக்காகவே உத்தேச வேலைநிறுத்த ஏற்பாடுகள்

**ஜனாதிபதியை சந்தித்த தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் கூட்டாக தெரிவிப்பு**



**மக்களை அசௌகரியப்படுத்தும் நோக்கத்துக்கு ஒருபோதும் ஒத்துழைப்பில்லை**

குறுகிய அரசியல் நலன்களுக்காக மக்களை அசௌகரியத்துக்குட்படுத்தும் நோக்கத்தில் நாளை 06ஆம் திகதி நடத்த திட்டமிடப் பட்டுள்ள வேலை நிறுத்தத்துக்கு

06

**பாராளுமன்றின் பாதுகாப்பு முக்கியம்:**

## ஆர்ப்பாட்டக்காரர்கள் 10 பேர் கைது குறித்து பிரசன்ன கருத்து



**சபாநாயகர் அறிவித்து IGP நடவடிக்கை**

*லோரன்ஸ் செல்வநாயகம் ,ஷம்ஸ் பாஹிம்*

பாராளுமன்றத்தின் பாதுகாப்பு கருதியே ஆர்ப்பாட்டக்காரர்களை கைது செய்ய நேர்ந்ததாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க நேற்று சபையில் தெரிவித்தார். பாராளுமன்றத்துக்குள் பிரவேசிக்கும் வீதியில் நேற்று நடைபெற்ற அரசாங்கத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தின் போது பாராளுமன்ற உறுப்பினர்களது பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டதை கருத்திற்கொண்டே ஆர்ப்பாட்டக்காரர்கள் 10 பேரை கைது செய்ததாகவும் அவர் சபையில் தெரிவித்தார்.

06

## யோஷித்தவுக்கு எதிரான JVP அனுரவின் கருத்து

**சட்ட நடவடிக்கை எடுக்க தீர்மானம்**

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க பிரதமர் அலுவலக செயலணியின் தலைவர் யோஷித்த ராஜபக்ஷவுக்கு எதிராக சுமத்திய குற்றச்சாட்டுகளை வன்மையாக கண்டிப்பதாக பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது. அத்துடன் அனுரகுமார திசாநாயக்கவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரதமர் அலுவலகம் நேற்று விடுத்துள்ள அறிக்கையொன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர்

06

**தற்போது பற்றாக்குறையாக உள்ளவை எதிர்காலத்தில் இல்லாது போகும் அபாயம்**

# நாட்டின் பொருளாதார நெருக்கடி மிக மிக மோசமான நிலையில்

**நாட்டு மக்களோ 225 MP க்களோ விளங்கிக்கொள்வதாக இல்லை**

*லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்*

## சவால்களை வென்றெடுக்க ஒன்றிணைந்து போராட முன்வருமாறு பாராளுமன்றில் நிதியமைச்சர் அலி சப்ரி அறைகூவல்

நாட்டு மக்களோ அல்லது தற்போது பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் 225 பாராளுமன்ற உறுப்பினர்களோ நாடு எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடியின் அளவை இன்னும் முழுமையாக புரிந்துகொள்ளவில்லையென நிதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார். தற்போது பற்றாக்குறையாக காணப்படும் அத்தியாவசியப் பொருட்கள் எதிர்காலத்தில் நாட்டுக்கு முற்றாக இழக்கப்படும் என்றும் நாட்டில் தற்போது பயன்படுத்தக்கூடிய வெளிநாட்டு கையிருப்பு 50 மில்லியன் அமெரிக்க டொலருக்கும் குறைவாக இருப்பதாக நிதி அமைச்சர் அலி சப்ரி எச்சரித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று விசேட உரையொன்றை ஆற்றிய போதே நிதி அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிவாயு தட்டுப்பாடு, எரிபொருள் தட்டுப்பாடு தொடர்பில் பாராளுமன்றத்திலும் ஒட்டுமொத்த சமூகத்திலும் பல விவாதங்களும் விமர்சனங்களும் இடம்பெற்று வருவதாக



தெரிவித்த அவர், தற்போது பற்றாக்குறையாக காணப்படும் இந்த அத்தியாவசியப் பொருட்கள் எதிர்வரும் காலங்களில் நாட்டுக்கு முற்றாக இழக்கப்படுமென அவர் எச்சரித்தார்.

தற்போது இலங்கை எதிர்கொள்ளும் ஒட்டுமொத்த பொருளாதார நெருக்கடி மிகவும் பாரதூரமானதும் ஆழமானதுமாகும். சுதந்திரத்திற்குப் பின்னரான மிக மோசமான பொருளாதார நெருக்கடியை இலங்கை எதிர்கொண்டுள்ளது. இந்த அச்சுறுத்தலிலிருந்து விடுபட அனைவருக்கும் தேசிய

06

## பிரதமர் ஒருபோதும் பதவி விலக மாட்டார்

**சபை முதல்வர் தினேஷ் உறுதி**

**நம்பிக்கையில்லா பிரேரணைக்கும் முகங்கொடுக்க தயார்**



*லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்*

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலக மாட்டார். இன்றோ அல்லது நாளையோ நாட்டின் தற்போதைய சூழ்நிலை தொடர்பில் அவர் பாராளுமன்றத்தில் உரையாற்றுவாரென சபை முதல்வர் அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்திற்கு பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவித்த போதே அமைச்சர் தினேஷ் குணவர்த்தன

06

## பிரதி சபாநாயகர் பதவியை இராஜினாமா செய்தார் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய

**ஜனாதிபதி செயலகம் உறுதி செய்தது**



பிரதி சபாநாயகர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய பதவி விலகியுள்ளதாக, ஜனாதிபதி செயலகம் கடிதம் அனுப்பியுள்ளதென, சபாநாயகர் நேற்று தெரிவித்தார்.

06

## பிரதி சபாநாயகரை தெரிவு செய்ய இன்று வாக்கெடுப்பு

**ஏற்பாடு செய்வதாக சபாநாயகர் அறிவிப்பு**

*லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்*



பிரதி சபாநாயகரை தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பை இன்று சபையில் நடத்தமுடியும் என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஸ்மன் கிரியெல்ல எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் வகையிலேயே சபாநாயகர் இவ்வாறு தெரிவித்தார். அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

06

**நாடு தொடர்பில் அரசு மேற்கொள்ளும்:**

## நியாயமான தீர்மானங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கத் தயார்

**பதவிகளுக்கு சோரம்போகிறவர்கள் நாமல்ல**

*லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்*



நாம் பதவிகளுக்கு சோரம் போகின்றவர்களல்ல. அரசாங்கம் நாடு தொடர்பில் எடுக்கும் நியாயமான தீர்மானங்களுக்கு நாம் ஒத்துழைப்பு வழங்கத் தயாரென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அரசாங்கத்திற்கு எதிர்க்கட்சி என்ற

06

**பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும்**

## ஆர்ப்பாட்டக்காரர்களை அகற்ற நீதிமன்று உத்தரவு



கொழும்பு, கொள்ளுப்பிட்டி, அலரி மாளிகைக்கருகிலுள்ள வீதியிலிருந்து ஆர்ப்பாட்டக்காரர்களையும், அவர்களது சகல உடமைகளையும் அகற்றுமாறு பொலிஸாருக்கு கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நடைபாதைக்கு தடைகள் மற்றும் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படும் வகையில், இத் தரப்பினர் ஆர்ப்பாட்டத்தில்

06

## ஜனாதிபதிக்கு எதிரான யோசனைக்கு ஆதரவில்லை

**வாசுதேவ நாணயக்கார MP தெரிவிப்பு**



ஜனாதிபதிக்கு எதிராகக் கொண்டு வரப்படும் எவ்வித யோசனைக்கும் தமது அணியினர் ஆதரவளிக்க மாட்டார்களென ஆளும் கட்சியிலிருந்து விலகி சுயாதீனமாக

06

## புவனலோஜினியின் உடல் அக்கினியுடன் நேற்று சங்கமம்



இலங்கையின் மூத்த அறிவிப்பாளர் புவனலோஜினி நடராஜசிவம் காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று யாழ். நகரில் நடைபெற்றன.

தனியார் வைத்தியசாலையொன்றில் சிகிச்சை பெற்றுவந்த மூத்த அறிவிப்பாளர் புவனலோஜினி, நேற்று முன்தினம் காலமானதாக

06

## எரிபொருளை ஏற்றிவந்த கப்பலுக்கான பணம் இன்னும் கிடைக்கவில்லை

**மேலும் 02 நாட்களுக்கு விநியோக சிக்கல்**



நாட்டில் பெற்றோல் கையிருப்பு வரையறுக்கப்பட்ட அளவிலேயே உள்ளது. ஒக்டேன் 92 மற்றும் 95 பெற்றோலை கொண்ட கப்பல் ஒன்று இலங்கை கடல் எல்லைக்கருகிலுள்ளது. எனினும் இதனை விடுவிப்பதற்காக

06

## மருந்து பொருட்களை பெறுவதில் சிரமமா?

**1999க்கு அறிவிக்க வேண்டுகோள்**



மருந்து வகைகளை கொள்வனவு செய்வதில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண சுகாதார அமைச்சு விசேட வேலைத் திட்டமொன்றை ஆரம்பித்துள்ளது.

நாடு முழுவதும் பல பகுதிகளில் மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இதற்கமைவாக, 1999 என்ற சுவசெரிய அவசர தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பதன் மூலம்

06

## இலங்கைக்கு இந்தியா 23,000 கோடி கடனுதவி

**இதுவரை வழங்கியுள்ளதாக அறிக்கை**



இந்த ஆண்டு ஜனவரி முதல் இதுவரை இலங்கைக்கு இந்தியா 03 பில்லியன் டொலர்களை (சுமார் ரூ.23,000 கோடி) கடனுதவியாக வழங்கியுள்ளது.

இதுதொடர்பாக கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ளும் வகையில், உணவு,

06









90 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

# இலங்கைப் பொருளாதாரத்தின் தற்போதைய நிலையும் முன்னோக்கிய பாதையும்

## நிதி அமைச்சர் அலி சப்ரி 04ஆம் திகதி பாராளுமன்றத்தில் ஆற்றிய உரை

இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின்னரான வரலாற்றின் இந்த இக்கட்டான தருணத்தில், நிதியமைச்சர் என்ற முறையில் எனது முதலாவது விசேட அறிக்கையை வழங்குவதற்காக நான் இன்று இந்த மதிப்பிற்குரிய சபையில் உரையாற்றுகிறேன்.

நாடு வரலாறு காணாத சமூக, பொருளாதார மற்றும் அரசியல் சவால்களுடன் போராடி வருகிறது. சமீபத்திய முன்னேற்றங்கள் நிலைமையை கடுமையான நெருக்கடியாக மோசமாக்கியுள்ள போதிலும், இந்தச் சவால்களின் மூல காரணங்கள் பல தசாப்த கால பொருளாதார வரலாற்றில் பின்னோக்கிச் செல்கின்றன. அவசர கவனம் தேவைப்படும் முக்கியமான முன்னேற்றத்துறைகள் உள்ளன. பணவீக்கம் மிக அதிக அளவில் உயர்ந்து, வாழ்க்கைச் செலவை தாங்க முடியாத அளவிற்கு அதிகரிக்கச் செய்துள்ளது. அந்நியச் செலாவணி கையிருப்பு கணிசமாகக் குறைந்துள்ளது மட்டுமன்றி பரிமாற்று விகிதம் வேகமாக சரிந்து, நெருக்கடிக்கு பங்களித்துள்ளன. இடைக்கால நடவடிக்கையாக வெளிநாட்டுக் கடனைத் திருப்பிச் செலுத்துவது நிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எரிபொருள், எல்பீ எரிவாயு, மருந்துப் பொருட்கள், மூலப்பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில், மின்சாரத் தடைகள் ஆகியவற்றின் காரணமாகவும் மக்கள் தமது பொருளாதார நெருக்கடிகளுக்கு எதிராக வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுகின்றனர். இவற்றோடு, திரட்டப்பட்ட கடன் அதிகரிப்பு, குறைந்த உற்பத்தித்திறன் மற்றும் நிலையான நடப்புக் கணக்கு பற்றாக்குறை ஆகியவை அடங்கும்.

கொவிட்19 தொற்றுநோய் மற்றும் உக்ரைன் மோதல் போன்ற சமீபத்திய அதிர்வுகள் இந்த அடிப்படை பலவீனங்களை வெளிப்படுத்தச் செய்துள்ளன. எவ்வாறாயினும், அண்மைக் காலத்தில் அமுல்படுத்தப்பட்ட சில தவறான மற்றும் விவேகமற்ற கொள்கைகளால் இந்த நிலைமை ஏற்பட்டது என்பதையும் நாம் ஒப்புக்கொள்ளத் தான் வேண்டும். இது உண்மையில் ஒரு தீவிரமான நிலை. இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதில் சித்தாந்தச் சார்புகளுக்கு ஆளாகாமல், நிபுணத்துவ அணுகுமுறையைப் பின்பற்ற வேண்டிய நேரம் வந்துவிட்டது என்று நான் நம்புகிறேன். அரசிறை மற்றும் படுகடன் நிலைத்தன்மையை மீட்டெடுப்பதில் ஏற்பட்ட தாமதம் மற்றும் அந்நிய கையிருப்பு சரிவை முன்கூட்டியே சமாளிக்கத் தவறியதால் சிக்கல்கள் தீவிரமடைந்துள்ளன என்ற உண்மையை நான் ஏற்றுக்கொள்கிறேன். சர்வதேச நாணய நிதியம் போன்ற நிறுவனங்களால் ஒத்துழைப்பு வழங்கப்படும் பேரண்டப் பொருளாதார ஸ்திரப்படுத்தலின் நம்பகமான பாதையை நிறுவுவதன் மூலம் மூலதன சந்தை அணுகலை மீளப் பெறுவதில் இலங்கை கவனம் செலுத்தியிருக்க வேண்டும்.

ஆனால் இப்போது, குறைகளைக் கண்டுபிடிப்பதை விட, இந்த நிலைமைக்கான காரணங்களைக் கண்டறிந்து, முன்னோக்கி செல்வதற்கான பாதையில் கவனம் செலுத்துவது முக்கியம். தொழில்சார் மற்றும் நிலையான தீர்வுகளை வழங்குவதில் நாம் தீவிரமாக இருக்க வேண்டும் என்ற செய்தியை பொதுமக்கள் போராட்டங்கள் நமக்குத் தெரிவிக்கின்றன. இதில் ஒரு முக்கியமான பகுதி என்னவெனில், நமக்கு முன்னால் உள்ள சவால்கள் குறித்தும் தேர்வு செய்வதற்கு, வலியற்ற தீர்வுகள் எதுவும் இல்லை என்பது குறித்தும் வெளிப்படைத்தன்மையைக் கொண்டிருத்தலாகும். இலங்கையின் வரலாற்றில் பல சமயங்களில், அடுத்தடுத்து வந்த அரசியல் நடிகர்கள் கண்கவர் படங்களை வரைந்தும், யதார்த்தமும் நம்பகத்தன்மையற்றதுமான வாக்குறுதிகளை அளித்துமுள்ளனர். ஒவ்வொரு முறையும் நீண்ட காலத் தீர்வுகளை ஏற்படுத்த முயற்சிக்கும் போது, குறுகிய கால நன்மைகள் மற்றும் நிவாரணங்கள் என்ற வாக்குறுதியுடன் அடுத்த தேர்தல் சுழற்சியில் இவை தலைகீழாக மாற்றப்படுகின்றன. இந்த கொள்கைகளின் பாதகமான விளைவுகளை இன்று நாம் காண்கிறோம் மட்டுமன்றி; பொதுமக்கள் இதை நிராகரித்ததை இன்று நாம் காணும் எதிர்ப்புகள் பிரதிபலிக்கின்றன. நாட்டின் முன்னோக்கிய பொருளாதாரப் பாதையில் பரந்த அரசியல் ஒருமித்த கருத்தை இலங்கை ஏற்படுத்த வேண்டிய நேரம் இது. அரசிறை மற்றும் பணவியல் ஒழுக்கம், உற்பத்தித்திறனை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துதல் மற்றும் நமது சமூகத்தின் மிகவும் பாதிக்கப்படக்கூடிய பிரிவினரைப் பாதுகாப்பதன் மூலம் சமமான விளைவுகளை உறுதி செய்தல் ஆகியவற்றின் அடிப்படையிலான பொருளாதாரப் பாதையே அதுவாகும். பிரச்சினையின் மூல காரணத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும், அதாவது பல அடுத்தடுத்த அரசாங்கங்களால் உருவாக்கப்பட்ட நிலைபேறற்ற அரசிறைக் கொள்கைகள். ஒரு நாடாக நாம் நமது சக்திக்கு அப்பாற்பட்டு வாழ்ந்தோம் என்ற உண்மையையும் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். பொது நிதிக்கான பொறுப்பு நமது அரசியலமைப்பின் படி பாராளுமன்றத்தின் கீழ் வருகிறது என்றபடியால், நிச்சயமாக இந்த கௌரவமிக்க சபையின் ஒப்புதலுடன், முறையான பரீட்சிப்புக்கள் மற்றும் இருப்புக்கள் இல்லாமல், அனைத்து அரசாங்கங்களும் தாங்கள் சம்பாதித்ததை விட அதிகமாக செலவழித்துள்ளன. என் பார்வையில், "நாம் எதை விதைக்கிறோமோ அதையே அறுவடை செய்கிறோம்" என்பது தான் இப்போது நடக்கிறது. நிலையான தீர்வுகளில் கவனம் செலுத்த வேண்டிய நேரம் வந்துவிட்டது. தீர்வுகளின் அடிப்படைகள் மிகவும் நேரடியானவை. எதிர்காலத் தலைமுறைகளின் மீது பெரும் கடன் குவியலின் சுமையை சுமத்துவதை விட, தாங்குதிறனுடைய கடன் நிலைமையுடன் நியாயமான வருவாயின் கட்டமைப்பிற்குள் செலவினங்கள் நிருவகிக்கப்பட வேண்டும். எனினும் அதைச் செய்ய, நாம் மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும். அரசிறைச் செயல்பாடுகள் மற்றும் முழுப் பொருளாதாரத்தையும் நாங்கள் நிருவகிக்கும் விதத்திலான மாற்றங்கள் நமது பொருளாதார முன்னேற்றத்திற்கு தடையாக உள்ள தடைகளை நீக்க மறுசீரமைப்புக்களை மேற்கொள்ள வேண்டும். பொருளாதாரத்தின் முன்னேற்றம், நாட்டின் முன்னேற்றம் ஆகியவற்றின் பொருட்டு முடிவுகளை எடுப்பதற்கு நாம் தூரநோக்குடனும் விவேகத்துடனும் செயல்படுதல் வேண்டும். கல்வி, சுகாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்பு போன்ற முக்கியமான துறைகளில் பொது முதலீட்டை உறுதி செய்யும் அதே வேளையில், அரசின் வருவாயை அதிகரிக்கவும் செலவினங்களை சீராக்கவும் வரிச் சீர்திருத்தங்களைச் செயல்படுத்துவதற்கு பாராளுமன்றம் முன்னுரிமை அளிக்க வேண்டும். பொருளாதாரத்தின் அனைத்து அம்சங்களிலும் உற்பத்தித்திறன் மற்றும் போட்டித்தன்மையை உந்தும் அதே வேளையில், தேசிய சேமிப்பை உயர்த்துவதற்கும், அரசாங்க மற்றும் தனியார் முதலீட்டை உற்பத்தித் துறைகளுக்குச் செலுத்துவதற்கும் பேரண்டப் பொருளாதாரக் கொள்கை வடிவமைக்கப்பட்டிருக்க வேண்டும். அரசுக்குச் சொந்தமான தொழில் நிறுவனங்களை மறுசீரமைப்பதில் நாம் கடுமையான முடிவுகளை எடுக்க வேண்டும். சமுதாயத்திற்கு குறைந்த செலவில் சிறந்த விளைவுகளை அடைய, முடிந்தவரை போட்டிச் சந்தை வழிமுறைகளை ஊக்குவிக்க வேண்டும். சந்தைச் சக்திகளின் அபரிமிதமான உற்பத்தித் திறனைப் பயன்படுத்த நாம் கற்றுக்கொள்ள வேண்டும். அதே சமயம் சந்தைத் தோல்விகளைப் பற்றி முழுமையாக அறிந்துகொண்டு, சமூகத்திற்கான நியாயமான விளைவுகளை உறுதி செய்ய பொருத்தமான தலையீட்டை வழங்க வேண்டும். பொதுத்துறைத் திறன் மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்த நம்பகமான முறைமைகளை நாம் உருவாக்க வேண்டும். இந்தச் சூழலில் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெறுவதற்கான முடிவு முக்கியமானது. ஒரு சர்வதேச நாணய நிதிய வேலைத்திட்டமானது, மிகவும் தேவையான மறுசீரமைப்புக்களை மேற்கொள்வதற்கு ஒரு ஊக்கியாக இருக்கும். மேலும் நமது பொருளாதார சிக்கல்களை நிவர்த்தி செய்வதில் நாம் தீவிரமாக இருக்கிறோம் என்பதற்கான சமிக்ஞையை உலகின் பிற பகுதிகளுக்கும் வழங்கும். ஆனால் நாம் முன்னெடுக்கும் பொருளாதார மறுசீரமைப்பு வேலைத்திட்டம் இலங்கை உரிமைத் தன்மையுடன் கூடிய வேலைத்திட்டமாக இருக்க வேண்டும் என்பதை நாம் உணர வேண்டும். சர்வதேச நாணய நிதியமும் தொழில்நுட்ப உதவியை வழங்கி பின்னர் ஒப்புதல் அளிக்கும் தொழில்முறையானதும் மற்றும் பகுப்பாய்வு ரீதியாகவும் வலுவான ஒரு பொருளாதாரத் திட்டத்தை முன்வைக்க வேண்டும். இலங்கை உரிமைத்தன்மை இல்லாமலும், சட்டவாக்கமன்றத்தின் பரந்த ஒருமித்த கருத்து இல்லாமலும், எங்களின் நீண்டகாலப் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வுகளை வழங்குவதில் வெற்றிபெற முடியாது. நாம் தற்போது ஆழமான பொருளாதார சவால்களை எதிர்கொண்டுள்ள அதே வேளையில், எமது முதல் முன்னுரிமை பேரண்டப் பொருளாதார ஸ்திரப்படுத்தல் ஆகும். உலகின் மிகவும் ஆற்றல்மிக்க பொருளாதார வளர்ச்சி மையங்களின் வாசலில் இந்தியப் பெருங்கடல் பொருளாதாரமாக இலங்கை கொண்டிருக்கும் அபரிமிதமான ஆற்றலை நாம் மறந்து விடக்கூடாது. பிராந்திய மற்றும் உலகளாவிய பொருளாதார பெறுமதிச் சங்கிலிகளில் பொருத்தமான கல்வி, சுகாதாரம், தூய எரிசக்தி, பொதுப் போக்குவரத்து, சமூகப் பாதுகாப்பு மற்றும் நிலையான உள்கட்டமைப்பு ஆகியவற்றில் நாம் முதலீடு செய்ய வேண்டும்.

> **நிலையான தீர்வுகளில் கவனம் செலுத்த வேண்டிய நேரம் வந்துவிட்டது. தீர்வுகளின் அடிப்படைகள் மிகவும் நேரடியானவை. எதிர்காலத் தலைமுறைகளின் மீது பெரும் கடன் குவியலின் சுமையை சுமத்துவதை விட, தாங்குதிறனுடைய கடன் நிலைமையுடன் நியாயமான வருவாயின் கட்டமைப்பிற்குள் செலவினங்கள் நிருவகிக்கப்பட வேண்டும்**



இந்தச் செயல்பாட்டில், வேலை வாய்ப்பு மற்றும் வளர்ச்சியைத் தூண்டுவதில் தனியார் துறை அதிக பங்கு வகிக்க வேண்டும். பொருத்தமான கொள்கைகளுடன் வெளிநாட்டு நேரடி முதலீடுகளுக்கு உகந்த, உலகளாவிய போட்டித்தன்மை கொண்ட, ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரத்தை இலங்கை கொண்டிருக்க வேண்டும். அவ்வாறு செய்யும்போது, ஆதாரங்களின் அடிப்படையிலான ஆராய்ச்சிக்கிணங்க நாம் முடிவுகளை எடுக்க வேண்டும். நிதி அமைச்சிலுள்ள எனது அலுவலகத்தில் ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுப் பிரிவை நிறுவும் பணியில் பொருளாதாரக் கொள்கை வகுப்பதில் நிபுணத்துவ அணுகுமுறையை வழங்கவும் எங்களுக்கு உதவும். தற்போதைய நெருக்கடி நிலைமை எவ்வாறு அதிகரித்தது?

- பெரும்பாலான முக்கிய அரசிறை மாறிகள் மூலம் பிரதிபலிக்கின்றவாறு, கடந்த பல தசாப்தங்களாக இலங்கையின் வரவுசெலவுத் திட்டச் செயற்பாடுகள் பல பலவீனங்களைச் சந்தித்து வருகின்றன. இதில் அரசாங்க வருவாய் திரட்டலில் கூர்மையான சரிவு, அதிக மற்றும் கடுமையான மீண்டெழும் செலவினங்கள், குறிப்பிட்ட துறைகளுக்கான அதிக மூலதனச் செலவினங்கள் உள்ளடங்குவதுடன், தொடர்ச்சியான அரசிறைப் பற்றாக்குறைகள் பெரும் படுகடன் குவிப்பை ஏற்படுத்தின.
- மேற்கூறிய அரசிறை ஏற்றத்தாழ்வுகளின் கசிவு விளைவுகள் பணவியல் மற்றும் பரிமாற்று விகிதக் கொள்கைகளின் நடத்தையையும் சிக்கலாக்கியது.
- இவ்வாறு, இலங்கைப் பொருளாதாரம் ஒரே நேரத்தில் வெளிப்புற நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை மற்றும் அரசாங்க வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை ஆகிய இரண்டையும் கொண்ட இரட்டைப் பற்றாக்குறையைக் காட்டியது.
- தொடர்ச்சியான வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறைகள் பொதுப் படுகடன் திரட்சிக்கு வழிவகுத்து, இது இப்போது தாங்குதிறனற்றதாக உள்ளது.
- இந்த செயல்பாட்டில், ஊழலின் கூறுகளை நான் நிராகரிக்கவில்லை, அதனால்தான் ஒரு சுயாதீன நீதித்துறை, நம்பகமான மத்திய வங்கி மற்றும் வலுவான பொதுச் சேவை போன்ற நிறுவன காரணிகளை நாம் வலியுறுத்த வேண்டியுள்ளது.
- தற்போது, இலங்கையின் பொருளாதாரம் மிகவும் சவாலான சூழ்நிலையில் உள்ளது. இது சமூக கொந்தளிப்பினையும் அரசியல் ஸ்திரமின்மையையும் தூண்டியுள்ளது. அடிப்படைப் பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வு காணப்படாவிட்டால், இது பேரழிவுமிக்க விளைவுகளுக்கு வழிவகுக்கும். இலங்கையில் அண்மைக்கால நெருக்கடியைத் தூண்டியது எது?
- நான் மேலே குறிப்பிட்டது போல், அரசிறைத் துறை பல ஆண்டுகளாக தொடர்ச்சியான பலவீனங்களால் பாதிக்கப்பட்டிருந்தது.
- இருப்பினும், 2019 இன் பிற்பகுதியில், நான் மேலே குறிப்பிட்ட அடிப்படை பலவீனங்களைத் தீர்க்காமல், பொருளாதார நடவடிக்கைகளைத் தூண்டுவதை நோக்கமாகக் கொண்டு, கணிசமான வரிக் குறைப்புகளை அரசாங்கம் அறிமுகப்படுத்தியது. எவ்வாறாயினும், இலங்கையில் கொவிட்19 தொற்றுநோய் பரவியதன் மூலம் இந்த நடவடிக்கையின் உத்தேசிக்கப்பட்ட முடிவுகள் அடையப்படவில்லை. இது இலங்கையின் நிலைமையை மோசமாக்கியது. மேலும், 2019 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட வரிக் குறைப்புகளால் இழக்கப்பட்ட வருவாய் ரூபா.500 பில்லியனை விட அதிகமானதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது இறையாண்மை தரமதிப்பீட்டு நிறுவனங்கள், இலங்கையை தவறுகை மட்டங்களுக்கு அருகில் தரமிறக்கச் செய்துள்ளது. எனது கருத்துப்படி, கொவிட்19 தொற்றுநோயால் உருவாக்கப்பட்ட புதிய சூழலில் இந்த வரிக் குறைப்புக்கள் படிப்படியாக மாற்றப்பட்டிருக்க வேண்டும். அதற்குப் பதிலாக நடந்தது என்னவெனில், வருவாய் இழப்பு மத்திய வங்கியை பணத்தை அச்சிடுவதற்கு வழிவகுத்ததுடன், பற்றாக்குறைக்கு நிதியளிக்க அரசாங்கத்திற்கு உதவியது. உலகளாவிய பணப்புழக்க நிலைமைகளில் ஏற்ற இறக்கத்திற்கு மத்தியில் தரப்படுத்தல் நடவடிக்கையானது, சர்வதேச மூலதனச் சந்தைகளை அணுகுவதிலிருந்து இலங்கையைக் கட்டுப்படுத்தியது. இது முதிர்ச்சியடைந்த படுகடனை மீள்நிதியளிப்பதற்காக புதிய மூலதனத்தை திரட்டுவதில் இருந்து அரசாங்கத்தைத் தடுத்தது.
- எனவே, நாடு படிப்படியாக அதன் வெளிநாட்டு நாணய கையிருப்பை அதன் கறைபடாத படுகடன் சேவைப் பதிவை பராமரிக்கப் பயன்படுத்தியது.
- இதற்கிடையில், சுற்றுலாத் துறைக்கு ஏற்பட்ட பெரும் பாதிப்பானது, தொழிலாளர்களின் பண அனுப்பீடுகளின் மந்தநிலையுடன், சந்தையில் இறுக்கமான அந்நிய செலாவணிப் பணப்புழக்க நிலையை மேலும் மோசமாக்கியது.
- விலைக் கட்டுப்பாடுகள், நிலையான பரிமாற்று விகிதம், ஒழுங்குபடுத்தப்பட்ட வட்டி விகிதங்கள், நிலையற்ற பெற்றோல், டீசல் மற்றும் எல்பி எரிவாயு விலைகள் மற்றும் பிற நிருவகிக்கப்பட்ட விலைகள், நிலைமையை மேலும் சிக்கலாக்கியது. இந்த அழுத்தப் புள்ளிகளின் வெளியீடு இப்போது உயர் பணவீக்கத்தில் பிரதிபலிப்பதாக உள்ளது.
- கொவிட்19 தொற்றுநோய்க்குப் பின்னரான உலகப் பொருளாதார செயற்பாடுகள் மற்றும் அண்மைய உக்ரைன் நெருக்கடி ஆகியவை இலங்கைப் பொருளாதாரத்தில் மேலும் அழுத்தங்களைச் சேர்த்தன.
- 2019 இறுதிக்குள், மத்திய வங்கி ஒதுக்குகள் 7.6 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தது. 5.8 பில்லியன் அமெரிக்க டொலர்கள் உள்வரவு மற்றும் 6.0 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வெளிநாட்டு நாணயக் கடன் சேவை செலுத்துதல்களும் உட்பட 7.8 பில்லியன் டொலர்கள் வெளியேறியதன் விளைவாக 2020 ஆம் ஆண்டின் இறுதியில், கையிருப்பு 5.7 பில்லியன் அமெரிக்க டொலர்களாகக் குறைக்கப்பட்டது,



சபை நிருபர்கள்
லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்

- 7.9 பில்லியன் அமெரிக்க டொலர்கள் மொத்த வரவுடன் 10.4 பில்லியன் டொலர்கள் வெளியேறியதன் விளைவாக கையிருப்பு 2021 ஆம் ஆண்டின் இறுதியில் 3.1 பில்லியன் அமெரிக்க டொலராகக் குறைந்துள்ளது. இதில் 6.8 பில்லியன் அமெரிக்க டொலர்கள் அந்நியச் செலாவணிக் படுகடன் சேவைக் கொடுப்பனவுகள் மற்றும் அத்தியாவசிய இறக்குமதிகளுக்காக 1.2 பில்லியன் அமெரிக்க டொலர்கள் அந்நியச் செலாவணியை வழங்குதல் ஆகியவை அடங்கும்.
- வர்த்தக வங்கிகளுக்கான வெளிநாட்டு நாணய வரவு பற்றாக்குறையின் காரணமாக, எரிபொருள், நிலக்கரி மற்றும் எல்பி எரிவாயு, மருந்துகள் மற்றும் பிற அத்தியாவசியப் பொருட்கள் உட்பட அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதி தொடர்பான அந்நியச் செலாவணித் தேவைகளைப் பூர்த்தி செய்ய 2021, ஆகஸ்ட் முதல் மத்திய வங்கியின் உத்தியோகபூர்வ கையிருப்பு பயன்படுத்தப்பட்டது.
- இதன் விளைவாக, 2022 மார்ச்சு இறுதிக்குள் பீப்பிள்ஸ் பேங்க் ஆஃப் சீனாவின் 1.5 பில்லியன் அமெரிக்க டொலர் சமமான வசதி உட்பட, உத்தியோகபூர்வ ஒதுக்குகள் 1.9 பில்லியன் அமெரிக்க டொலராகக் குறைந்தது. இருப்பினும், இந்த கையிருப்புகளில் பெரும்பகுதி அமெரிக்க டொலர் மதிப்பிலான கொடுப்பனவுகளைத் தீர்க்க பயன்படுத்த முடியாது.



- எனவே, தற்போது பயன்படுத்தக்கூடிய திரவ இருப்பு மிகக் குறைந்த அளவில் உள்ளதுடன் எரிபொருள், எல்பி எரிவாயு மற்றும் மருந்துப் பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதியைக் கடுமையாகப் பாதிப்பதாகவும் உள்ளது.
- இந்த அத்தியாவசிய இறக்குமதிகளுக்கு நிதியளிக்க போதுமான அந்நியச் செலாவணியைத் தேடுவதற்கு அரசாங்கம் போராடிக்கொண்டிருக்கிறது என்பதை இந்த மதிப்பிற்குரிய சபையில் தெரிவிக்க நான் தயங்கவில்லை. எனவே, அத்தியாவசியப் பொருட்களின் விநியோகச் சங்கிலியை மீட்டெடுக்கவும், மக்களின் குறைகளை நிவர்த்தி செய்யவும், மறுசீரமைப்புத் திட்டத்தை முன்னோக்கி நகர்த்தவும், இணைப்பு நிதியளிப்பினைச் செயல்படுத்தவும், நடுத்தர முதல் நீண்ட கால வளர்ச்சி தொடர்பான கொள்கைகளை நடைமுறைப்படுத்தவும் ஒரு நாடென்ற வகையில் நமக்கு அவசரத் தீர்வுகள் தேவையாகும்.
- எவ்வாறாயினும், அரசியல் ஸ்திரத்தன்மை மற்றும் தனியார் துறை உட்பட அனைத்துத் தரப்பினரின் ஆதரவும் மிகவும் தேவையான மறுசீரமைப்பு நிகழ்ச்சி நிரலை செயல்படுத்துவதற்கு முக்கியமான காரணிகளாக விளங்கும்.
- மேற்குறிப்பிட்ட பகுப்பாய்வானது, குறிப்பாக அரசிறைத்துறையில் தற்போது நாடு எதிர்கொள்ளும் முக்கியப் பிரச்சினைகளை, சுருக்கமாக வழங்குகிறது.
- கவனமாகப் பரிசீலித்து நன்கு சிந்திந்து எட்டப்படும் தீர்வுகள் தேவையான ஒரு முக்கியமான மற்றும் ஆழமான பிரச்சினை எங்கள் முன்னிலையில் உள்ளது.
- இவை கடந்த பல தசாப்தங்களாக அடுத்தடுத்த அரசாங்கங்களின் கீழ் குவிந்த பிரச்சினைகள். அதிர்ஸ்டவசமாக, அல்லது துரதிர்ஸ்டவசமாக, தற்போதைய பாராளுமன்றம் தீர்வு காண வேண்டிய கட்டாயத்தில் உள்ளது.
- எனவே, நிலைமையை நன்கு புரிந்துகொண்டு அனைத்து உறுப்பினர்களின் ஆதரவுடன் மிகவும் தேவையான சீர்திருத்தங்களுடன் தீர்வுகளை முன்வைக்க ஒரு குழுவாக பணியாற்றுவது நமது பொறுப்பாகும்.
- இந்த மறுசீரமைப்புக்கள் வேதனையளிக்கும் என்பதில் சந்தேகமில்லை. எனவே, சமூகத்தில் பாதிக்கப்படக்கூடிய பிரிவினரை பொருத்தமான வலுவான சமூக பாதுகாப்பு வலைகள் மூலம் நாம் கவனித்துக் கொள்ள வேண்டும்.
- இந்த இக்கட்டான தருணத்தில் இந்த விடயம் தொடர்பாக இலங்கை மக்களிடம் முறையிடுவதற்கு நான் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துகிறேன். உங்கள் குரலை நாங்கள் நன்றாக கேட்கிறோம் என்று சொல்ல விரும்புகிறேன். நாம் செய்ய வேண்டியது என்னவென்றால், முந்தைய தவறுகளைச் சரிசெய்து, நிதிச் செயல்பாடுகளை, நாட்டின் எதிர்காலப் பாதையை சரியான திசையில் வைப்பதுதான். இது மிகவும் சவாலானதாக இருக்கும், ஆனால் தற்போதைய தலைமுறை மற்றும் வரவிருக்கும் தலைமுறைகளின் முன்னேற்றத்திற்காக நாம் அதைச் செய்து தான் ஆக வேண்டும்.
- நாம் அனைவரும் அறிந்த ஆங்கிலப் பழமொழி, "ஆயிரம் மைல்களின் பயணம் ஒற்றை அடியில் தொடங்குகிறது" என்று கூறுகிறது.
- இதன் பொருள் என்னவென்றால், பெரிய விடயங்கள் எளிமையான தொடக்கங்களுடன் ஆரம்பமாகின்றன.
- எனவே, உறுதியுடன், இந்த முதல் படிகளை எடுத்துவைத்து நமது மக்களுக்கு எதிர்காலத்தில் ஒரு நிலையான அரசிறை நிலைமையையும், சிறந்ததும் வலுவானதுமான நாட்டையும் உருவாக்கும் இலக்கை அடைய நமது பயணத்தைத் தொடங்க வேண்டும்.
- இது முன்னெப்போதையும் விட இப்போது முக்கியமானதாகியுள்ளது11. "நிதித் துறைச் செயலாற்றுகை" பற்றிய குறிப்பு இணைப்பு I இல் கொடுக்கப்பட்டுள்ளது. 2022.04.28 அன்று நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட தகவல் தொடர் குறிப்பு இல. 1, "அரசிறைத் துறை: தற்போதைய சூழ்நிலை மற்றும் முன்னோக்கிச் செல்லல்" இணைப்பு II இல் கொடுக்கப்பட்டுள்ளது மற்றும் பத்திரிகையில் கொடுக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்களின் தகவலுக்காக 2022.04.28 அன்று வெளியிடப்பட்ட "சர்வதேச நாணய நிதியம்/ உலக வங்கியின் வசந்தகாலக் கூட்டங்களில் கலந்துகொள்வதற்காக வொசிங்ரன் நகருக்கு இலங்கை தூதுக்குழுவின் சமீபத்திய விஜயம்" பற்றிய வெளியீடு ஆகியவை பாராளுமன்ற உறுப்பினர்களின் தகவலுக்காக.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 மே 5 வியாழக்கிழமை

# தினகரன்

THINAKARAN



**தொழுகை நேரம்**

04முதல் 08 வரை

| | |
|---|---|
| சுபஹ் | 04.37 |
| லுஹர் | 12.09 |
| அஸர் | 03.26 |
| மஃரிப் | 06.19 |
| இஷா | 07.31 |

**இன்றைய சுபதினம்**

சுபகிருது வருடம் சித்திரை 22

ராகுகாலம் : பகல் : 01.30 - 03.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை

யோகம்: மரண யோகம்

திதி: பஞ்சமி

**இராசி பலன்கள்**

| | |
|---|---|
| மேஷம் | தனம் |
| ரிஷபம் | பாராட்டு |
| மிதுனம் | செலவு |
| கடகம் | போட்டி |
| சிம்மம் | கோபம் |
| கன்னி | பொறுமை |
| துலாம் | நன்மை |
| விருச்சிகம் | நிறைவு |
| தனுசு | முயற்சி |
| மகரம் | வெற்றி |
| கும்பம் | மறதி |
| மீனம் | சுகம் |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)

# 19 ஆவது திருத்தத்தை உடன் அமுலாக்கவும்

## சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை, குறிப்பிட்ட காலத்துக்குள் நீக்க வேண்டுமென கோரியுள்ள இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், 20 ஆம் திருத்தச் சட்டத்தை நீக்கி, 19 ஆம் திருத்தச் சட்டத்தை உடன் அமுலாக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளது.

அத்துடன் நாட்டின் நெருக்கடி நிலைக்கு தீர்வு காண்பதற்காக 15 பேர் கொண்ட அனைத்துக் கட்சி அமைச்சரவையையும், அதற்கு ஆலோசனை வழங்குவதற்காக நிபுணர்களடங்கிய ஆலோசனைச் சபை ஒன்றையும் நிறுவ வேண்டுமெ‌ன இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

தற்போதைய நெருக்கடிக்கு தீர்வைப் பெற்றுக் கொள்வதற்கான யோசனையை நேற்று முன்தினம் கண்டி மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்க தேரர்களிடம் சமர்ப்பித்த பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டபோதே சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சாலிய பீரிஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நம்பிக்கையில்ல பிரேரணை கொண்டுவரப்பட்டு, அது நிறைவேற்றப்

06

கைத்தொழில் பிணக்குகள் சட்டமூலம்:

# சில பிரிவுகளுக்கு 2/3 பெரும்பான்மை அவசியம்

## நீதிமன்றத்தின் அறிவிப்பை சபாநாயகர் சபையில் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம் ஷம்ஸ் பாஹிம்**

கைத்தொழில் பிணக்குகள் சட்ட மூலத்தில் சில பிரிவுகள் அரசியலமைப்புக்கு முரணானது எனவும் சில பிரிவுகளுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவசியம் என்றும் நீதிமன்றம் அறிவித்துள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன சபையில் தெரிவித்தார்.

"கைத்தொழில் பிணக்குகள் (விசேட ஏற்பாடுகள்)" சட்டமூலத்தின் சில பிரிவுகளுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவைப்படுவதாகவும் சட்டமூலத்தின் 2 (1) ஆம் வாசகம் அரசியலமைப்பின் உறுப்புரைகள் 3. 4(இ), 111(ஏ)(1)(ஆ) மற்றும் 111(க)(அ) ஆகியவற்றுடன் முரண்படுகின்றது என நீதிமன்றம் தீர்மானித்துள்ளதுடன் இதற்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமென உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளதாக சபாநாயகர் சபையில் தெரிவித்தார்.

நெருக்கடி நிலைக்கு தீர்வு காண்பதில்:

# பிளவுகளை விட ஒன்றிணைந்து செயற்படுவதே தேவையாக உள்ளது

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைக்கு தீர்வு காண்பதற்கு அரசியல் தீர்வு அவசியம் எனினும் பிளவுகளை விட ஒன்றிணைந்து செயற்படுவதே இன்றைய முக்கிய தேவையாக உள்ளதாக முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அதேவேளை வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் வீழ்ச்சியடையாமல் பாதுகாப்பதில் அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

நம்பிக்கையில்லா பிரேரணை தொடர்பில் பேசப்படும் தற்போதைய நிலையில் பிளவுகளுக்கு முன் இணைந்து செயற்படுவதிலேயே கவனம் செலுத்த வேண்டியுள்ளதென்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சர்வதேச நாணய நிதியத்துடன் அரசாங்கம் மேற்கொண்டுள்ள பேச்சுவார்த்தை தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போதே முன்னாள் பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

இடைக்கால அரசாங்கமா அல்லது தனியான

06

## தமிழக அரசு இலங்கைக்கு வழங்கும் உதவி

# இலங்கை இந்தியாவுக்குமிடையிலான வரலாற்று சந்தேகங்களுக்கு தீர்வாகும்



## சபையில் மனோ கணேசன் எம்.பி

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

தமிழ் மக்கள் மட்டுமன்றி பொருளாதார நெருக்கடிக்குள்ளாகியுள்ள அனைத்து மக்களுக்கும் உதவுவதற்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் எடுத்துள்ள முடிவானது இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலான வரலாற்று ரீதியான சந்தேகங்களை தீர்க்கும் செயற்பாடாகும் என மனோ கணேசன் எம்பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

40,000 மெற்றிக் தொன் அரிசி 500 மெற்றிக் தொன் பால் மா, 137 வகை மருந்துகளென பலஅத்தியாவசிய பொருட்களை இலங்கைக்கு வழங்குவதற்கு அவர் நடவடிக்கை எடுத்துள்ளார். அதன் பெறுமதி பல கோடி ரூபாவாகுமென்று அவர் சபையில் தெரிவித்தார்.

அதேவேளை தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்கள், பாதிக்கப்பட்டுள்ள இலங்கை மக்களுக்காக ஒரு நாள் சம்பளத்தை வழங்க முன்வந்துள்ளமையும் ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும்

06

# திறந்த மனதுடன் முன்வைக்கப்படும் வேலைத்திட்டங்களுக்கு ஒத்துழைப்பு

## ஜேவிபி தலைவர் அனுரகுமார திஸாநாயக்க

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



நாடு தற்போது எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலைக்கு காரணமான ஜனாதிபதியும் பிரதமரும் பதவி விலகி திறந்த மனதுடன் நெருக்கடிக்கு தீர்வு காண வேலைத்திட்டங்கள் முன்வைக்கப்பட்டால் அந்த வேலைத்திட்டங்களுடன் இணைந்து செயற்பட தயாராக உள்ளதாக ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தை மற்றும் நாட்டின் பொருளாதார நிலை தொடர்பில் நிதியமைச்சரின் அறிவிப்பு மீதான விவாதத்தின் போதே அனுரகுமார திஸாநாயக்க எம் பி இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் சபையில் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கமானது அரச வருமானத்தை அதிகரிப்பதற்கோ, ஏற்றுமதி இறக்குமதிக்கிடையிலான பற்றாக்குறையை நிவர்த்தி செய்யவோ, நீண்ட காலமாக பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்களை வருமானம் ஈட்டக் கூடிய அபிவிருத்திகளுக்கு பயன்படுத்தவோ நடவடிக்கை எடுக்கவில்லை.

உற்பத்திகளை அதிகரிக்கவோ திட்டங்களை தயாரிக்கவோ முறையான வேலைத்திட்டங்களும் மேற்கொள்ளப்படவில்லை

அந்த வகையில் வருடக் கணக்கில் தொடர்ந்த ஆட்சியாளர்களினால் ஏற்படுத்தப்பட்ட பொருளாதார நெருக்கடியிலேயே நாடு தற்போது அகப்பட்டுள்ளது. முறையான பொருளாதார திட்டங்கள் இல்லாமையே இதற்கு முக்கிய காரணமாகும்.

நாட்டு மக்கள் ஏழ்மையில் இருந்தாலும் ஆட்சியாளர்கள் செல்வந்தர்களாகவே இருக்கின்றனர். இது எப்படி நடந்தது. நாட்டை அபிவிருத்தி செய்வதற்கான

06

புற்றுநோய் உள்ளிட்ட உயிர்காக்கும்

# அத்தியாவசிய மருந்து வகைகளை தந்துதவுமாறு இந்தியாவிடம் கோரிக்கை



முன்னாள் கிரிக்கெட் வீரர் சனத் ஜயசூரிய இந்திய தூதுவர் கோபால் பாக்லேயுடன் சந்திப்பு

இலங்கைக்கு தேவையான அத்தியாவசிய மருந்து வகைகளை பெற்றுக்கொள்ள உதவி வழங்குமாறு இலங்கையின் முன்னாள் கிரிக்கெட் வீரர் சனத் ஜயசூரிய, இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேயிடம் கோரிக்கையொன்றை முன்வைத்துள்ளார்.

முன்னாள் கிரிக்கெட் வீரர் சனத் ஜயசூரிய இந்திய உயர் ஸ்தானிகர் பாக்லேயை அவரது அலுவலகத்தில் சந்தித்து பேசிய போதே இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார். அத்துடன் தற்போது மருந்துகள் உட்பட அத்தியாவசியப் பொருட்கள் வழங்கிவரும் இந்தியாவின் ஆதரவையும் பாராட்டினார். "இந்திய உயர்ஸ்தானிகர் கிரிக்கெட் வீரர் சனத் ஜயசூரியவின், விளையாட்டு மற்றும் இலங்கைக்கான அவரது பல சாதனைகளையும் பாராட்டினார். இலங்கையில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியின் காரணமாக மருந்துப் பொருட்கள் தட்டுப்பாடும் பெரும் பிரச்சினையாக மாறியுள்ளதையடுத்தே கிரிக்கெட் வீரர் சனத் ஜயசூரிய, மருத்துவ பொருட்களை

06

# காலி முகத்திடலில் இசைப் பிரியாவுக்கும் நீதிகோரி போராட்டம்



கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட மற்றும் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரி கொழும்பு காலி முகத்திடலில் தொடர்ந்தும் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

படுகொலை செய்யப்பட்ட பிரபல தமிழ் செய்தி வாசிப்பாளர் இசைப்பிரியாவுக்கு நீதி கோரி நேற்று முன்தினம் பதாகைகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

இலங்கை மக்களின் துயர் துடைக்கும்

# தமிழக முதல்வரின் நிவாரண நிதிக்கு 05 இலட்சம் ரூபா நிதி

## தேமுதிக தலைவர் விஜயகாந்த் அறிவிப்பு

**திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது**



இலங்கையில் வாழும் மக்களின் துயர் துடைக்கவும், அவர்களுக்கு உதவிடும் வகையிலும், தமிழக முதல்வரின் பொது நிவாரண நிதிக்கு தேமுதிக சார்பில் 05 இலட்சம் ரூபா நிவாரண நிதி வழங்கப்படுமென கட்சித் தலைவரும், பொதுச் செயலாளருமான விஜயகாந்த் அறிவித்துள்ளார்.

இது குறித்து விஜயகாந்த் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியதாவது : "இலங்கையில் நிலவி வரும் பொருளாதார நெருக்கடியால் பெற்றோல், டீசல், காய்கறி உள்ளிட்ட அனைத்து

06

# மண்சரிவு அபாயகர பகுதிகளில் 7,000 மக்கள்

## வேறிடத்தில் குடியமர்த்த நடவடிக்கை



மண்சரிவு அபாயகர பகுதிகளில் வாழும் சுமார் 7,000 பேரை பாதுகாப்பான இடங்களில் மீளக் குடியமர்த்தும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதாக தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் பருவ மழையை கருத்திற்கொண்டு மண்சரிவு அபாயம் உள்ள பகுதிகளில் வசிக்கும் மக்கள், மிகவும் அவதானமாக இருக்க வேண்டுமென நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம், பேராசிரியர் ஆசிரி கருணாவர்தன தெரிவித்தார்.

இதனிடையே, மண்சரிவு ஏற்படும் அபாயம் காணப்படும் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு பலத்த மழையுடனான வானிலை தொடர்பில் தெளிவுபடுத்துவதற்காக முறையான வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்படுவதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 249.07 | 260.33 |
| கனடியன் டொலர் | 273.95 | 285.05 |
| யூரோ | 373.83 | 383.45 |
| ஜப்பான் யென் | 2.7067 | 2.8119 |
| சிங்கப்பூர் டொலர் | 255.10 | 263.99 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 440.04 | 455.34 |
| சுவிஸ் பிராங்க் | 359.43 | 373.10 |
| அமெரிக்க டொலர் | 350.05 | 362.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹறின் டினார் | 901.77 | கட்டார் ரியால் | 92.56 |
| குவைத் டினார் | 1,108.57 | சவூதி ரியால் | 90.64 |
| ஓமான் ரியால் | 883.08 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 85.39 |

தினகரன்
THINAKARAN
35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321
சுபகிருது வருடம் சித்திரை மாதம் 22ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ஷவ்வால் பிறை 03

## குறள் தரும் சிந்தனை



வினைக்கண் வினைகெடல் ஓம்பல் வினைக்குறை
தீர்ந்தாரின் தீர்ந்தன்று உலகு

எந்தச் செயலில் ஈடுபட்டாலும் அதனை முழுமையாகச் செய்து முடிக்க வேண்டும். இல்லையேல் அரைக்கிணறு தாண்டிய கதையாகி விடும்.

# பொருளாதார நெருக்கடியை தணிப்பதில் ஒவ்வொருவரும் கொண்டுள்ள பொறுப்பு

தற்போது நாடு முகம் கொடுத்துள்ள பெருளாதார நெருக்கடி தொடர்பிலும், அதற்குத் தீர்வு காண முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்தும் நிதி மற்றும் நீதி அமைச்சர் அலி சப்ரி நேற்று (05.05.2022) பாராளுமன்றத்தில் தெளிவுபடுத்தியுள்ளார். இந்தத் தெளிவுபடுத்தலின் ஊடாக நாட்டுக்கு மக்களுக்கு பல முக்கிய செய்திகளை அவர் வழங்கியுள்ளார்.

தற்போது நாடு எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடிக்கு தனித்து நின்று தீர்வு காண முடியாது. இதன் நிமித்தம் கட்சி அரசியல் பேதங்களுக்கு அப்பால் சகலரும் ஒன்றுபட்டு செயற்படுவது இன்றியமையாததாகும். அவ்வாறான முயற்சியின் ஊடாகவே நாட்டையும் மக்களையும் இப்பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்டெடுக்கக் கூடியதாக இருக்கும்.

அதேநேரம் இப்பொருளாதார நெருக்கடி நாட்டில் தோற்றுவித்திருக்கும் நெருக்கடிகளை சிறுபிள்ளை கூட அறியும். ஆன போதிலும், மக்கள் பிரதிநிதிகள் சிலர் இப்பொருளாதார நெருக்கடிகளை உரிய முறையில் புரிந்து கொள்ளாதவர்களாக செயற்படுவதாகவே தெரிகின்றது.

இன்றைய சூழலில் நாடு எதிர்கொண்டுள்ள பிரதான நெருக்கடியாக பொருளாதார நெருக்கடி உள்ளது. இதனால் மக்கள் பலவித அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர். அப்படியிருந்தும் மக்கள் பிரதிநிதிகள் சிலர் இந்நாட்டு பிரஜைகளை பெரிதும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ள இப்பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு தேடுவதை விடவும் இப்பொருளாதார நெருக்கடியால் உருவாகியுள்ள அரசியல் பிரச்சினைக்கு தீர்வு தேடுவதற்கு முன்னுரிமை அளித்து செயற்படுகின்றனர்.

ஆனால் அரசியல் பிரச்சினைக்கு தீர்வு காணப்படுவதால் பொருளாதாரப் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்காது என்பதை இவர்கள் மறந்து விடுகின்றனர். ஆனால் பொருளாதாரப் பிரச்சினைக்குத்தான் அனைவரும் இணைந்து முதலில் தீர்வு தேட வேண்டும்.

மக்கள் மீது உண்மையான அன்பு, பற்று கொண்ட எந்தவொரு மக்கள் பிரதிநிதியும் இவ்வாறுதான் செயற்படுவர். அதனால் அரசியல் பிரச்சினையை விடவும் பொருளாதாரப் பிரச்சினைக்கு முன்னுரிமை அளிக்கப்படுவது அவசியம். அதுவே மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

இந்த நிலையில் அமைச்சர் அலி சப்ரி தமது உரையில், 'நாம் 2019 இல் அரசாங்கத்தை பொறுப்பெடுக்கும் போது 07 பில்லியன் அமெரிக்க டொலர்கள் கையிருப்பில் இருந்தது. அது தற்போது 50 மில்லியன் அமெரிக்க டொலராகக் காணப்படுகின்றது' என்று குறிப்பிட்டிருக்கின்றார்.

கடந்த 2020 ஆண்டு மார்ச் மாத நடுப்பகுதியில் உலகளாவிய பெருந்தொற்றாக உருவெடுத்த கொவிட் 19 தொற்று இலங்கையிலும் பரவத் தொடங்கியது. அதனை விரைவாகவும் வேகமாகவும் கட்டுப்படுத்தும் நோக்கில் கடந்த 2021 நவம்பர், டிசம்பர் வரையான சுமார் 20 மாதங்கள் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பொருளாதாரத்தில் பெரிதும் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன. இது மறைக்க முடியாத உண்மையாகும்.

இவ்வாறான சூழலில் நாட்டில் 50 மில்லியன் அமெரிக்க டொலருக்கும் குறைவாகவே கையிருப்பில் டொலர் இருக்கின்றது என்றால் மக்கள் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதை சொல்லித்தான் தெரிய வேண்டியதில்லை. இந்தச் சூழலில் ஒவ்வொரு பிரஜையும் மிகுந்த பொறுப்புடன் செயற்பட வேண்டும். குறிப்பாக எரிபொருள், எரிவாயு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை மிகவும் கவனமாகப் பயன்படுத்த வேண்டிய காலம் இது.

எரிவாயு, எரிபொருள் கிடைக்கப் பெறும் எனக் கருதி அவற்றை வீண் விரயம் செய்வதையும் அநாவசியமான பயணங்களை மேற்கொள்வதையும் தவிர்த்துக் கொள்வதிலும் கவனம் செலுத்த வேண்டும். அவற்றின் மூலம் எரிபொருள் வீரயமாவதைத் தவிர்த்துக் கொள்ளலாம். மேலும் உள்நாட்டுக்கு தேவையான அனைத்து உணவுப் பொருட்களும் விளையக் கூடிய வளமான பூமியாக இந்நாடு ஆரம்ப காலம் முதல் விளங்கி வருகின்றது. அதனால் இங்கு விளையக் கூடிய உணவுப் பொருட்களை இங்கேயே உற்பத்தி செய்து கொள்திலும் குடிமக்கள் கவனம் செலுத்த வேண்டும். இல்லாவிடில் உள்நாட்டில் விளையக்கூடிய உணவுப் பொருட்களை இறக்குமதி செய்யவும் டொலரை செலவிட வேண்டிய நிலைமையே ஏற்படும்.

இவ்வாறு தமது உரையின் ஊடாக நாட்டுக்கும் குடிக்களுக்கும் பல செய்திகளை வழங்கிய நிதியமைச்சர், இப்பொருளாதார நெருக்கடியை சமாளிக்கவென 03 அல்லது 04 பில்லியன் அமெரிக்க டொலரை சர்வதேசத்திடமிருந்து பெற எதிர்ப்பார்த்துள்ளதாகவும் இது தொடர்பிலான பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

ஆகவே மக்கள் பிரதிநிதிகள் உட்பட நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் இப்பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு தேட உழைப்பதை தம் பொறுப்பாகவும் கடமையாகவும் கருத வேண்டும். அதுவே இன்றைய அவசரத் தேவையாகும்.

editor.tkn@lakehouse.lk

# டொலர் பெறுமதிக்கேற்ப தோட்டத் தொழிலாளருக்கு நாளாந்தம் 1650 ரூபா சம்பளம் வழங்கப்பட வேண்டும்

## இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான் பேட்டி

'தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகளை பெற்றுக் கொடுக்க வரலாற்றுக் காலம் தொடக்கம் நாம் போராடியுள்ளோம்' என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் செந்தில் தொண்டமான் எமக்கு வழங்கிய பேட்டியின் போது தெரிவித்தார்.



**கேள்வி: தொழிலாளர்கள் விடயத்தில் உங்களின் கடமைகள் எவை என்பதை எமக்குத் தெளிவுபடுத்த முடியுமா?**

**பதில்:** தொழிலாளர்களுக்கு அவர்களுடைய தொழில் குறைகளை நிவர்த்தி செய்வதற்காக உலகம் பூராவும் மேற்கொள்ளப்படும் தொழிலாளர் போராட்ட செயற்பாட்டின் ஒரு அங்கமாகவே நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றோம். தொழிலாளர்களுக்கும் எஜமானர்களுக்கும் இடையேயான இடைவெளியை நிரப்பும் பொறிமுறையை உறுதிப்படுத்தவே நாம் செயற்பட்டு வருகின்றோம்.1865 ஆம் ஆண்டு தொடக்கம் அதாவது வெள்ளைக்கார ஏகாதிபத்தியவாதிகளின் காலம் தொடக்கமே இந்திய வழித்தோன்றல்களான தோட்டத் தொழிலாளர்களின் முக்கிய தொழிற்சங்கமாக நாம் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றோம்.

**கேள்வி: நாளொன்றுக்கு ஆயிரம் ரூபா பெற்றுக் கொள்வதே தொழிலாளர்களின் முக்கிய போராட்ட கோஷமாகும். அதன் வெற்றி எவ்வாறுள்ளது?**

**பதில்:** அரசாங்கம் அந்த சம்பளத்தை வர்த்தமானியில் வெளியிட்டிருந்தாலும் தோட்டக் கம்பனிகள் அந்த கட்டளையை நிறைவேற்றுவதில்லை. வர்த்தமானி அறிவித்தலுக்கு ஏற்ப செயல்படுமாறு நாம் கூறினாலும் அவர்கள் அதை கருத்தில் கொள்வதில்லை. அதற்காக நாம் அண்மையில் தொழில் திணைக்களத்துக்குச் சென்று அங்கீகரிக்கப்பட்டுள்ளன வர்த்தமானி அறிவித்தலுக்கு ஏற்ப செயல்படுமாறு கோரி போராட்டத்தை மேற்கொண்டோம். ஆயிரம் ரூபா சம்பளம் வேண்டும் என்று நாம் கோரிய போது டொலரின் பெறுமதி 200 ரூபாவாக இருந்தது. ஆனால் தற்போது டொலரின் பெறுமதி 300 ரூபாவுக்கும் அதிகமாகவுள்ளது. அதிகளவு தேயிலை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது. அதனால் தற்போது நாம் அதிகரித்த டொலருக்கு ஏற்ப நாளாந்த கூலியை 1650 ரூபாவாக பெற்றுத் தருமாறு வேண்டுகோள் விடுகின்றோம். தொழிற்திணைக்களம்தானேவெளியிட்டசுற்றுநிருபத்துக்கு ஏற்ப செயல்படாததால் அதற்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்க எதிர்பார்த்துள்ளோம்.

**கேள்வி: தோட்ட மக்களின் சமூக வாழ்க்கையை மேம்படுத்த நீங்கள் முன்வைக்கும் யோசனைகள் எவை?**

**பதில்:** 1865 ஆம் ஆண்டுத் தொடக்கம் தோட்டங்களில் வேலை செய்து வந்துள்ளோம். தோட்ட மக்களின் பிள்ளைகள் தோட்டத்திலேயே வேலை செய்ய வேண்டும் என்பதை நாம் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் அந்நிய செலாவணியை பெற்றுக் கொடுக்கும் தேயிலை உற்பத்தியை நிறுத்த முடியாது.தோட்டத்துறைக்கு நவீன இயந்திரங்களை அறிமுகப்படுத்தி அதன் பலனை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். தோட்ட இளைஞர், யுவதிகள் எதிர்காலத்தில் அதிலிருந்து விடுபட்டு வேலைவாய்ப்பினை பெறுவதற்காக உயர்கல்வியை பெற்றுக் கொடுத்து , பல்கலைக்கழகத்துக்கு அவர்களை அனுப்பி அவர்களது வாழ்வை மேம்படுத்துவதே எமது எதிர்பார்ப்பாகும்.

> 'தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகளை பெற்றுக் கொடுக்க வரலாற்றுக் காலம் தொடக்கம் இ.தொ.கா போராடியுள்ளது'

**கேள்வி: தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமை குறித்த உங்களது கருத்து என்ன?**

**பதில்:** நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமை இரண்டு விதமானது. ஒன்று இயற்கையாக ஏற்பட்ட பிரச்சினை. மற்றையது மனிதனால் ஏற்படுத்தப்பட்ட பிரச்சினை. இயற்கையாக ஏற்பட்ட பிரச்சினையாக நாம் அண்மையில் முகங்கொடுத்த கொவிட் தொற்றை குறிப்பிடலாம். இரண்டாவதாக ஏற்படுத்தப்பட்ட பிரச்சினைதான் நாம் முகம் கொடுத்துள்ள கடன்சுமை. அது 2019 ஆம் ஆண்டிற்கு பின்னர் பெறப்பட்ட கடன் மாத்திரமல்ல, அதற்கு முன்னரே 1980 களில் இருந்து பெற்ற கடனும் படிப்படியாக கூடி தற்போது பாரிய கடன் சுமையாக மாறியுள்ளது. ஒரே தடவையில் நாம் 50 பில்லியன் கடனை பெறவில்லை அல்லவா? அது பகுதி பகுதியாக அதிகரித்துத்தான் இன்று உயர்ந்துள்ளது. ஒவ்வொருவரின் ஆட்சியின் போதும் கடனை திரும்ப செலுத்த முடியும் என்று எண்ணியே கடன் வாங்குகிறார்கள். தவணையை சரியாக செலுத்துவதற்காகத்தான் கடன் பெறுகின்றோம். ஆகவே கடனைச் செலுத்துவதற்கு அரசாங்கத்திற்கு திட்டம் ஒன்று இருக்க வேண்டும்.

பாலைவனத்தால் சூழப்பட்ட நாடுகளில் கூட பொருளாதாரம் வளர்ச்சியடைந்துள்ளது. நாட்டை சூழ வளங்கள் நிறைந்த கடல் உள்ளது. எந்தவிதமான பயிரும் விளையக் கூடிய மண் வளம் உள்ளது. நல்ல நீர்வளமும் காணப்படுகின்றது. கனிம வளங்கள் உள்ளன. பெறுமதிவாய்ந்த இரத்தினங்களும் எம் நாட்டில் உள்ளன. என்ன வளம் எம்மிடம் இல்லை? இவ்வளவு வளங்கள் உள்ள எம்மால் கடனை செலுத்த முடியாமல் போயுள்ளது. முதலாவது அந்நிய செலாவணி வருமானம் உல்லாசப் பயணத்துறை மூலமே கிடைக்கின்றது. இரண்டாவது வருமானம் வெளிநாட்டு பணியாளர்களிடம் இருந்து கிடைக்கின்றது. அந்நிய செலாவணி கிடைக்கும் இன்னொரு வழியாக தேயிலை, இறப்பர் ,தென்னை ஏற்றுமதி முன்னணியில் உள்ளது. நாட்டின் தற்போதைய நிலை மிகவும் கவலைக்குரியதாக உள்ளது. பிரச்சினைகளில் அநேனேகமானவை நாட்டின் கடன் சுமை காரணமாகவே ஏற்பட்டுள்ளது.

**கேள்வி: அதற்காக நாம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் எவை?**

**பதில்:** கொவிட் தொற்று ஏற்பட்ட வேளையில் வெளிநாட்டில் பணிபுரிபவர்களின் வருமானம் நின்று விடும் என்பதும், நாட்டிற்கு திரும்பி விடுவார்கள் என்பதையும் கருத்தில் கொண்டு செயல்பட்டிருருக்க வேண்டும். அவ்வேளையில் தேயிலை, இறப்பர் ,தேங்காய் என்பவைதான் எமக்கு அந்நிய செலாவணியை பெற்றுத் தரக் கூடியது என்பதையும் புரிந்து கொண்டிருக்க வேண்டும். இந்தப் பயிர்களுக்கான உரத்தை பெற்றுக் கொடுக்காதது பெரும் தவறாகும். இரசாயன உரங்களை நிறுத்த நடவடிக்கை எடுத்தது தவறு என தற்போது கூறுகின்றார்கள். எம்மிடம் மேலதிகமாக டொலர் கையிருப்பு இருந்திருந்தால் இவ்வாறான பரிசோதனைகளை செய்து பார்க்கலாம்.

பிரச்சினை ஏற்பட்ட வேளையிலேயே நாம் சர்வதேச நிதியத்திடம் சென்றிருந்தால் தீர்வு கண்டு இருக்கலாம். எமது கையிருப்பை கணக்கில் கொண்டு எதிர்காலத்துக்கு தேவையான நடவடிக்கையை மேற்கொண்டிருக்கலாம். மேலும் அமைச்சரவையை கலைத்து புதிதாக அனுபவமற்ற புதிய அமைச்சரவையை நியமித்ததை நான் விரும்பவில்லை. முன்னர் இருந்தவர்கள் பல வருடகால அரசியல் அனுபவம் உள்ளவர்கள். அவர்களாலேயே முடியாத போது புதியவர்கள் வந்து எவ்வாறு வேலை செய்வது? நான் அரசாங்கத்துக்கு முன்வைக்கும் யோசனை என்னவென்றால் தேசியப்பட்டியலில் நியமிக்கப்பட்டவர்களில் அரைவாசிக்கு அதிகமானோரை நீக்கி அதற்கு பதிலாக பல துறைகளில் நிபுணத்துவம் வாய்ந்தவர்களுக்கு அமைச்சர் பதவியை வழங்குங்கள் என்று கூறுகின்றேன்.

புத்தி கருணாரத்ன
தமிழில் வீ.ஆர்.வயலட்

# இலங்கை-லிதுவேனியா இருதரப்பு நட்புறவை வலுப்படுத்தும் சந்திப்பு

இளைஞர் பாராளுமன்றத்தின் வெளிவிவகார பிரதி அமைச்சர் அஹ்மத் சாதிக் இலங்கைக்கான லிதுவேனியாவின் தூதுவர் திரு.ஜூலியஸ் பிரணவிசியஸ் அவர்களை சந்தித்தார்.

இளைஞர் பாராளுமன்றத்தின் வெளிவிவகார பிரதி அமைச்சர் அஹ்மத் சாதிக், இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் முப்தி முயீன் ஆகியோர் அண்மையில் இலங்கைக்கான லிதுவேனியாவின் தூதுவர் ஜூலியஸ் பிரணவிசியஸ் மற்றும் இலங்கைக்கான லிதுவேனியாவின் பணிப்பாளர் கான்சன கொடித்துவக்கு ஆகியோரைச் சந்தித்தனர்.

இச்சந்திப்பில் இலங்கை இளைஞர்களுக்கான உயர்கல்வி, விளையாட்டு, சிறு முயற்சியாண்மை மற்றும் தலைமைத்துவத் திறன்கள் விருத்திக்கான வாய்ப்புகள் பற்றி கலந்துரையாடப்பட்டது.

லிதுவேனியாவின் அரசியல் துறையில் இளைஞர்கள் முக்கிய பங்காற்றுவதாக இக்கலந்துரையாடலின் போது, தூதுவர் குறிப்பிட்டிருந்தார்.



லிதுவேனியா மற்றும் இலங்கைக்கான இராஜதந்திர உறவானது 25 வருடங்களாக சிறந்த முறையில் பேணப்பட்டு வருவதாகவும் அவர் இச்சந்திப்பின் போது குறிப்பிட்டிருந்தார்.

இக்கலந்துரையாடலின் பின்னர், இரு நாடுகளினதும் உறவுகளை இளைஞர்களின் ஊடாக மேலும் வலுப்படுத்த சிறந்த நடவடிக்கைகள் எதிர்காலங்களில் எடுக்கப்படும் என்றும் அவர்கள் குறிப்பிடப்பிட்டிருந்தனர்.

றிசாத் ஏ. காதர்
(ஒலுவில் மத்திய விசேட நிருபர்)

# வெற்றிகரமாக ஹேக்கத்தான் சவாலை நிறைவேற்றியுள்ள AIA இன்ஷூரன்ஸ்

AIA இன்ஷூரன்ஸ் காப்புறுதித் துறையில் முதன் முறையாக 'AIA ஸ்ரீலங்கா ஹேக்கத்தான் சவால் 2021' இனை வெற்றிகரமாக நடத்தியிருந்தது. 'ஹேக்கத்தான் சவால் 2021' கடந்த வருடம் செப்டெம்பர் 19 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு இலங்கை மற்றும் சர்வதேச நிதியியல் தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் காப்புறுதித் தொழில்நுட்ப நிறுவனங்களின் மகத்தான வெற்றிக்கு இடமளிக்கும் வகையில் 2022 மார்ச் 09 ஆம் திகதி நிறைவு செய்யப்பட்டிருந்தது.

ஹேக்கத்தான் நிகழ்வானது AIA இனால் ஏற்பாடு செய்யப்பட்டு நடாத்தப்பட்டிருந்ததுடன், ASEAN நிதியியல் புத்தாக்க வலையமைப்பு ((AFIN), சமூக விளைவு முயற்சியானது சிங்கப்பூர் நாணய ஆணையம், சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம், (IFC), ASEAN வங்கியாளர்கள் சங்கம் ஆகியவற்றுடனான கூட்டாண்மையுடன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மேலும் இந்த நிகழ்வானது நிதியியல் தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் நிதியியல் நிறுவனங்களுக்கு இடையிலான ஒத்துழைப்பிற்காக AFIN, உலகின் முதலாவது குறுக்கு எல்லை, திறந்த கட்டமைப்பு API சந்தை மற்றும் சாண்ட்பொக்ஸ் தளம் ஆகியவற்றின் முயற்சியுடன் API பரிமாற்று தளத்தில் நடாத்தப்பட்டிருந்தது. IFC உடன் இணைந்து APIX தளத்தில் ஹேக்கத்தான் சவாலை ஆரம்பிக்கும் இலங்கையின் முதலாவது நிறுவனமாக AIA திகழ்கின்றது.

ஹேக்கத்தான் சவாலின் ஐந்து மாதப் பயணத்தின் பின்னர் இரண்டு வெற்றியாளர்கள் 5000 அமெரிக்க டொலர் பணப் பரிசினை வெற்றி பெற்றிருந்ததுடன், இந்த நிறுவனங்கள் AIA இன் தொழில்நுட்பம், டிஜிட்டல் மற்றும் பகுப்பாய்வு பயணத்தில் ஒரு அங்கமாக இருப்பதன் மூலம் காப்புறுதித் துறையினை மாற்றியமைக்கும் தீர்வுகளுக்கு முன்னோடியாகுவதற்கான வாய்ப்பினையும் பெற்றுக் கொள்ளும். AIA பிரதான நிறைவேற்று அதிகாரி நிகில் அத்வானி கருத்துத் தெரிவிக்கையில், 'டிஜிட்டல் மாற்றமானது AIA இற்கான அத்தியவசிய முன்னுரிமைக்குரிய விடயமொன்றாகும். எங்கள் வாடிக்கையாளர்களுக்கு எங்களின் வியாபாரத்தை மாற்றுவதற்கான தொழில்நுட்பத் தரத்தினை மேம்படுத்துவதற்காக நாங்கள் மிகவும் அர்ப்பணிப்புடன் பணியாற்றுகின்றோம்" எனக் குறிப்பிட்டார்.




பிரதான தொழில்நுட்ப அதிகாரி உமேஷி டீ பொன்சேகா கருத்துத் தெரிவிக்கையில், 'தற்போதைய மற்றும் எதிர்காலச் சவால்களுக்கு முகங்கொடுத்துத் தொடர்ச்சியாக நிறுவனத்திற்கு உதவக் கூடிய வகையில் மிகவும் உறுதியான தீர்வுகளைக் கட்டியெழுப்புவதற்கு இப்போட்டியாளர்களாக நுழைந்துள்ள நிறுவனங்களின் திறன்களினால் நாங்கள் மிகவும் ஈர்க்கப்பட்டுள்ளோம்" என்றார்.

இலங்கை மற்றும் மாலைதீவிற்கான AIA இன் நாட்டிற்கான முகாமையாளர் லீசா கெஷ்னர் கருத்துத் தெரிவிக்கையில், 'நிதியியல் சேவை உள்ளடங்கலாக டிஜிட்டல் மயமாக்கலை துரிதப்படுத்துவதன் மூலமாக நிலைபேறான மற்றும் உள்ளான வளர்ச்சியினை எய்துவது அவசியமானதாகும். எவ்வாறு டிஜிட்டல் தொழில்நுட்பம் கோவிட் 19 பெருந்தொற்றுக்காலத்தில்வியாபாரம்ஒன்றைத் தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதில் உதவியிருந்தது என்பதை எமது அனுபவத்தின் மூலமாக நாம் கண்ணுற்றிருந்தோம்" என்றார்.

சிங்கப்பூர் நாணய ஆணையத்தின் பிரதான நிதியியல் தொழில்நுட்ப அதிகாரி சொபெண்டு மொஹாந்தி கருத்துத் தெரிவிக்கையில், 'இந்த சவாலானது புதுமைக்கான மிகச்சிறந்த வழியாகவும், குறுகிய காலத்தில் சந்தையில் வணிக அறிமுகத்திற்கான தீர்வுகளை வழங்குவதையும் நிரூபித்துள்ளது" என்றார்.

# இலங்கைத் தமிழ் மக்கள் நலனில் அக்கறை கொண்டு பணியாற்றிய சமூக செயற்பாட்டாளர் ஐ.தி. சம்பந்தன்

இலங்கையின் மூத்த தொழிற்சங்கவாதியும், எழுத்தாளரும், சமூக சேவகருமான ஐ. தி. சம்பந்தன் நேற்றுமுன்தினம் லண்டனில் காலமானார். 1962 களில் யாழ்ப்பாணத்தில் 'சிற்பி'யை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த 'கலைச்செல்வி' என்ற சஞ்சிகையில் இணைந்து கடமை புரிந்த அமரர் சம்பந்தன், கலை, கலாசாரம், இலக்கியம், சமூகம், அரசியல் போன்ற பல்வேறுபட்ட விடயங்களைத் தாங்கிவரும் சர்வதேச தமிழ்ச் சஞ்சிகையான 'லண்டன் சுடரொளி'யின் பிரதம ஆசிரியராகச் செயற்பட்டவர்.

யாழ் காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட ஐ.தி. சம்பந்தன் தமிழ் தேசிய கூட்டமைப்பு லண்டன் கிளை ஸ்தாபகர். அவருக்கு வயது 86. தமிழ் மக்கள் மத்தியில் பிரபல்யம் பெற்று விளங்கியவர் அவர். எழுத்தாளரும், சமூக செயற்பாட்டாளருமாக ஐ.தி.சம்பந்தன் நன்கு அறியப்பட்டவர்.

தமிழ் அகதிகளின் நலன்கள் மீது அக்கறை கொண்டு பெரும் பணியாற்றியவர் அவர். அமரர் ஐ. தி. சம்பந்தன் தமிழர்கள் மத்தியில் மிகவும் பிரபலமானவர். உலகெங்கும் பரந்து வாழும் தமிழரின் நெஞ்சங்களில் அன்பராயும் தொண்டராயும் நிறைந்து நிற்பவர். அவர் நாடறிந்த எழுத்தாளராகத் திகழ்ந்தவர்.

1967 ஜனவரியில் இருந்து கொழும்பில் உள்ள கடற்றொழில் ஆராய்ச்சி நிலையத்தில் அறிவியல் ஆய்வாளராகப் பணியாற்றியவர். கதிர்காமத் தொண்டர் சபை, விவேகானந்த சபை, கொம்பனித் தெரு சைவ முன்னேற்றச் சங்கம், அகில இலங்கை இந்து மாமன்றம், திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபை, கொழும்பு இந்து வாலிபர் சங்கம், சைவமங்கையர் கழகம், கொழும்புத் தமிழச் சங்கம், வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் என எங்கும் ஐ. தி. சம்பந்தன் பணியாற்றியவர்.

1971இன் பிற்பகுதியில் கொழும்பில் இலங்கை இந்து இளைஞர் பேரவையை ஆரம்பிப்பதில் ஐ. தி. சம்பந்தனின் பங்கு அளப்பரியது. 1971 இல் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் ஆட்சி தொடங்கிய போது 1972 இல் இலங்கை குடியரசாகியது. அக்காலத்தில் குமாரசூரியர், அஞ்சல் மற்றும் தொலைத்தொடர்பு அமைச்சராக இருந்தார். அரச அலுவலகங்கள் தோறும் மக்கள் குழுக்கள் உருவாகின. அவை அரசின் கண்காணிப்புக் குழுக்களாயின.

இதே பாணியில் இந்துக் கோயில்களில் வழிபாட்டாளர் குழுக்களை அமைக்க குமாரசூரியர் விரும்பினார்.

ஆட்சிக் குழு உறுப்பினராக ஐ. தி. சம்பந்தன் அங்கிருந்தார்.

ஐ. தி. சம்பந்தனின் சைவத் தமிழ்க் கொள்கைகளும் அரசியல் கொள்கைகளும் உறுதியானவை. ஆவணங்கள் அடுக்கிய கைப்பையைத் தூக்கிக் கொள்வார். வீட்டை விட்டு இறங்கி வெளியே வருவார். நாள் முழுவதும் அலைவார். சைவத்துக்காக அலைவார், தமிழுக்காக அலைவார், அரசியலுக்காக அலைவார்.



## லண்டனில் நேற்றுமுன்தினம் காலமானார்

நாளிதழ்களுக்கு எழுதுவார், வானொலியில் பேசுவார், கூட்டங்களில் உரையாற்றுவார், சமூக அமைப்புகளில் பங்கேற்பார். ஒத்த கருத்துடையோரிடையே உரசல்கள், தன்முனைப்பு முரண்கள் வராது காப்பார். எல்லோரையும் எவற்றையும் சமாளிக்க அறிவுரை வழங்குவார். அக்காலத்தில் தமிழருக்கான இரு பெரும் அரசியல் கட்சிகளிடையே இருந்த முரண் நிலை சமூக அமைப்புகளுள்ளும் பரவியது. இரு சாராரையும் சமாளித்துப் பணிகளை முன்னெடுத்தவர் ஐ. தி. சம்பந்தன்.

1976 டிசம்பரில், கவிஞர் காசி ஆனந்தன் உள்ளிட்ட நூற்றுக்கும் கூடுதலானோரை சிறைகளில் இருந்து சிறிமாவோ அரசு விடுவித்தது. பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் கவிஞர் காசி ஆனந்தனுக்கும் இளைஞர்களுக்கும் வரவேற்பு அளித்த நிகழ்ச்சியின் தொடக்கப் புள்ளி ஐ. தி. சம்பந்தன் ஆவார்.

1977 இல் தமிழருக்கு எதிரான இனக்கலவரம் இடம்பெற்றது. பம்பலப்பிட்டியில் ஒரு நண்பர் வீட்டில் ஐ. தி. சம்பந்தன் அழைப்பில் அமைந்த கூட்டத்திலேயே தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தோன்றியது. 1977 இனக் கலவரத்தை அடுத்து குடும்பத்துடன் யாழ்ப்பாணம் வந்து ஐ. தி. சம்பந்தன் கந்தர்மடத்தில் குடியேறினார்.

1979 ஆம் ஆண்டு முற்பகுதியில் இந்தியாவில் வாரணாசி என்கின்ற காசியில் இந்து மாநாடு நடைபெற்றது. இந்து மாநாட்டுக்கு சென்ற குழுவில் ஐ. தி. சம்பந்தன் இருந்தார்.

1979 பிற்பகுதியில் கருத்தியலாளர் பலரை பொலிசார் தடுப்பு முகாமுக்கு அழைத்துச் சென்று, 100 நாள்கள் வரை தடுத்து வைத்து விசாரித்தனர். ஐ. தி. சம்பந்தனும் கைதாகி, யாழ்ப்பாணம் கச்சேரித் தடுப்பு முகாமுக்குள் இருந்தார். ஈழவேந்தனும் அங்கு இருந்தார். ஐம்பதுக்கும் கூடுதலானோர் அங்கிருந்தனர்.

1985 இல் ஐ. தி. சம்பந்தன் உயிர்ப் பாதுகாப்பு கருதி சென்னைக்குச் சென்றார். அண்ணா நகரில் வீடு எடுத்துத் தங்கினார். பின்னர் குடும்பத்தாரும் சென்றனர். அக்காலத்தில் அவருக்குக் கடுமையான இருதய நோய் பீடித்தது. வேலூர் மருத்துவமனைக்குச் சென்று மருத்துவம் செய்தார். அவரிடம் அப்போது செலவுக்குப் பணம் போதியளவு இருக்கவில்லை.

அக்காலத்தில் அவர் மனக்குழப்பத்தில் இருந்தார். தனது பிரதேசம் மீதான ஏக்கம், குடும்பச் சுமைகள், வருவாய் குறைவு, பொதுப் பணிகள் யாவும் அவரின் குழப்பங்களுக்குக் காரணம் ஆகும். வடக்கில் தமிழ் இயக்கங்கள் தொடர்ச்சியாக மோதிக் கொண்டு ஒருவரை ஒருவர் கொலை செய்து வந்தனர். சென்னையிலும் கொலைகள் தொடர்ந்தன. அவரால் இத்துயரங்களை ஒரே நேரத்தில் தாங்க முடியவில்லை. 1986 இல் ஐரோப்பாவில் டென்மார்க் நாட்டில் உலக சமாதான மாநாடு நடைபெற்றது. அப்பொழுது சென்னையில் இருந்த ஐ. தி. சம்பந்தன் மாநாட்டுக்குச் செல்வதற்குத் தெரிவானார். 1987 இற்குப் பின்பு கொழும்பு சென்ற ஐ. தி. சம்பந்தன், யாழ்ப்பாணத்தில் நிலை கொண்டிருந்த இந்திய அமைதிப் படையின் தேடுதலில் இருந்து தப்பினார். 1990 இல் மொறிசியஸ் வழியாக லண்டன் பயணமானார்.

2005 இல் லண்டனில் இருந்து சென்னைக்கு வந்தார். 2014 இல் யாழ்ப்பாணம் வந்தார். 2016 ஆவணியில் யாழ்ப்பாணத்தில் ஐ. தி. சம்பந்தனின் 80ஆவது பிறந்தநாள் விழா நடைபெற்றது. காலமாகும் போது அவருக்கு வயது 86. அன்னாரின் மறைவுக்கு பலரும் அனுதாபம் தெரிவித்துள்ளனர்.

சுப்பிரமணியம் மகாலிங்கம்...
லண்டன்

# ரஷ்ய- உக்ரைன் போருக்குப் பின்னர் ஐரோப்பாவுடனான நட்புறவை மீண்டும் வலுப்படுத்தியுள்ள மோடியின் விஜயம்

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் ஐரோப்பிய விஜயம் பெரும் வெற்றிகளை தேடித் தந்துள்ளது. பிரதமர் நரேந்திர மோடி கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு ஜெர்மனியின் பெர்லினுக்கு புறப்பட்டார். அவர் முக்கியமான மூன்று நாடுகளுக்கான ஐரோப்பிய பயணத்தைத் தொடங்கினார். அவ்விஜயத்தின் போது அவர் உலகத் தலைவர்களை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

ஜெர்மன் ஜனாதிபதி ஓலாஃப் ஸ்கோல்ஸ், டென்மார்க் பிரதமர் மெட்டே ஃபிரடெரிக்சன், பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மேக்ரான் ஆகியோரை அவர் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். ஜேர்மனியில் பல முக்கிய நிகழ்வுகளில் மோடி கலந்து கொண்டார். கோவிட் தொற்றுக்குப் பிந்திய பொருளாதார மீட்பு தொடர்பான திட்டங்களிலேயே அவர் அதிகம் பங்கேற்றார்.

ஜெர்மனியின் நிகழ்ச்சி நிரலில் கோவிட்டுக்கு பிந்திய பொருளாதாரம் எப்படி இருந்தது என்பது பற்றி பிரதமர் நரேந்திர மோடி ஐரோப்பிய பிரதமர்களுடன் ஆலோசனையில் ஈடுபட்டார்.

பிரதமர் நரேந்திர மோடியின் ஜெர்மனி, டென்மார்க், பிரான்ஸ் ஆகியவற்றுக்கான சுற்றுப்பயணம் மிகுந்த பயனுள்ளதாக அமைந்ததாக இந்திய அரச வட்டாரங்கள் தெரிவித்தன.

கொரோனா பரவல் காரணமாக கடந்த இரண்டு ஆண்டுகளாக வெளிநாட்டு சுற்றுப் பயணங்களைத் தவிர்த்து வந்தார் பிரதமர் மோடி. கொரோனா பரவல் சற்று குறைந்ததும், கடந்த ஆண்டு மார்ச் மாதம் அண்டை நாடான பங்களாதேஷ் சென்றார். அதன் பின்னர் கடந்த செப்டம்பரில் ஐ.நா சபை கூட்டத்தில் பங்கேற்பதற்காக அமெரிக்கா சென்றார். கடந்த ஒக்டோபரில் பிரிட்டன், இத்தாலி நாடுகளுக்கு சென்றார். அதற்குப் பின்னர் தற்போதுதான் மீண்டும் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளார். கடந்த திங்களன்று அவர் ஜெர்மனி தலைநகர் பெர்லின் சென்றடைந்தார். பெர்லினில் இந்தியப் பிரதமர் மோடிக்கு செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. மேலும், அங்குள்ள இந்திய வம்சாவளியினர் பிரதமர் மோடிக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர்.



அவ்விஜயத்தின் பின்னர் டென்மார்க்கில் நோர்டிக் மாநாட்டில் பங்கே ற்றார். இந்த மாநாட்டில் இந்திய பிரதமர் மோடியுடன் டென்மார்க், ஐஸ்லாந்து, பின்லாந்து, சுவீடன் மற்றும் நோர்வே ஆகிய நாடுகளின் பிரதமர்களும் பங்கேற்றனர். இந்தியா திரும்பும் வழியில், பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மேக்ரானை சந்தித்து, தேர்தலில் வெற்றி பெற்றதற்கு வாழ்த்துத் தெரிவித்தார். இரு நாட்டு உறவு குறித்தும் பேசினார்.



உக்ரைன்_ ரஷ்யா போரில் ரஷ்யாவை இந்தியா எதிர்க்காத நிலையில், ஐரோப்பிய நாடுகள் இந்தியா மீது அதிருப்தியில் இருந்ததாக கூறப்பட்டது. இந்நிலையில் பிரதமர் மோடியின் இந்தப் பயணம் முக்கியத்துவம் பெற்றுள்ளது.ஐரோப்பிய நாடுகள் கொண்டிருந்த கசப்புணர்வுகளை மோடியின் விஜயம் அகற்றியுள்ளதாக சர்வதேச நோக்கர்கள் தெரிவித்துள்ளனர்.

## இந்தியாவுக்கு பயனளிக்கும் வர்த்தக ஒப்பந்தங்கள் கைச்சாத்து

இப்பயணத்தின் போது டென்மார்க் ராணி மார்க்ரெட் II உடன் பிரதமர் மோடி சந்திப்பு நடத்தினார். இவர்கள் ஒன்றாக விருந்துபசாரத்தில் பங்கேற்றனர். அதேபோல் ஜெர்மனியிலும் பிரதமர் மோடிக்கு சிறப்பான வரவேற்பு கொடுக்கப்பட்டது. முதல் பயணமாக ஜெர்மனி நாட்டிற்குச் சென்றிருந்தார். பிரதமர் மோடி ஜெர்மனி ஜனாதிபதி ஓலாஃப் ஸ்கோல்ஸுடன் நடத்திய சந்திப்பு குறித்து வெளியான அறிக்கையில், "இந்த சந்திப்பு இருதரப்பு ஒத்துழைப்பின் முக்கிய பகுதியாக இருக்கும். இரு நாடுகளுக்கும் இடையேயான கூட்டணி, பிராந்திய மற்றும் சர்வதேச ஒத்துழைப்பை இது உள்ளடக்கியது" என்று கூறப்பட்டுள்ளது.

இரு தலைவர்களின் சந்திப்பிற்குப் பின்னர், ஒரு உயர்மட்ட வட்ட மேஜை மாநாடு நடைபெற்றது. அதில் பிரதமர் மோடி மற்றும் ஜனாதிபதி ஸ்கோல்ஸ் இரு நாடுகளைச் சேர்ந்த உயர்மட்ட வணிகத் தலைவர்களுடன் ஆலோசனை நடத்தினர். இந்த மாநாட்டில் இரு தரப்பு அமைச்சர்கள் பலரும் கலந்து கொண்டனர். இந்தியக் குழுவில் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர், தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.



ஜெர்மனி ஜனாதிபதியாக கடந்த 2021 டிசம்பரில் பதவியேற்ற பின்னர், ஷோல்ஸை பிரதமர் மோடி சந்திப்பது இதுவே முதல்முறையாகும். இந்த மாநாட்டிற்குப் பின்னர், இரு நாடுகளுக்கும் இடையே பசுமை மற்றும் நிலையான எரிசக்தி தொடர்பான ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன. இரு நாடுகளுக்கும் இடையே மொத்தம் 9 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

## ஜேர்மனி, டென்மார்க், பிரான்ஸ் நாடுகளில் மகத்தான வரவேற்பு

அதன் பின்னர் பேசிய பிரதமர் மோடி, உக்ரைன் மற்றும் ரஷ்யா இடையே அமைதி நிலவ வேண்டும் என்றும், இந்தியா என்றென்றும் அமைதியின் பக்கமே நிற்கிறது என்றும் கூறினார். ரஷ்யா உக்ரைன் போரில் எந்த நாடும் வெற்றி பெறாது என்று கூறிய பிரதமர் மோடி, பேச்சுவார்த்தை மூலம் அமைதியான முறையில் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்று அழைப்பு விடுத்தார். பிரதமர் மோடி பேசுகையில் "இப்போது நடைபெறும் புவிசார் அரசியல் சம்பவங்கள் உலக அமைதி மற்றும் ஸ்திரத்தன்மை ஆபத்தான நிலையில் இருப்பதையே காட்டுகிறது. இப்போது அனைத்து நாடுகளும் எப்படி ஒன்றோடொன்று இணைக்கப்பட்டுள்ளன என்பதைத்தான் இதுபோன்ற நிகழ்வுகள் காட்டுகின்றன. உக்ரைன் நெருக்கடியைத் தீர்க்க பேச்சுவார்த்தை மட்டுமே ஒரே வழி என்று நாங்கள் கூறியுள்ளோம். இந்த போரில் நிச்சயம் யாரும் வெற்றி பெற மாட்டார்கள்" என்று தெரிவித்தார்.

ஜெர்மனி ஜனாதிபதி ஷோல்ஸ் கூறுகையில் "உக்ரைன் மீதான தாக்குதலின் மூலம், ரஷ்யா சர்வதேச சட்டத்தின் அடிப்படைக் கொள்கைகளை மீறியுள்ளது. உக்ரைனில் பொதுமக்கள் மீதான மிருகத்தனமான தாக்குதல் மூலம் ஐ.நா. சாசனத்தின் அடிப்படைக் கொள்கைகளை ரஷ்யா மீறியுள்ளது தெரிகிறது. விளாடிமிர் புட்டின், இந்த முட்டாள்தனமான போர் நடவடிக்கையை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும். உக்ரைனில் இருக்கும் ரஷ்யப் படைகளை உடனடியாக திரும்பப் பெற வேண்டும்" என்றார்.




பிரதமர் நரேந்திர மோடி ஜெர்மனியில் இருந்து டென்மார்க் தலைநகர் கோபன்ஹேகன் சென்றடைந்தார். மோடியை விமான நிலையத்திற்கே சென்று டென்மார்க் பிரதமர் மெட்டே ஃபிரடெரிக்சன் வரவேற்றார். இதையடுத்து இரு நாட்டுத் தலைவர்களும் டென்மார்க் பிரதமர் இல்லமான மரியன்போர்க்கில் பேச்சுவார்த்தை நடத்தினர். இதில் இரு நாட்டு உறவுகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. இரு நாட்டுத் தலைவர்களும் நடந்து கொண்டே ஆலோசனையில் ஈடுபடும் வீடியோவும் இணையத்தில் வெளியாகி உள்ளது. (07ஆம் பக்கம் பார்க்க)

# சீனன்கோட்டை சமூக சேவையாளர் மொஹமட் நஜ்மி காலமானார்

பேருவளை சீனன்கோட்டையைச் சேர்ந்த மொஹமட் ஹுஸைன் மொஹமட் நஜ்மி (வயது 44) நோன்புப் பெருநாள் தினத்தன்று (03) காலமானார். இவர் சீனன்கோட்டையைச் சேர்ந்த ஹுஸைன் அவர்களின் மகனும் முன்னாள் பேருவளை தினகரன் குறூப் நிருபர் மொஹமட் இஸ்மத்தின் மருமகனும் ஆவார். அல் ஹுமைஸரா தேசிய பாடசாலையின் பழைய மாணவரான இவர், இப்பாடசாலையின் SDS உறுப்பினராகவும் சீனன்கோட்டை ( உ/த ) விஞ்ஞானப்பிரிவின் உறுப்பினராகவும் மற்றும் சீனன்கோட்டை பிரதேசத்திலுள்ள சமூக சேவை அமைப்புகளிலும் பணியாற்றியுள்ளார். இறுதி வரை தனது சமூகத்திற்காக பணியாற்றிய இவர் ஒரு மாணிக்க வியாபாரியுமாவார்.

பெருநாள் தினத்தன்று காலை பெருநாள் தொழுகைக்காக பள்ளிவாசலுக்கு சென்று விட்டு வீடு வந்த இவர், தனது குழந்தைகள் சகிதம் குடும்பத்தாரை சந்திக்கச் சென்று வீடு திரும்பினார். வரும் வழியில் சில நண்பர்களையும் சந்தித்து விட்டு வந்துள்ளார். வீடு வந்த அவர் ஒரு சில நேரத்தில் திடீரென நோய் வாய்ப்பட்டு வீட்டில் வைத்தே திடீர் மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்துள்ளார்.



மொஹமட் நஜ்மியின் மரணச் செய்தி கேள்விப்பட்டதும் அன்னாரின் வீட்டுக்கு அன்பர்கள் திரண்டு வந்து அனுதாபம் தெரிவித்தனர். சில நண்பர்கள் துயரம் தாங்காது கதறி அழுதனர்.

இவரது மரணம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த ரியாஸ் மஸுத், "காலமான மொஹமட் நஜ்மியை இவ்வூரின் சொத்தாக நான் பார்க்கிறேன். நூற்றுக்கணக்கான மாணவர்களின் கல்விக்காக இரவு பகல் பாராது பாடுபட்டார். அவர் பிரிந்தாலும் ஒவ்வொருவரின் உள்ளத்திலும் வாழ்கிறார்" என்று தெரிவித்தார். மூன்று குழந்தைகளின் தந்தையான அன்னாரின் ஜனாஸா சீனன்கோட்டை பாஸிய்யா பெரிய ஜும்ஆ பள்ளிவாசல் மையவாடியில் (03) இஷாத் தொழுகையின் பின்னர் நல்லடக்கம் செய்யப்பட்டது.

ஜனாஸா நல்லடக்கத்தில் உலமாக்கள், பள்ளிவாசல் சங்க உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல், முன்னாள் மேல்மாகாண சபை உறுப்பினர் இப்திகார் ஜெமீல் மற்றும் அரசியல் பிரமுகர்கள், நண்பர்கள் உட்பட நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

அஜ்வாத் பாஸி ...

# இலங்கை வானொலியின் புகழ் பெற்ற அறிவிப்பாளர் புவனலோஜினி காலமானார்

அன்றைய காலத்தில் இலங்கையின் தலைசிறந்த வானொலி அறிவிப்பாளராக விளங்கிய புவனலோஜினி நடராஜசிவம் நேற்றுமுன்தினம் காலமானார். இலங்கை வானொலி வர்த்தக சேவையின் சிரேஷ்ட அறிவிப்பாளர்களில் ஒருவராக அன்று திகழ்ந்தவர் திருமதி புவனலோஜினி நடராஜசிவம்.

இலங்கை வானொலி அக்காலத்தில் எமது நாட்டில் மாத்திரமன்றி இந்தியாவின் தமிழ்நாட்டிலும் மிகுந்த பிரபல்யம் மிக்கதாக விளங்கியது. தமிழ்நாட்டில் இயங்கிய வானொலி சேவைகளை விட இலங்கை வானொலியையே அந்நாட்டு மக்கள் அதிகம் செவிமடுத்தனர். இலங்கை வானொலியை உலக தரத்துக்கு எடுத்துச் சென்ற அறிவிப்பாளர்களில் புவனலோஜினியும் குறிப்பிடத்தக்கவராக விளங்கினார்.



புவனலோஜினி நடராஜசிவம் நேற்றுமுன்தினம் மாலை யாழ்ப்பாணத்தில் காலமானதாக அவரது உறவினர்கள் தெரிவித்துள்ளனர். அவர் சில நாட்களாக தனியார் வைத்திய சாலை ஒன்றில் சிகிச்சை பெற்று வந்தார். சிகிச்சை பலனின்றி அவர் நேற்றுமுன்தினம் காலமானதாக அவரது உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

புவனலோஜினி நடராஜசிவம், மறைந்த மூத்த அறிவிப்பாளர் நடராஜசிவத்தின் துணைவியார் என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கை வானொலி வர்த்தக சேவையின் சிரேஷ்ட அறிவிப்பாளர்களில் ஒருவரான புவனலோஜினி நடராஜசிவம் அக்காலத்தில் புகழ் மிக்கவராக விளங்கினார். அவர் சிறந்த குரல் வளம் மிக்கவராக வானொலி நேயர்களால் பாராட்டப்பட்டவர்.

அன்னாரின் மறைவு குறித்து கலைஞர்கள் உட்பட பலரும் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளனர்.

## பிளவுகளை விட ... (03 ஆம் பக்கத் தொடர்)

அரசாங்கத்தை அமைப்பதா என்பது தொடர்பிலும் ஜனாதிபதியும் பிரதமரும் பதவி விலக வேண்டும் என்றும் குரல் எழுப்பப்பட்டு வருகின்றன.

எனினும் இத்தகைய சூழ்நிலையில் தேவையற்ற செலவுகள் நிறுத்தப்பட்டு மக்களுக்கு நிவாரணம் வழங்குவதில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் வீழ்ச்சி அடையாமல் பாதுகாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதை போன்று நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களை இயல்புநிலைக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். எயார் பஸ்கள் கொள்வனவு செய்யும் நடவடிக்கைகள் தொடர்பில் பேசப்படுகிறது. எவ்வாறெனினும் பாராளுமன்றத்தின் அனுமதியின்றி எயார் பஸ்களை கொள்வனவு செய்ய வேண்டாம். கோப் குழுவும் அது தொடர்பில் முடிவுகளை அறிவித்துள்ளது.

வரவு செலவுத் திட்டத்தின் மூலம் அவசியமற்ற செலவுகளை நீக்க வேண்டும்.

நீக்கக்கூடிய அனைத்தையும் நீக்கி மக்களுக்கு நிவாரணம் வழங்க முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இலங்கை இந்தியாவுக்கு ... (03 ஆம் பக்கத் தொடர்)

பல கோடி ரூபாய்களை வழங்க முன்வந்துள்ளமையும் இலங்கை மக்களை தமிழ்நாடு அந்நியர்களாக பார்க்கவில்லையென்பதையே உறுதிப்படுத்துகிறதென்றும் அவர் தெரிவித்தார். இலங்கை தொடர்பில் தமிழ்நாடு அரசாங்கம் மேற்கொண்டுள்ள இந்த தீர்மானத்திற்கு தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் உட்பட அனைத்து தமிழக அரசியல் தலைவர்கள் மற்றும் மக்களுக்கும் நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற நாட்டின் பொருளாதார நிலை மற்றும் அரசாங்கத்தின் சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தை தொடர்பில் நடைபெற்ற விவாதத்தின் போதே மனோ கணேசன் எம்பி இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு கடந்த 75 வருடங்களாக மாறி மாறி நாட்டை ஆட்சி செய்த அரசாங்கங்கள் அனைத்தும் பொறுப்புக்கூற வேண்டும்.

யுத்தம் உட்பட நாம் பல்வேறு நெருக்கடிகளை சந்தித்துள்ளோம் எனினும் தற்போது நாட்டில் எழுந்துள்ள நெருக்கடி உயிர்வாழும் பிரச்சனையை அடிப்படையாக கொண்டதாகும்.

இந்த நிலையை உணர்ந்து நாம் தமிழக அரசுக்கு நாட்டின் நிலைமையை அறிவித்திருந்தோம். அந்த வகையில் தமிழக அரசாங்கம் இலங்கையிலுள்ள தமிழர்களுக்கு மட்டுமின்றி நாட்டில் உள்ள அனைத்து மக்களுக்கும் உதவுவதற்கு முன் வந்துள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இந்திய பிரதமருக்கும் தமிழக முதல்வருக்கும் சர்வதேச இந்துமதபீடம் நன்றி தெரிவிப்பு




இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக சிரமங்களுக்குள்ளாகியுள்ள மக்களது கஷ்டங்களை போக்குவதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இலங்கை மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான பிரேரணையொன்றை முன்மொழிவு செய்து அதை நிறைவேற்றியுமுள்ளார்.

இதன் மூலம் ஒதுக்கப்பட்ட கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான பொருட்கள் மத்திய அரசின் வெளியுறவுத் துறை அமைச்சரின் மூலம் அனுமதி பெறப்பட்டு இலங்கையிலுள்ள இந்திய தூதரகத்தினூடாக வழங்குவதற்கான ஏற்பாடுகளை செய்வதற்கான ஆயத்தங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

முழு இலங்கைவாழ் மக்களுக்கும் ஓரளவேனும் இந்த நிதி உதவி மூலம் பொருளாதார சிக்கல் தீர வேண்டும் என ஒரு அர்பணிப்பான உணர்வுடன் எடுத்த அவர்களுடைய இந்த சேவை காலத்தால் நிச்சயம் போற்றப்படும், மதிக்கப்படும். இந்த வகையில் இலங்கைக்கு என்றும் உறுதுணையாக இருக்கும் இந்தியாவின் உதவிக் கரம் இலங்கைவாழ் மக்களால் மறக்கமுடியாதவை. மேலும் இலங்கைக்கான அத்தியவசிய தேவைக்கு தொடர்ந்தும் ஆதரவை வழங்க வேண்டுமென சர்வதேச இந்துமதபீட செயலாளர் கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா கேட்டுகொண்டதுடன் நன்றிகளுடன் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளார்.

## திறந்த மனதுடன் ... (03 ஆம் பக்கத் தொடர்)

பணத்தை ஆட்சியாளர்கள் பயன்படுத்தியமையே அதற்கான காரணமாகும். அதன் பாதிப்பையே மக்கள் இப்போது அனுபவிக்கின்றனர்.

கடந்த காலங்களில் அரசாங்கம் முன்னெடுத்த வேலைத்திட்டங்கள் பலவற்றை தவறானவை என்று இப்போது நிதியமைச்சர் ஏற்றுக்கொள்கின்றார்.

இந்த தவறான தீர்மானங்கள் தெரியாமல் நடந்தவையா? இல்லை. தெரிந்தே நடந்துள்ளன. இதனை சிறிய தவறாக கருத முடியாது. இதற்கு ஜனாதிபதியும் அதேபோன்று அமைச்சரவையும் பொறுப்புக் கூற வேண்டும். நிதியமைச்சரும் தமது பொறுப்பிலிருந்து தப்பிக்க முடியாது. நாட்டை பொருளாதார ரீதியில் சீர்குலைத்துவிட்டு தவறு நடந்துள்ளது என்று கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. அதற்கு காரணமான ஆட்சியாளர்கள் பதவி விலக வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## 19 ஆவது திருத்தத்தை... (03 ஆம் பக்கத் தொடர்)

பட்டாலும், நிறைவேற்றப்படாவிட்டாலும், தேசிய அரசாங்கத்தை நிறுவி, குறைந்தபட்ச வேலைத்திட்டத்துடன் செயற்படல் வேண்டுமென்ற யோசனைகளைத் தாம் முன்வைத்துள்ளதாக சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார்.

## அத்தியாவசிய மருந்து ... (03 ஆம் பக்கத் தொடர்)

பெற்றுக்கொள்ள இவ்வாறு இந்தியாவின் உதவியை கோரியுள்ளார். சனத் ஜயசூரிய, புற்றுநோய் மருந்துகள் மற்றும் பிற உயிர்காக்கும் அத்தியாவசிய மருந்துகளின் தேவை குறித்தும் உயர்ஸ்தானிகரின் கவனத்துக்கு கொண்டுவந்துள்ளார். சுதந்திரத்திற்குப் பின்னர் மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள எமது தேசத்துக்கு உதவி வழங்கியமைக்கு இந்தியாவையும் பிரதமர் நரேந்திர மோடியையும் சனத் ஜயசூரிய பாராட்டினார்.

## தமிழக முதல்வரின்... (03 ஆம் பக்கத் தொடர்)

அத்தியாவசிய பொருட்களின் விலை வரலாறு காணாத வகையில் பல மடங்கு உயர்ந்துள்ளது. இதனால், வாழ்வாதாரத்தை இழந்து தவித்து வரும் இலங்கை மக்கள், பொருளாதார நெருக்கடியை கட்டுப்படுத்தக் கோரி அந்நாட்டு அதிபர் மற்றும் பிரதமருக்கு எதிராக பல கட்ட போராட்டங்களை நடத்தி வருகின்றனர். மேலும், பொருளாதார நெருக்கடியால் இலங்கையில் உள்ள தமிழ் மக்கள் அகதிகளாக தமிழகத்துக்கு வந்த வண்ணம் உள்ளனர்.

உண்ண உணவு, உடுத்த உடை மற்றும் மருத்துவ வசதி இல்லாமல் இலங்கை மக்கள் மிகவும் கஷ்டப்பட்டு வருகின்றனர்.

இந்தக் கடினமான நேரத்தில் அவர்களுக்கு உதவிட வேண்டியது நம் ஒவ்வொருவரின் கடமை. அந்த வகையில் இலங்கையில் வாழும் மக்களின் துயர் துடைக்கவும், அவர்களுக்கு உதவிடும் வகையிலும், தமிழக முதல்வரின் பொது நிவாரண நிதிக்கு தேமுதிக சார்பில் 05 இலட்சம் ரூபா நிவாரண நிதி வழங்கப்படும்" என்று விஜயகாந்த் கூறியுள்ளார்.

## பிரதமர் ஒருபோதும் பதவி விலக...

இவ்வாறு தெரிவித்தார்.

நேற்றைய தினம் பாராளுமன்றத்தில் உரை நிகழ்த்திய பின்னர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தமது பதவி விலகலை அறிவிப்பாரென சில சமூக வலைத்தளங்கள் நேற்று முன்தினம் தகவல்களை வெளியிட்டிருந்தன.

அது தொடர்பில் ஊடகவியலாளர்கள் நேற்று சபை முதல்வர் அமைச்சர் தினேஷ் குணவர்தனவிடம் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலக மாட்டாரென்பதை அவர் இதன்போது உறுதியாக தெரிவித்தார்.

அத்துடன் எந்தவொரு நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கும் முகம் கொடுப்பதற்கு அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் சபை முதல்வர் தினேஸ் குணவர்தன தெரிவித்தார்.

எந்தவொரு நம்பிக்கையில்லாப் பிரேரணையையும் எதிர்கொள்ள அரசாங்கம் தயாராக இருப்பதாகவும், அரசியலமைப்பு மற்றும் பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளுக்கு அமைவாக 3 மொழிகளிலும் நம்பிக்கையில்லாப் பிரேரணை தாக்கல் செய்யப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதை சபாநாயகர் ஏற்றுக் கொண்டால், ஐந்து வேலை நாட்கள் முடியும் வரை விவாதம் நடத்தக் கூடாது எனவும், அதற்குள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அதைப் படிக்க வாய்ப்பு அளிக்க வேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

## புவனலோஜினியின்...

அவரது உறவினர்கள் தெரிவித்தனர். அவர் மறைந்த மூத்த அறிவிப்பாளர் நடராஜ சிவத்தின் மனைவி என்பதும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் முதல் நிலை பெண் அறிவிப்பாளர்களில் ஒருவராக திகழ்ந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மருந்து பொருட்களை பெறுவதில்...

தனக்கு மருந்துகளை பெற்றுக் கொள்வதில் ஏதேனும் பிரச்சினைகள் இருப்பின் அது தொடர்பில் தெரிவிக்க முடியுமென சுகாதார அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமண தெரிவித்துள்ளார். இதனூடாக மருந்துகள் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வுகளை பெற்றுக் கொள்ளமுடியுமென அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## ஆர்ப்பாட்டக்காரர்கள் 10 பேர் கைது...

அது தொடர்பில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன பொலிஸ் மாஅதிபருக்கு அறிவித்ததையடுத்து கைதுகள் இடம்பெற்றதாக தெரிவித்த அவர், இது போன்ற சம்பவங்கள் பாராளுமன்றத்தின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமைவதுடன் பாராளுமன்ற அமர்வுகளை நடத்த முடியாத நிலையும் ஏற்படலாம் என்றும் அவர் சபையில் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றத்துக்குள் பிரவேசிக்கும் வீதியை மறித்து நேற்று ஆர்ப்பாட்டக்காரர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளின்போது 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் சபையில் எதிர்க் கட்சி எம்பிக்கள் சிலர் கருத்துக்களை முன்வைத்தனர். அதற்கு பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இவ்வாறு தெரிவித்தார். (ஸ)

## பிரதி சபாநாயகர் பதவியை...

நேற்று இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வின் போதே சபாநாயகர் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

கடந்த மாதம் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தனது இராஜினாமா கடிதத்தை கையளித்திருந்தார். எனினும், பாராளுமன்ற ஜனநாயகம் பாதுகாப்பாக முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும் என்பதால் பிரதி சபாநாயகர் பதவியில் இருந்து விலகுவதற்கு ரஞ்சித் சியம்பலாபிட்டிய கையளித்திருந்த இராஜினாமா கடிதத்தை தான் நிராகரிப்பதாக ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார். எனினும் நேற்று அது ஏற்றுகொள்ளப்பட்டு பிரதி சபாநாயகர் பதவியிலிருந்து ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய விலகியதாக ஜனாதிபதி செயலகம் நேற்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளது.

## ஜனாதிபதிக்கு எதிரான...

இயங்கும் 11 கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

11 கட்சிகளின் பிரதிநிதிகளுடன் நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

ஜனாதிபதிக்கு எதிராக எதிர்க் கட்சி கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானம் எந்த அர்த்தமும் இல்லாத யோசனை எனவும் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

வாசுதேவ நாணயக்கார செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட பின்னர், கருத்து தெரிவித்த உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்காரவின் நிலைப்பாட்டுக்கு இணையான கருத்தையே வெளியிட்டுள்ளார்.

## ஆர்ப்பாட்டக்காரர்களை ...

ஈடுபட்டுள்ளதால் அவர்களை அகற்ற உத்தரவிடக் கோரி பொலிஸார் முன்வைத்த கோரிக்கைக்கமைய நீதிவான் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

அத்துடன், அமைதியானதும் மக்களுக்கு இடையூறு அற்றதுமான போராட்டங்களுக்கு தடையில்லையெனவும், கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தின் உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அலரிமாளிகைக் கருகிலுள்ள ஆர்ப்பாட்டக் களத்தில் நடைபாதையில் நிறுத்தப்பட்டுள்ள வாகனங்களை அகற்றவும், ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு இடையூறாக ஒலிபெருக்கி மற்றும் வீதித் தடைகளை பயன்படுத்தவும் தடை விதித்து உத்தரவிடக் கோரி, உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## எரிபொருளை ஏற்றிவந்த ...

இதுவரை பணம் எதுவும் கிடைக்கவில்லையெனவும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்

எரிபொருள் விநியோக நடவடிக்கைகளை வழமைக்கு திரும்ப மேலும் இரண்டு நாட்கள் செல்லுமென இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. நாட்டில் தற்போது கையிருப்பிலுள்ள டீசல் சில நாட்களுக்கு போதுமானதாக இருப்பதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சிரேஷ்ட அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

## பிரதி சபாநாயகரை தெரிவு ...

பிரதி சபாநாயகராக செயற்பட்டு வந்த ரஞ்சித் சியம்பலாபிட்டிய அந்த பதவியில் இருந்து விலகியுள்ளார்.

அதற்கான அறிவிப்பை அவர் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள நிலையில் அதை ஏற்றுக் கொண்டுள்ளதாக ஜனாதிபதியிடமிருந்து எனக்கு கடிதம் மூலம் இன்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் எதிர்க்கட்சி கோருவது போன்று இன்று அதற்கான வாக்கெடுப்பை நடத்த முடியும் என்றும் சபாநாயகர் சபையில் தெரிவித்தார்.

லக்ஷ்மன் கிரியெல்ல சபையில் கேள்வி எழுப்புகையில்:

ரஞ்சித் சியம்பலாபிட்டிய இப்போதும் பிரதி சபாநாயகராக உள்ளாரா?அல்லது அவர் தமது பதவியை இராஜினாமா செய்துள்ளாரா என்பது சபையில் தெளிவாக அறிவிக்கப் பட வேண்டும் அவ்வாறு அவர் பதவி விலகி இருந்தால் புதிதாக ஒருவரை தெரிவு செய்ய வாக்கெடுப்பு நடத்துவதற்கு சபாநாயகர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

அதற்கு பதிலளிக்கும் போதே சபாநாயகர் இவ்வாறு தெரிவித்தார்.

அதன்போது குறுக்கிட்ட ரஞ்சித் சியம்பலாபிட்டிய:

நான் எனது இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பி இருந்தேன். அந்த கடிதத்திற்கு ஜனாதிபதியிடமிருந்து சபாநாயகருக்கு பதில்அனுப்பப்பட்டுள்ளது. அந்த கடிதத்தின் பிரதியொன்றை சபாநாயகர் எனக்கு வழங்கியுள்ளார். எவ்வாறாயினும் நான் பிரதி சபாநாயகர் பதவியிலிருந்து விலகியுள்ளேன் என்றும் அவர் தெரிவித்தார்.

பிரதி சபாநாயகர் பதவிக்கு இதுவரை ஆளும் கட்சியில், பாராளுமன்ற உறுப்பினர்களான அனுர பிரியதர்சன யாப்பா, டிலான் பெரேரா ஆகியோரது பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் எதிர்க் கட்சியில் இருந்து பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்காரின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் அந்தப் பெயர்கள் தொடர்பில் இறுதித் தீர்மானம் எதுவும் நேற்று வரை உத்தியோக பூர்வமாக வெளியிடப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது

## யோஷித்தவுக்கு எதிரான JVP ...

அனுரகுமார திஸாநாயக்க நேற்று முன்தினம் (03) பிரதமர் அலுவலக செயலணியின் தலைவர் யோஷித்த ராஜபக்ஷவுக்கு எதிராக சுமத்திய போலிக் குற்றச்சாட்டுகள் தொடர்பாகவே சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை மன்றக் கல்லூரியில் 03.05.2022 ஆம் திகதி நடைபெற்ற ஊடக சந்திப்பில் ராஜபக்ஷவுக்கு சொந்தமான இடங்களென குறிப்பிட்டு காணி உறுதிப்பத்திர இலக்கங்கள் மற்றும் காணிகளின் பெயர்கள் முன்வைக்கப்பட்டு அனுரகுமார திஸாநாயக்க எம்பி பொய்யான மற்றும் மக்களை தவறாக வழிநடத்தும் செய்திகள் தெரிவித்துள்ளார்.

பிரதமரின் செயலணியின் தலைவர் யோஷித்த ராஜபக்ஷவின் நற்பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்தும் வகையில் தவறான தகவல்களை முன்வைத்ததால் அவருக்கு ஏற்பட்ட அவமானம் தொடர்பில் அனுரகுமார திசாநாயக்கவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக தனது சட்டத்தரணிகளுக்கு அவர் ஆலோசனை பெற்றுக் கொடுத்துள்ளார். அந்த ஊடக மாநாட்டில் அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட போலி செய்தியை வன்மையாக கண்டிக்கின்றோமென்றும் பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

## இலங்கைக்கு இந்தியா...

மருந்துகள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களை கொள்முதல் செய்ய இலங்கைக்கு 01 பில்லியன் டொலர் வரை கடனுதவி (லைன் ஆஃப் கிரெடிட்) அளிக்க இந்தியா முன்வந்தது. இந்தக் கடனை தேவைப்படும்போது இலங்கை பெற்றுக் கொள்ளும் வகையில், ஏற்கெனவே செயல்பாட்டிலுள்ளது.

கூடுதலாக அரிசி, மருந்துகள், தொழில்துறை மூலப்பொருள்கள் மற்றும் அத்தியாவசியப் பொருள்களும் இந்திய கடனுதவியின் கீழ் இடம் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பெற்றோல், டீசல் மற்றும் விமான எரிபொருள் போன்ற எரிபொருட்களை கொள்முதல் செய்ய தனியாக 500 மில்லியன் டொலர் கடனுதவி அளிக்க இந்தியா முன்வந்தது. இது வெவ்வேறு வகையான எரிபொருள் அடங்கிய 09 சரக்குத் தொகுப்புகளை இலங்கைக்கு விநியோகிக்க வழிவகை செய்துள்ளது.

இந்தியாவிலிருந்து இதுவரை சுமார் 04 இலட்சம் மெற்றிக் தொன் எரிபொருள் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. கூடுதல் எரிபொருள் விரைவில் இலங்கை வந்து சேரவுள்ளது. கடந்த மே 02 ஆம் திகதி எரிபொருளுக்கு கூடுதலாக 200 மில்லியன் டொலர் கடனுதவி அளிக்க இந்தியா முன்வந்தது. இதுதவிர, எரிபொருள் கொள்முதலுக்கு 500 பில்லியன் டொலரை குறுகிய கால கடனாக இலங்கைக்கு இந்தியா வழங்கியுள்ளது. இலங்கைக்கு சுமார் 16,000 மெற்றிக் தொன் அரிசியை இந்தியா வழங்கியுள்ளது. தமிழ்,சிங்கள புத்தாண்டின்போது நல்லெண்ண அடிப்படையில் கூடுதலாக 11,000 மெற்றிக் தொன் அரிசி இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

ஒட்டுமொத்தமாக இந்த ஆண்டு ஜனவரி முதல் இதுவரை இலங்கைக்கு இந்தியா 03 பில்லியன் டொலர்கள் (சுமார் ரூ.23,000 கோடி) கடனுதவி அளித்துள்ளதென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாட்டின் பொருளாதார...

பொறுப்புள்ளது எனவும் தெரிவித்த அவர், நாட்டில் தற்போது நடைமுறையிலுள்ள வரிக் கொள்கையை முன்னெடுத்துச் செல்ல முடியுமா என்பது கேள்விக்குறியெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியை ஓரிரு மாதங்களில் தீர்க்க முடியுமா என்று தெரியவில்லை . கடந்த காலங்களில் வரிகள் அதிகரிக்கப்பட வேண்டிய காலப்பகுதியில் அரசாங்கம் வரிகளை குறைத்தது. அதன் பலனை இன்று நாம் அனுபவிக்க வேண்டியுள்ளது.சுற்றுலாத் துறையின் சரிவு, எண்ணெய் விலை உயர்வு உள்ளிட்ட பல காரணிகள் வெளிநாட்டு கையிருப்பு இழப்புக்கு பங்களித்தன. வரி குறைப்பு, பொருத்தமான நேரத்தில் சர்வதேச நாணய நிதியத்திடம் செல்லாமை மற்றும் கடன் மறுசீரமைப்பில் தாமதம் என்பனவே இதற்கு காரணமென அவர் கூறியுனார்.

எனவே தற்போதைய நெருக்கடியை இரண்டு ஆண்டுகளில் தீர்ப்பதா அல்லது 05 முதல் 10 ஆண்டுகள் வரை இழுத்தடிப்பதா என்பதை அரசியல்வாதிகளே முடிவு செய்ய வேண்டுமென அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நாட்டின் பொருளாதார நிலை குறித்து உரையாற்றிய நிதியமைச்சர் அலி சப்ரி, கடந்த ஆண்டின் செலவினம் வருமானத்தை விட இரண்டு மடங்கு அதிகம் என்றும் குறிப்பிட்டார். 2021 ஆம் ஆண்டின் மொத்த வருவாய் 1,464 பில்லியன் என்றும் செலவு 3,522 பில்லியன் ரூபாய் எனவும் அவர் தெரிவித்தார்.

## குறுகிய அரசியல் நலன்களுக்காகவே...

எவ்வித ஒத்துழைப்பும் வழங்கப் போவதில்லையென பல அத்தியாவசிய சேவை வழங்குநர்களின் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளனர். தமது சேவையை தொடர்ந்து வழங்குவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதாக அவர்கள் ஜனாதிபதியிடம் உறுதியளித்துள்ளனர்.

நேற்று முன்தினம் (03) கொழும்பு கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் நடைபெற்ற சந்திப்பின் போதே தொழிற்சங்கப் பிரதிநிதிகள் இதனைத் தெரிவித்துள்ளனர்.

உத்தேசித்துள்ள வேலைநிறுத்தம், தொழிலாளர்களின் உரிமைகளுக்காக அல்ல என்றும், பல அரசியல் கட்சிகளின் நலனுக்காகவே மேற்கொள்ளப்படவுள்ளதென்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் சுட்டிக் காட்டினர்.

தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியை மேலும் அதிகப்படுத்தவும், மக்களை ஒடுக்குவதும் இந்த வேலைநிறுத்தத்தின் நோக்கமாகும். அதனால் நிலைமையை சரியாகப் புரிந்து கொண்டு மக்களின் இயல்பு வாழ்க்கையை பேணுவதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்வது சகல ஊழியர்களினதும் கடமை மற்றும் பொறுப்பு என தொழிற்சங்கப் பிரதிநிதிகள் குறிப்பிட்டுள்ளனர்.

பொருளாதார நெருக்கடியை சமாளிக்க புதிய வழிமுறைகளைக் கையாண்டு, அரசியல் பிளவுகளிலிருந்து விலகிச் செல்ல வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். வேலை நிறுத்தங்களால் ஏற்படும் பொருளாதார நெருக்கடியை மேலும் அதிகப்படுத்துவதே இதன் பின்னணியிலுள்ள அரசியல் நோக்கமாகும். இதை உணர்ந்து, நிறுவனங்கள் வீழ்ச்சியடைய இடமளிக்கக்கூடாது.

கடந்த 28ஆம் திகதி நடைபெற்ற வேலைநிறுத்தத்தை பொருட்படுத்தாமல் தமது கடமைகளை ஆற்றிய தொழிலாளர்களுக்குத் தமது நன்றியை தெரிவித்த ஜனாதிபதி, தற்போதைய நிலைமையை புரிந்துகொண்டு மக்களின் இயல்பு வாழ்க்கைக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் வழங்குமாறு அனைத்து தொழிற்சங்கங்களையும் கேட்டுக்கொண்டார்.

அமைச்சர்களான திலும் அமுனுகம, மொஹான் டி சில்வா, கஞ்சன விஜேசேக்கர, பிரமித பண்டார தென்னகோன், பாராளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே, ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத் ஆகியோருடன், போக்குவரத்து, மின்சாரம், துறைமுகம் மற்றும் கப்பற்துறை, வலுசக்தி அமைச்சுக்களின் செயலாளர்கள், நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

## நியாயமான தீர்மானங்களுக்கு...

வகையில் தொடர்ந்தும் நாம் ஒத்துழைப்புகளை வழங்கி வந்துள்ளோமென்று குறிப்பிட்ட எதிர்க்கட்சித் தலைவர், எனினும் முறையான நடவடிக்கைகளுக்கு மாறாக தலையணைகளை மாற்றும் அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு நாம் ஒருபோதும் ஒத்துழைப்பு வழங்கத் தயாரில்லையென்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்திடம் அரசாங்கம் மேற்கொண்டுள்ள பேச்சுவார்த்தை தொடர்பாக பாராளுமன்றத்தில் நேற்று நிதியமைச்சர் அலி சப்ரி ஆற்றிய உரை தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக மக்கள் பெரும் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். இத்தகைய தருணத்தில் அரசாங்கம் தலைகளை மாற்றும் நாடகத்தை நடத்திக் கொண்டிருக்காமல் நாட்டு மக்களின் கோரிக்கைக்கு செவிமடுத்து அரசாங்கம் பதவி விலக வேண்டியது அவசியம்.

எதிர்க்கட்சி என்ற வகையில் நாம் அரசாங்கத்திற்கு தொடர்ந்து ஒத்துழைப்புக்களை வழங்கி வந்துள்ளோம். நாம் பிரதமர் பதவிக்கோ அல்லது அமைச்சுப் பதவிகளுக்கோ சோரம் போகின்றவர்கள் அல்ல. நாட்டுக்காக மேற்கொள்ளப்படும் நியாயமான தீர்மானங்களுக்கு நாம் ஒத்துழைப்பு வழங்குவோம்.

நாம் எப்போதும் வெளிப்படையாக. செயற்பட்டு வருகின்றோம். எம்மிடம் எந்த ஒளிவுமறைவும் கிடையாது.

இப்போதாவது அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்திடமும் இந்தியாவிடமும் கடன்களை பெற்றுக் கொள்வதற்கு தீர்மானித்துள்ளதை நாம் பாராட்டுகின்றோம். எனினும் இந்தியா நிதியுதவி வழங்குவது பொது ஜன பெரமுன ஆதரவாளர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கல்ல.

அரசாங்கம் RFI வங்கியிடம் கடன் பெறுவதற்கு தீர்மானித்துள்ளது. அதற்கு நாம் ஒத்துழைப்பு வழங்கத் தயார். அந்த வங்கியோடு நாம் பேச்சுவார்த்தை நடத்தவும் தயார்.

நாடு பெரும் உணவு நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. உலக உணவு அமைப்பு, யுனிசெப் உட்பட சர்வதேச நிறுவனங்கள் அமைப்புகளிடம் அது தொடர்பில் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட வேண்டியது அவசியமாகிறது.

அதேவேளை நாட்டில் பெரும் மருந்து தட்டுப்பாடு நிலவுகிறது. அதனை நிவர்த்தி செய்வதற்கான உடனடி நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இன மோதலை சீனா தங்களுக்கு சாதகமாக பயன்படுத்தியது

## காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் தெரிவிப்பு

**ஓமந்தை விஷேட நிருபர்**

சிங்கள – தமிழ் மோதலை சீனா தங்களுக்கு சாதகமாக பயன்படுத்தியதாக காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் தெரிவிக்கின்றனர்.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளால் வவுனியாவில் முன்னெடுக்கப்பட்டுவரும் தொடர்ச்சியான போராட்டம் 1900ஆவது நாட்களை எட்டுகின்றது. இதனையடுத்து நேற்று (04) அவர்களால் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்திலேயே இவ்வாறு கருத்து தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்கள்,

தமிழ்ப் பகுதிகளை சிங்களவர்களின் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதன் மூலம், ஒவ்வொரு சிங்கள அரசியல்வாதியும், இந்தியா, சீனா உள்ளிட்ட சர்வதேச சமூகமும் இலங்கையை ஸ்திரமற்ற நாடாக மாற்ற விரும்புகிறது.

இவர்கள் அனைவரும் சிங்கள தமிழர் மோதல் தொடர வேண்டுமென விரும்புகின்றனர். அவர்கள் அனைவரும் இலங்கையை கட்டுப்படுத்த சிங்கள தமிழ் மோதலை பயன்படுத்துகின்றனர்.

தமிழர் மீதான அடக்குமுறைகளை சிங்கள வாக்காளர்களை கவருவதற்காகவே சிங்கள அரசியல்வாதிகள் செய்கின்றனர். சிங்களவர்களில் ஒருசிலர் மகாவம்சத்தை நம்புகிறார்கள், வடக்கு, கிழக்கு சிங்கள பௌத்த பூமியாக இருக்க வேண்டும் என்று அது கூறுகிறது. இவ்வாறான செயற்பாடுகள் சிங்கள மக்களின் அன்றாட வாழ்க்கையை அவல நிலைக்குத் தள்ளுகின்றன. சிங்கள தமிழ் மோதலை சீனா தங்களுக்கு சாதகமாக பயன்படுத்தியது. தமிழர்களைக் கொல்ல சீனர்கள் ஆபத்தான ஆயுதங்களைக் கொடுத்தனர். இப்போது அம்பாந்தோட்டை துறைமுகத்தையும் கொழும்பு துறைமுகத்தையும் சீனர்கள் கைப்பற்றினர்.

சிங்கள தமிழ் மோதலுக்கு 13 ஆவது திருத்தம் என்று இந்தியா போலியாக உருவாக்கியது. இலங்கையை கட்டுப்படுத்த இந்தியா 13ஆவது திருத்தத்தை பயன்படுத்துகிறது.

மற்ற எல்லா நாடுகளையும் எடுத்துக் கொள்ளுங்கள், அவர்கள் ஒருபோதும் சிங்கள தமிழ் மோதலை தீர்க்க மாட்டார்கள். சிங்களம் மற்றும் ஸ்ரீலங்காவில் இருந்து ஆதாயம் பெற இதைப் பயன்படுத்துகின்றனர்.

தமிழர்கள் காலங்காலமாக அவதிப்பட்டு வருகின்றனர். நமக்கு துன்பம் என்பது அன்றாட நிகழ்வு..

அனைத்து சிங்கள தமிழர் முரண்பாடுகளும் சிங்களவர்களையும் தமிழர்களையும் அழித்துவிடும். அதுதான் இப்போது நடந்து கொண்டிருக்கிறது.

தமிழர்களும் சிங்களவர்களும் பழங்காலத்தில் நட்புறவாக, மிக நெருங்கிய அண்டை நாடுகளாக இருந்தனர். நாம் இரண்டு இறையாண்மை கொண்ட அண்டை நாடுகளாக தொடரலாம்.

செக்கோஸ்லோவாக்கியாவின் மாதிரியைப் பின்பற்றுவோம், என்றனர்.



ஈதுல் பிதுர் பெருநாளை முன்னிட்டு மாத்தளை கொங்காவளை ஜும்மா பள்ளி வாசலில் இடம்பெற்ற பெருநாள் தொழுகை நிகழ்வுகளை இங்கு காணலாம்.
படம் : உக்குவளை விஷேட நிருபர்

## இந்திய அரசினால் பேராதனை வைத்தியசாலைக்கு மருந்துப்பொருட்கள் கையளிப்பு

**(அக்குறணை குறுப் நிருபர்)**



இந்திய அரசினால் இலங்கைக்கு அவசர உதவியாக வழங்கப்பட்ட மருந்துப்பொருட்கள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் என்பவற்றின் ஒரு தொகுதி அண்மையில் கண்டி பேராதனை, போதனா வைத்தியசாலைக்கு கையளிக்கப்பட்டது. கண்டி உதவி இந்திய தூதுவர் வைத்திய கலாநிதி எஸ். ஆத்திரா, இந்திய அரசு சார்பாக பேராதனை, போதனா வைத்தியசாலையில் வைத்து அதனைக் கையளித்தார். பேராதனை, போதனா வைத்திய சாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி அர்ஜுன் திலகரத்ன அவற்றைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.


### பகிரங்க ஏல விற்பனை

சொப்ட்லொஜிக் பினான்ஸ் பீ.எல்.சி. நிறுவனத்தில் அடகு வைக்கப்பட்டு, உரிய காலத்தில் மீட்கப்படாத தங்க நகைகள் எமது **இல. 85, கொலன்னாவை வீதி, தெமட்டகொடை, கொழும்பு 09,** என்ற இலக்கத்தில் அமைந்துள்ள நிலையத்தில் **மே 30, 2022 காலை 9.30 மணி முதல் மாலை 4.00 மணி வரை** ஏலத்தில் விற்கப்படும்.

**எமது தங்கக் கடன் நிலையங்கள்**

- பொரளை
- ஹெட்டன்
- தெமட்டகொடை
- கண்டி
- காலி
- பதுளை
- கம்பஹா
- மாவனெள்ள
- கிராண்பாஸ்
- சிலாபம்
- கடவத்தை
- குருநாகல
- களுத்துறை
- அனுராதபுரம்
- கொச்சிக்கடை
- சுன்னாகம்
- கொட்டாஞ்சேனை
- தம்புள்ள
- கொட்டாவ
- எம்பிலிபிட்டிய
- மாத்தறை
- யாழ்ப்பாணம்
- நீர்கொழும்பு
- மாத்தளை
- திஸ்ஸமஹாராம
- நுவரெலிய
- இரத்தினபுரி
- பொலன்னறுவை
- வெளிகம
- பம்பலபிட்டிய
- வத்தளை

இவ் ஏல விற்பனையை முன்னறிவித்தலின்றி இரத்துச் செய்யும் அல்லது பிற்போடும் உரிமை இந்நிறுவனத்திற்கே உரியதாகும்.



### அட்டோர்ணி அதிகார பத்திரத்தை இரத்துச் செய்தல்

இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் பொரலெஸ்கமுவ, பிரிவென வீதி, 189/6ஆம் இலக்கத்தில் வசிக்கும் துனுவில முதியன்சேலாகே சமிந்த சஹன் சமரவீர (தே.அ.அ.இல. 692411323V) ஆகிய என்னால் பொரலெஸ்கமுவ, பிரிவென வீதி, 189/6ஆம் இலக்கத்தில் வசிக்கும் துனுவில முதியன்சேலாகே ருவன் ரன்தெனிய சமரவீர (தே.அ.அ.இல. 752971501V) என்பவருக்கு வழங்கப்பட்ட பிலியந்தலை பிரசித்த நொத்தாரிசு டக்லஸ் சிறிவர்தன அவர்களால் உறுதிப்படுத்தப்பட்ட 10098ஆம் இலக்கம் மற்றும் 2017-01-11ஆம் திகதியிடப்பட்ட அட்டோர்ணி அதிகார பத்திரத்தை 2022-05-03ஆம் திகதி முதல் வலுவிழக்கச் செய்து இரத்துச் செய்யப்படுவதாக இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசிற்கும் மற்றும் பொதுமக்களுக்கும் இத்தால் அறிவிக்கின்றேன்.

மேலும் இந்த 10098 இலக்கம் கொண்ட அட்டோர்ணி அதிகார பத்திரம் தெல்கந்த, நுகேகொட பதிவாளர் அலுவலகத்தில் 134/11ஆம் இலக்கப் பக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**துனுவில முதியன்சேலாகே சமிந்த சஹன் சமரவீர**
**2022 மே 03ஆம் திகதி.**


# புனித மிக்கேல் கல்லூரியின் கால்கோள் விழா







**(கல்லடி குறுப்நிருபர்)**

புனித மிக்கேல் கல்லூரியில் தரம் ஒன்றில் கால் தடம் பதிக்கவிருக்கும் மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழா நேற்று (04) திகதி மிகவும் கோலாகலமாக இடம்பெற்றது.

புனித மிக்கேல் கல்லூரியின் அதிபர் பயஸ் ஆனந்தராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக புனித மிக்கேல் கல்லூரியின் போசகரும் மட்டக்களப்பு அம்பாறை மறை மாவட்ட ஆயருமான பேரருட்திரு ஜோசப் பொன்னையா ஆண்டகை கலந்து சிறப்பித்தார். இந்நிகழ்விற்கு சிறப்பு அதிதியாக மட்டக்களப்பு வலயக்கல்விப் பணிமனையின் ஆரம்பப்பிரிவிற்கு பொறுப்பான உதவிக்கல்விப் பணிப்பாளர் உமாபதி விவேகாநந்தம் கலந்து சிறப்பித்திருந்தார்.

அதிதிகள் மலர்மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டதை தொடர்ந்து கல்லூரியின் பிரதான மண்டபத்தில் அரங்க நிகழ்வுகள் மங்கள விளக்கேற்றலுடன் மும்மத வழிபாடுகளுடன் ஆரம்பமாகியது.

நீண்டதொரு வரலாற்றுப் பின்னணியை கொண்ட பல சாதனைகளை தன்னகத்தே கொண்ட புனித மிக்கேல் கல்லூரியில் தரம் ஒன்றிற்கு புதிதாக இணைத்துக்கொள்ளப்பட்ட மாணவர்களை தரம் இரண்டில் கல்வி கற்கும் மாணவர்கள் மலர் மாலை அணிவித்து மகிழ்வுடன் வரவேற்றனர்.

இதன்போது தரம் ஐந்து மாணவர்களின் வரவேற்பு நடனம் உள்ளிட்ட ஏனைய ஆரம்பப் பிரிவு மாணவர்களின் கலை நிகழ்வுகள் அரங்கை அலங்கரித்ததுடன், பிரதம அதிதி உள்ளிட்ட அதிதிகளின் உரையினைத் தொடர்ந்து ஆரம்பப் பிரிவிற்கான கட்டடத் தொகுதிக்கு புதிய மாணவர்களை வாத்திய மரியாதையுடன் அழைத்துச் சென்றனர். அவர்களுக்கான வகுப்பறையில் நேற்றைய முதல் நாள் செயற்பாடுகள் ஆரம்பமாகியிருந்தன.

இந்நிகழ்வுகளில் கல்லூரியின் பிரதி அதிபர் அருட்பணி லெபோன் சுதன், ஆரம்பப் பிரிவிற்குப் பொறுப்பான அருட்தந்தை மெல்சன், இயேசு சபைத் துறவி அருட்பணி சுவைக்கின் றொசான் அடிகளார், பாடசாலையின் அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், பெற்றோர்கள் மற்றும் பாடசாலை நலன் விரும்பிகள் என பெருமளவானோர் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்திருந்தனர்.


### மக்கள் வங்கி – மொரட்டுவ கிளை

**1986 இன் 32 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தம் செய்யப்பட்டதான 1961 இன் 29 ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் 29D பிரிவின் கீழான விற்பனை**

**குடியிருப்பு நோக்கத்திற்கு பொருத்தமான மிகப்பெறுமதி கொண்ட ஆதனம்**

தெல்கந்த காணி பதிவகத்தில் 00042568645 ஆம் இலக்க இருமடித்தாள் தொகுதி தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டதும் பூஜ்யம் புள்ளி பூஜ்யம் மூன்று ஒன்பது ஆறு ஹெக்டயர் அளவு கொண்டதும் மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் மொரட்டுவ பிரதேச செயலகப் பிரிவுக்குள் கோரலவல்ல வடக்கு கிராம சேவகர் பிரிவுக்குள் அமைந்துள்ள கோரலவல்ல கிராமத்தில் அமைந்திருக்கும் கட்டிடங்கள், மரங்கள், தோட்டங்கள் மற்றும் அங்குள்ள அனைத்துடனும் சேர்த்து நில அளவை நாயகத்தினால் மேற்கொள்ளப்பட்ட 520215 ஆம் இலக்கம் கொண்ட காணி அளவைப் படத்தில் வலயம் 02 இன் 09 ஆம் இலக்க தாளில் சித்தரிக்கப்பட்ட 0327 கூறில் குறிப்பிடப்பட்ட காணியின் பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட ஒதுக்கீடுகள் அனைத்தும்.

மக்கள் வங்கியினால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ், அந்த வளவில் 2022 மே 20 ஆம் திகதி மு.ப. 10.30க்கு என்னால் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.
கொவிட் 19 ஒழுங்கு முறைக்கு அமைவாக சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்ட வழிகாட்டலின்படி இந்த ஏல விற்பனை நடத்தப்படும்.

**ஆதனத்தை அணுகும் முறை**
மொரட்டுவ நகரில் இருந்து (பழைய காலி வீதியில் 19 கி.மீ. தூண்) பாணந்துறையை நோக்கி பழைய காலி வீதியில் 425 மீற்றர் பயணித்து மொரட்டுவ பொலிஸ் நிலையம் மற்றும் "பெர்னாண்டோ" பிளேஸை கடந்து மொரட்டுவ பாலத்தில் கிட்டத்தட்ட புத்தர் சிலை அமைந்திருக்கும் கோரலவல்ல வீதிக்குள் நுழையவும் (142 ஆம் இலக்கப் பாதை). கோரலவல்ல 1ஆம் ஒழுங்கை கடந்து இந்த வீதியில் சுமார் 700 மீற்றர் சென்று, 10 அடி அகலமான சரளைக்கல் வீதிக்கு வலது பக்கம் திரும்பி, அந்த வீதியில் சுமார் 20 மீற்றர்கள் சென்று வீதியின் முடிவில் அமைந்திருக்கும் குறித்த ஆதனத்தை அடையலாம்.
மேலதிக விபரங்களுக்கு 2021 செப்டெம்பர் 03 ஆம் திகதியில் வெளியிடப்பட்ட அரச வர்த்தமானி மற்றும் அதே திகதியில் வெளியான "தினமின", "டெய்லி நியுஸ்" மற்றும் "தினகரன்" பத்திரிகைகளின் ஏல விற்பனை தீர்மானத்தை பார்க்கவும்.

கட்டணம் செலுத்தும் முறை:- வெற்றிகரமான கொள்வனவாளர் சுத்தியல் வைக்கப்பட்ட பின் பின்வரும் தொகைகளை ரொக்கப்பணமாக செலுத்துதல் வேண்டும்.

1. கொள்வனவு விலையின் 10%,
2. உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்த வேண்டிய உள்ளூர் விற்பனை வரி 01%,
3. கொள்வனவு செய்யப்பட்ட விலையில் ஏலதாரரின் தரகுத் தொகை (இரண்டரை வீதம் மாத்திரம்) 2 1/2%,
4. எழுதுனர் மற்றும் அறிவிப்பவரின் கட்டணம் ரூபா 2000/=
5. விற்பனை செலவு மற்றும் ஏதேனும் இருந்தால் வேறு கட்டணங்கள்
6. விற்பனை சான்றிதழுக்கான முத்திரை வரி

கொள்வனவு விலையின் எஞ்சிய 90% (தொண்ணூறு வீதம்) இனை பின்வரும் முகவரியில் விற்பனை திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் செலுத்த வேண்டும்.
பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி, பிராந்திய தலைமை அலுவலகம் (கொழும்புக்கு வெளிப்புறம்), இல. 177ஏ, ஹைலெவல் வீதி, நுகேகொட.
தொலைபேசி இலக்கங்கள்: 011-2768018, 011-2812260, 011-4305863, தொலைநகல் இல. 011-2817737.
உரித்துறுதிகள் மற்றும் ஏனைய சான்றாதாரங்களை மேற்கூறிய முகவரியில் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.
மேல் குறிப்பிடப்பட்டவாறு எஞ்சிய தொகையை 30 நாட்களுக்குள் செலுத்தாத பட்சத்தில், ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% இனை பறிமுதல் செய்து அந்த ஆதனத்தை மீண்டும் விற்பனை செய்ய வங்கிக்கு உரிமை உள்ளது.
முன்னறிவித்தல் இன்றி விற்பனையை நிறுத்துவது அல்லது இரத்துச் செய்யும் உரிமை மக்கள் வங்கி வசமானது.

**இர்வின் பெரேரா**
**சமாதான நீதவான், ஏலமிடுபவர்,**
**வர்த்தக உயர் நீதிமன்றம் மற்றும் மாவட்ட நீதிமன்றத்திற்கான நீதிமன்ற ஆணையாளர்,**
**உத்தரவு பெற்ற மொழிபெயர்ப்பாளர்.**

**இல. 282/3, கட்டம் 5/2,**
**கிங்ஸ் வியுவ் ரெசிடென்சீஸ்**
**கோட்டே வீதி, நுகேகொட.**
**தொலைபேசி இல.: 071-8021206**


# ஆந்திரா தெலுங்கானா தொழில்நுட்ப வல்லுநர்களை சந்தித்த வடக்கு ஆளுநர்

**கோப்பாய் குறூப் நிருபர்**

இந்தியா சென்ற வடக்கு ஆளுநர் ஜீவன் தியாகராஜா நேற்று (04) புதன்கிழமை ஆந்திரா மற்றும் தெலுங்கானா தொழில்நுட்ப வல்லுநர்களை தமிழ்நாட்டில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இதன் போது வடக்கு அபிவிருத்தியை முன்னோக்கி நகர்த்திச் செல்வதற்கு தேவையான ஒத்துழைப்பு வழங்குவது தொடர்பிலும் அனுபவங்களை பகிர்வது தொடர்பில் தொழில்நுட்ப வல்லுநர்களுடன் ஆளுநர் கலந்துரையாடினார்.

வடக்கில் இறால் வளர்ப்பு, மீன்பிடி பண்ணைப் பொருளாதாரம், ரயில்வே, மீள் புதுப்பிக்க சக்தித்திட்டம் மற்றும் நிதி பெறும் முறைமை தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இக்கலந்துரையாடலில் வடக்கு மாகாணத்தில் முட்டை உற்பத்தியை அதிகரித்தல் மற்றும் கோழிப் பண்ணையாளர்களை ஊக்குவித்தல் தொடர்பில் ஆளுநர் தனது கருத்துக்களை முன்வைத்ததுடன் போக்குவரத்துத் துறைகளான கப்பல் சேவை மற்றும் விமானப் போக்குவரத்து தொடர்பில் தனது கருத்துக்களை முன்வைத்திருந்தார்.



## ரஷ்ய உக்ரைன் போருக்குப்...

(05ஆம் பக்கத் தொடர்)

அதன் பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த பிரதமர் நரேந்திர மோடி, "இந்தியா_ ஐரோப்பிய ஒன்றிய உறவுகள், இந்தோபசிபிக் நிலை, உக்ரைன் உள்ளிட்ட பல பிராந்திய மற்றும் உலகளாவிய பிரச்சினைகளையும் நாங்கள் விவாதித்தோம். இந்தியா_ ஐரோப்பிய யூனியன் இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்திற்கான பேச்சுவார்த்தைகள் நல்ல முறையில் நடைபெற்று வருகின்றன. அந்த பேச்சுவார்த்தை மிக விரைவில் முடிவடையும்" என்று நம்பிக்கை தெரிவித்தார்.

உக்ரைன் நாட்டில் தொடரும் போரை உடனடியாக முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்பதை மீண்டும் வலியுறுத்திய பிரதமர் நரேந்திர மோடி, இரு நாடுகளும் பேச்சுவார்த்தை மூலமே பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்று வலியுறுத்தினார். உக்ரைன் போர் 2 மாதங்களுக்கு மேலாகத் தொடரும் நிலையில், பிரதமர் மோடி சண்டையை விடுத்து அமைதியான முறையில் போரை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் எனத் தொடர்ந்து அழைப்பு விடுத்து வருவது குறிப்பிடத் தக்கது.

இந்த ஆலோசனைக்குப் பின்னர் பேசிய டென்மார்க் பிரதமர் மெட்டே பிரடெரிக்சன், "ரஷ்யாவுடன் இருக்கும் நட்பைப் பயன்படுத்தி உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டுவர இந்தியா முயலும் என நம்புகிறோம். ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் உடனடியாக இந்தப் போரை நிறுத்த வேண்டும். உக்ரைன் நாட்டில் இருக்கும் அப்பாவி பொதுமக்களை ரஷ்ய படைகள் கொன்று குவிப்பது உடனடியாக தடுத்து நிறுத்தப்பட வேண்டும். அதேபோல இந்தியாவும் டென்மார்க்கும் தங்கள் வணிக உறவுகளை மேம்படுத்த பல்வேறு வழிகள் உள்ளன. இந்தியாவின் உள்கட்டமைப்பு மற்றும் பசுமைத் துறைகள் பல டென்மார்க் நிறுவனங்கள் அதிக அளவில் முதலீடு செய்ய காத்திருக்கின்றன" என்றார்.


திகதி 03.05.2022 செவ்வாய்க்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

**மஹஜன சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம்: 4751
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 9,826,480.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 19,681,240.00
ஆங்கில எழுத்து S வெற்றி இலக்கங்கள் 6 0 1 8 2 8

**ராசி சுப பலன்** Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 0060
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,593,800.00
இலக்கினம் கடகம் வெற்றி இலக்கங்கள் 24 34 45 51
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,194,599.00

**தன நிதானய**
சீட்டிழுப்பு இலக்கம் : 781
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,952,360.00
வெற்றி இலக்கினம் Q வெற்றி இலக்கங்கள் 26 44 61 72
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 109,699,464.80

**Mega POWER மெகா பவர்** 25+
சீட்டிழுப்பு இலக்கம் 1099
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,051,060.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 250,407,054.00
ஆங்கில எழுத்து U சுப்பர் நம்பர் 03 வெற்றி எண்கள் 19 39 70 77
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01




# சிறகுகள் புத்தகத் திருவிழா





**கோப்பாய் குறூப் நிருபர்**

உலக புத்தக தினத்தினை முன்னிட்டு சிறகுகள் அமையத்தின் ஏற்பாட்டில் புத்தகத் தி ருவிழா ஏப்ரல் 29 முதல் மே 2ஆம் திகதி வரை கோண்டாவிலில் அமைந்துள்ள எழுதிரள் பணிமனையில் சிறப்பாக இடம்பெற்றது.

ஈழத்து எழுத்தாளர்கள் மற்றும் புலம்பெயர் எழுத்தாளர்களின் 800ற்கு மேற்பட்ட தலைப்புகளிலான நூல்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

ஏப்ரல் 29ஆம் திகதி இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வில் அறிந்திரன் சஞ்சிகையின் ஆசிரியர் கணபதி சர்வானந்தா, அரசியல் ஆய்வாளர் ஜோதிலிங்கம் விருந்தினர்களாக கலந்துகொண்டனர்.

தொடர்ந்து ஏப்ரல் 30, மே 1ஆம் திகதிகளில் சிறுவர்களுக்கான கடதாசி வேலைப்பாடுகள் (ஓரிகாமி) பயிற்சி மற்றும் கதை சொல்லல் நிகழ்வுகள் என்பன வடகிழக்கு மாகாண முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் செ.மகேஸ் மற்றும் றொபின்சனினால் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்வில் சிறுவர்களுக்கான சித்திரம் வரைவதற்கான பகுதி அனைவரினதும் கவனத்தினையும் ஈர்த்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பாலர் பைந்தமிழ்ப் பாடல்கள் நூல் சாவகச்சேரி இந்துவில் வெளியீடு





வயலூரன் செ.சுதாகரன் எழுதிய பாலர் பைந்தமிழ்ப் பாடல்கள் என்ற நூலின் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் (03.05.2022 செவ்வாய்க்கிழமை) சாவகச்சேரி இந்துக் கல்லூரி அருணாசலம் மண்டபத்தில் கல்லூரி அதிபர் ந.சர்வேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

அண்மையில் புதிதாக மீசாலையில் திறக்கப்பட்ட கயல்விழி அறிவொளி முன்பள்ளி சார்பில் வெளியிடப்பட்ட இந்நூலின் வெளியீட்டுரையை இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாண பிராந்திய நிலையப் பணிப்பாளர் கி. கந்தவேளும் நூல் நயப்புரையை செந்தமிழ்ச்சொல்லருவி சந்திர மௌலீசன் லலீசனும் நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் ஆசியுரையை சிவஸ்ரீ பால குமாரக் குருக்களும் வரவேற்புரையை புலஸ்திபுர தேசிய கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர் மங்கலகல்யாணி சிவனேசனும் இறை வணக்கத்தை தெ.திருவேரகனும் நிகழ்த்தினர்.

நூலின் முதல் பிரதியை நூலாசிரியர் தம்பதியரிடமிருந்து தேவகி ஜெயக்குமார் பெற்றுக்கொண்டார். சிறப்புபிரதிகளை ஓய்வுநிலை அதிபர் க. அருந்தவபாலன் வழங்கினார் . திருக்கணிதம் க. சிவஞானம் நிகழ்வுகளை தொகுத்து வழங்கினார்.

# வவுனியா ஊடக அமையத்திற்கு புதிய நிர்வாகசபை தெரிவு

**ஓமந்தை விஷேட நிருபர்**

வவுனியா ஊடகஅமையத்தின் புதிய நிர்வாக புனரமைப்பு பொதுக் கூட்டம் வைரவபுளியங்குளத்தில் அமைந்துள்ள ஊடக அமையத்தின் பணிமனையில் நேற்று முன்தினம் (03) இடம்பெற்றது.

முன்னதாக அமையத்தின் கடந்த கால செயற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன், கடந்த ஆண்டிற்கான கணக்கறிக்கை முன்வைக்கப்பட்டு அது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதனை தொடர்ந்து புதிய நிர்வாக சபைக்கான தேர்தல் இடம்பெற்றது.

அந்தவகையில் வவுனியா ஊடக அமையத்தின் புதிய தலைவராக பாலநாதன் சதீசன், செயலாளராக கிருஸ்ணகோபால் வசந்தரூபன், பொருலாளராக ஜே.மதி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். உபதலைவராக சிவபாதம் கஜேந்திரகுமார், உபசெயலாளராக பாஸ்கரன் கதீசன், போசகராக சக்திவேல்பிள்ளை பிரகாஸ் அதனைத்தொடர்ந்து நிர்வாகசபை உறுப்பினர்களாக எம்.ஜி.ரட்ணகாந்தன், ந.ஜனகதீபன்,எஸ் .சற்சொரூபன், ப.கார்த்தி , இ.தர்சன், ,சு.சசிதரன் ஆகிய ஆறு பேர் தெரிவு செய்யப்பட்டனர்.



கீரிமலை வலைத்தூண்டல் பகுதியில் றோமன் கத்தோலிக்க பாடசாலையின் கால்கோல் விழாவில் பிரதம அதிதியா க கலந்துகொண்ட யாழ். மாநகரசபை உறுப்பினர் லயன் கலாநிதி நா.தனேந்திரன் பாடசாலையில் கல்வி கற்கும் 56 மாணவர்களுக்கும் கற்றல் உபகரணங்களை வழங்கிவைத்தார். (படம் வேலணை குறூப் நிருபர்)

# தமிழகம் செல்ல முற்பட்ட 14 பேர் கைது





**(மன்னார் குறூப் நிருபர்)**

மன்னாரிலிருந்து சட்டவிரோதமாக இந்தியாவிற்கு படகில் செல்ல முற்பட்ட மூன்று குடும்பங்களைச் சேர்ந்த 12 பேர், படகோட்டிகள் இருவர் என 14 பேர் தாழ்வுபாடு கடற்பரப்பில் வைத்து நேற்று புதன் கிழமை (4) அதிகாலை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருகோணமலையைச் சேர்ந்த 7 சிறுவர்கள், 3 பெண்கள், 2 ஆண்கள் உள்ளடங்களாக 3 குடும்பங்களைச் சேர்ந்த 1 2 பேர் மற்றும் மன்னாரை சே ர்ந்த படகோட்டிகள் இருவரும் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட 14 பேரும் நேற்று புதன்கிழமை (4) காலை 5 மணியளவில் மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

மன்னார் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். விசாரணைகளின் பின்னர் இரண்டு படகோட்டிகள் உள்ளடங்களாக 14 பேரும் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# காய்ச்சலினால் 11 மாத குழந்தை உயிரிழப்பு

**சாவகச்சேரி விசேட நிருபர்**

காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்த 11 மாத ஆண் குழந்தையொன்று நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை உயிரிழந்துள்ளது.சிகிச்சைகளுக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு அழைத்து வந்த போதே குழந்தை உயிரிழந்துள்ளது.

கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த 11 மாதம் நிரம்பிய சாந்தகுமார் விஸ்வந்த் என்ற ஆண் குழந்தையே இவ்வாறு பரிதாபமாக உயிரிழந்துள்ளது. உயிரிழந்த சிறுவனது சடலம் பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைகளுக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

# வீட்டுக் கிணற்றில் தவறி வீழ்ந்து மூன்று வயது குழந்தை பலி

**யாழ். விசேட நிருபர்**

வீட்டுக் கிணற்றில் தவறி வீழ்ந்த 3 வயது குழந்தை உயிரிழந்துள்ளது.

யாழ்ப்பாணம், ஊரெழு மேற்கில் நேற்று மாலை 4 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றது. இரண்டையர்களில் ஒருவரான கிருஷ்ணகாந்தன் சித்தாத் (வயது3) என்றகுழந்தையே இவ்வாறு உயிரிழந்தார். இரட்டையர்கள் ஊஞ்சலில் விளையாடிக் கொண்டிருந்துள்ளனர். அவர்களுக்கு பிஸ்கட் கொடுத்து விட்டு தாயார் தேனீர் தயாரிக்க சமையலறைக்குச் சென்று திரும்பி வந்து பார்க்கும் போது ஒருவரை காணவில்லை.

இதனையடுத்து வீட்டு வளவில் தேடிய போது கிணற்றில் தவறி வீழ்ந்தமை கண்டறிப்பட்டது. உடனடியாக மீட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டு சென்ற போதும் குழந்தை ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக மருத்துவ அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# இறுதியுத்தத்தில் பாதிக்கப்பட்ட சிறுமிகள் தங்கியிருந்த வீட்டிலிருந்து வெளியேற்றம்

## கிராமஅலுவலர், பிரதேச செயலக அதிகாரிக்கு எதிராக முறைப்பாடு

**பரந்தன் குறூப் நிருபர்)**

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு செல்வபுரம் பகுதியில் இறுதியுத்தத்தின் போது தாய், தந்தையை இழந்த இரண்டு சிறுமிகள் வசித்து வந்த வீட்டிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட செல்வபுரம் கிராம அலுவலர் பிரிவில் வசித்து வரும் தாய், தந்தையரை இழந்த இரண்டு சிறுமிகள் அவர்களது பாட்டியுடன் வசித்து வந்துள்ளனர். இந்நிலையில் இரண்டு சிறுமிகளும் அவர்கள் வசித்து வந்த வீட்டிலிருந்து கிராமஅலுவலர் மற்றும் பிரதேச செயலக அதிகாரிகளால் வெளியேற்றப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட சிறுமிகள் தெரிவித்துள்ளனர்.

இறுதி யுத்தத்தின்போது முள்ளிவாய்க்கால் பகுதியில் தாயை இழந்த சிறுமிகள் அவர்களது தந்தை மற்றும் பாட்டியுடன் வசித்து வந்துள்ளனர். இவர்களுக்கு கடந்த 2013ஆம் ஆண்டு அரசினால் வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டது. தந்தை கடந்த 2015ஆம் ஆண்டு இரண்டாவது திருமணம் செய்துகொண்டுள்ளார். அவர்களும் அந்த வீட்டிலேயே வசித்து வந்துள்ளனர். இந்நிலையில் தந்தை நோய்வாய்ப்பட்டு கடந்த ஆண்டு இறுதியில் உயிரிழந்துள்ளார். இதனையடுத்து இரண்டு சிறுமிகளும் சிறிய தாயினால் தாக்கப்பட்டு துன்புறுத்தப்பட்டு வந்ததாக பாதிக்கப்பட்ட சிறுமிகள் தெரிவித்துள்ளனர். தற்சமயம் இவர்கள் மல்லாவி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். இது தொடர்பில் ஏற்கனவே மல்லாவி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டு நீதிமன்ற வழக்கொன்றும் நடைபெற்று வருகின்றது. இந்நிலையில் அண்மையில் அவர்கள் தங்கியிருந்த வீட்டிலிருந்து கிராம அலுவலரால் இரண்டு சிறுமிகளும் அவர்களது பாட்டியும் வெளியேற்றப்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்துள்ளனர். எனினும் இதுவரை தீர்வெதுவும் கிடைக்காமையால் வட மாகாண காணி திணைக்களத்திற்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

# வாய்த்தர்க்கம் கத்திக்குத்தில் முடிந்தது; ஒருவர் படுகாயம்

**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் காரைநகர் பகுதியிலுள்ள கள்ளுத்தவறணையில் இளைஞர்களுக்கு இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கத்திக்குத்தில் முடிந்தமையால் இளைஞனொருவர் படுகாயமடைந்துள்ளார்.

சுழிபுரம் பகுதியை சேர்ந்த 28 வயதுடைய இளைஞனே படுகாயமடைந்த நிலையில் காரைநகர் வலந்தலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

காரைநகரிலுள்ள கள்ளுத்தவறணையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு 7 மணியளவில் கள்ளு அருந்திக்கொண்டிருந்த இரு இளைஞர் குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைக்கலப்பாக மாறி, கத்திக்குத்தில் முடிவடைந்துள்ளது.




# இராகலை தோட்ட வைத்தியசாலையை மூடியமையால் மக்கள் அசௌகரியம்



இராகலை தோட்ட வைத்தியசாலையை தோட்ட நிர்வாகம் மூடியமையால் மக்கள் பெரும் அசௌகரியங்களை அனுபவித்துவருவதாக தெரிவிக்கின்றனர்.

மத்துரட்ட பெருந்தோட்ட முகாமைத்துவத்தின் கீழ் இயங்கும் இராகலை இலக்கம் ஒன்று மத்திய பிரிவு தோட்டத்தில் இயங்கிய தோட்ட வைத்தியசாலை கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக தோட்ட நிர்வாகத்தால் மூடப்பட்டுள்ளது.

இராகலை தோட்ட வைத்தியசாலை ஐந்து தோட்டப்பிரிவுகளுக்கு பொதுவான ஒன்றாக காணப்படுகின்றது.

இராகலை இலக்கம் 01,02,சென் லெணாட்ஸ்,டி.சி.தோட்ட பிரிவு, ஆகிய தோட்டங்களைச் சேர்ந்த தொழிலாளர்களின் நலன் கருத்திற்கொண்டு ஆரம்ப காலம் முதல் இந்த வைத்தியசாலை இயங்கி வந்துள்ளதாக தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

பெருந்தோட்டங்களை தனியார் கம்பனிகள் பொறுப்பேற்ற பின்னர் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் ஊடாக வைத்தியசாலைக்கு தேவையான மருந்து வகைகள் வழங்கப்பட்டு வந்தன. அது மட்டுமின்றி தோட்ட வைத்தியசாலையில் நீண்டகாலமாக வைத்தியர் ஒருவர் கடமையாற்றிவருகின்றார்.

இந்நிலையில் வைத்தியசாலையில் கடமையாற்றி வந்த தோட்ட வைத்தியர் (ஈ.எம்.ஏ) கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் திடீரென கெட்டபுலா பிரதேச தோட்டத்துக்கு இடமாற்றம் பெற்று சென்றுவிட்டார்.

இதனையடுத்தே இந்த தோட்ட வைத்தியசாலை மூடப்பட்டது.

வைத்தியசாலைக்கு தேவையான மருந்துகளை தோட்ட நிர்வாகம் பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி நிதியத்தின் ஊடாக கடந்த சில காலமாக முறையாக பெற்றுதராமையால் தோட்ட வைத்தியருக்கு கிடைக்கும் சம்பள பணத்தில் தேவையான மருந்துகளை பெற்று தொழிலாளர்களுக்கு இலவசமாக வழங்கிவந்தார்.

இதனால் பாரிய பொருளாதார பிரச்சினைக்கு முகம் கொடுத்த வைத்தியர் தோட்ட நிர்வாகத்தின் மீது ஏற்பட்ட விரக்தியினால் வேறு தோட்டத்திற்கு இடமாற்றம் பெற்று சென்றதாக தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் தோட்ட வைத்தியரின் பணியை முறையாக முன்னெடுக்க தோட்ட நிர்வாகம் இடம் கொடுக்காது, அலட்சிய போக்கை கடைப்பிடித்து வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். தோட்ட வைத்தியரின் வெற்றிடம் கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக நிரப்ப தோட்ட நிர்வாகம் அக்கறை காட்டவில்லை. (ரமேஸ்)

# பரிசளிப்பு விழா



நூலக அபிவிருத்தி வருடாந்த வேலைத் திட்டத்தின் கீழ் நுவரெலியா பிரதேச சபை ஊடாக இயங்கும் கந்தப்பளை பொது நூலகம் நடத்திய கல்வி அறிவு போட்டிகளுக்கான பரிசளிப்பு வைபவம் தவிசாளர் வேலுயோகராஜ் தலைமையில் கந்தப்பளை ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வுகளில் பிரதேசசபையின் ஆயுர்வேத வைத்தியர் இசுருலியனகே, சபை உறுப்பினர்களான எம்.ராமஜெயம், டி.தமிழ்செல்வன், உட்பட, கந்தப்பளை இலங்கை வங்கி கிளை முகாமையாளர் லக்மாலிபண்டார, பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி.ஜி.விக்கிரமசிங்க ஆகியோருடன் பாடசாலை அதிபர்கள், கிராம சேவகர்கள் நூலக உதவியாளர்கள் என பலரும் பங்குபற்றினர்.

பரிசளிப்பு நிகழ்வில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கிவைக்கப்பட்டன.

# இசைக்கருவிகள் அன்பளிப்பு

காவத்தை தினகரன் விசேட நிருபர்

இசையமைப்பாளர் கீர்த்தி பெஸ்குவல் மூலம் சப்ரகமுவ மாகாண பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக வயலின் இசைக்கருவிகள் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளன.



இசையமைப்பாளர் கீர்த்தி பெஸ்குவல் மூலம் சப்ரகமுவ மாகாண பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக நூறு வயலின் இசைக்கருவிகள் அன்பளிப்பு செய்துள்ளார்.

மாகாண மாணவர்களுக்கு இலவசமாக வயலின் இசைக்கருவிகள் வழங்கி வைக்கும் நிகழ்வு சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தலைமையில் அண்மையில்(29) சப்ரகமுவ மாகாண சபையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

நாட்டில் மிகவும் கஷ்டமான பாடசாலைகளில் சங்கீதம் கற்கும் மாணவர்களுக்காக இலவசமாக ஆயிரம் வயலின் இசைக்கருவிகளை வழங்குவதற்கு இசையமைப்பாளர் கீர்த்தி பெஸ்குவல் நடவடிக்கை எடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ " சப்ரகமுவ மாகாண பிரதான செயலாளர் சுனில் ஜயலத்" மாகாண ஆளுநரின் செயலாளர் எச்.டி.சிசிர உட்பட அரச அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

# இலங்கையில் வாழும் யானைகளுக்கு உயிராபத்து

( இரத்தினபுரி சுழற்சி நிருபர்)



இலங்கையில் வாழ்கின்ற சுமார் 5800 யானைகளில் அரைவாசிக்கும் அதிகமானவை உயிராபத்தை எதிர்கொண்டுள்ளதாக சுற்றாடல் மற்றும் ஜீவகாருண்ய அமைப்புக்கள் கவலை வெளியிட்டுள்ளன.

இலங்கையில் யானைகளின் உயிர்களை பாதுகாக்க எத்தனை அமைப்புக்கள் இருந்தாலும் அவற்றில் எதுவும் யானைகளின் நலன்களில் உண்மையான அக்கறையுடன் செயற்படுவதில்லையென சுற்றாடல் பாதுகாப்பு மைய அமைப்பின் பணிப்பாளர் ஹேமந்த விதானகே குற்றம்சாட்டியுள்ளார்.

இதனால் வருடாந்தம் 200 யானைகள் உயிரிழப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் வனாந்திரங்களில் மட்டுமன்றி சமய நிறுவனங்கள், மிருகக்காட்சி சாலைகள், உல்லா சப்பயணத்துறையிலும் கூட யானைகள் ஈடுபடுத்தப்படுவதாகவும் பொதுவாக அனைத்து இடங்களிலும் இந்த இனம் துன்புறுத்தலுக்கு உட்படுவதாகவும் இவர் சுட்டிக்காட்டுகின்றார். அத்துடன் யானை மனிதன் மோதலால் மனித உயிர்களும் பெருமளவில் உயிரிழப்பதாகவும் இவர் தெரிவித்தார்.

மேலும் இரத்தினபுரி மாவட்டத்தின் உடவளவ சிங்கராஜ வனாந்தரங்களிலும் கல்தோட்டை தியவின்ன ஹம்பேகமுவ பிரதேசங்கள் உட்பட அடர்ந்த காட்டுப்பகுதிகளிலும் கணிசமான யானைகள் மனிதனின் செயற்பாடுகளால் அநியாயமாக உயிரிழப்பதாக ஆவணத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# ஆசிரிய நியமனங்கள் வழங்கும் நிகழ்வு





(அக்குறணை குறூப் நிருபர்)

தேசிய கல்வியியற் கல்லூரிகளிலிருந்து வெளியேறிய டிப்ளோமாதாரிகளுக்கு ஆசிரிய நியமனக்கடிதங்கள் வழங்குதல் மற்றும் ஆசிரிய உதவியாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குதல் என்பன கண்டி பல்லேகலை மத்திய மாகாண சபை கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

மத்திய மாகாண ஆளுநர் லலித் யுகமகே தலைமையில் இடம்பெற்ற இவ்வைபவத்தில் கல்வி மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரனவும் கலந்துகொண்டார். 544 பேருக்கு இவ்வாறு நியமனங்கள் வழங்கப்பட்டன.

# தொலைத்தொடர்பு வயர்களால் ஆபத்து

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

நிவித்திகல கலவான வீதியில் கரவிட்ட பிரதேசத்தில் பிரதான வீதிக்கு குறுக்காக டெலிகொம் தொலை தொடர்பு வயர்களின் மீது மரமொன்று சரிந்து வீழ்ந்துள்ளது. இம் மரத்தினால் வீதியில் செல்லும் பயணிகளுக்கு அல்லது வாகனங்களுக்கு ஆபத்துக்கள் இடம்பெறலாம் என பிரதேசவாசிகள் அச்சம் தெரிவிக்கின்றனர்.



எனவே இவ்விடயத்தில் தோட்ட நிர்வாகம், டெலிகொம் நிறுவனம், நெடுஞ்சாலைகள் அமைச்சு போன்றன கவனம் எடுத்து ஆபத்துக்கள் இடம்பெறாத வகையில் மரத்தினை அகற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும். இவ்வாறே இன்னும் மரங்கள், மரக்கிளைகள் வீதியில் அல்லது தொலைபேசி, மின் வயர்களின் மீது விழுந்து ஆபத்துக்கள் இடம்பெறாதவாறு முன்னேற்பாடுகளை மேற்கொள்ளுமாறு இவர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# பணிக்கு சென்றவர் மாரடைப்பால் மரணம்

மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்

ஓல்ட்டன் தோட்டத்தில் மாரடைப்பால் தோட்ட தொழிலில் ஈடுபட்ட தொழிலாளியொருவர் உயிரிழந்துள்ளார். மஸ்கெலியா பொலிஸ் பிரிவிலுள்ள சாமிமலை ஹொரனபிலான்டேசனுக்கு உரித்தான ஓல்ட்டன் தோத்திலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஓல்ட்டன் தோட்ட மின்னா பிரிவில் நேற்று காலை ஓய்வு பெற்ற தொழிலாளி ஒருவர் பணிக்கு சென்றுள்ளார்.

எனினும் அவர் வீடு திரும்பாமையால் அவரது மனைவி மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தில் புகார் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் ஆலோசனைக்கு அமைய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.





அவுஸ்திரேலியா வன்னி ஹோப் நிறுவனம் ஹப்புத்தளை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் பொருளாதாரரீதியாக பாதிக்கப்பட்ட 100 குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதிகள் கையளித்தனர். (படம்: ஊவா சுழற்சி நிருபர்)

# கேகாலை மாவட்ட இலக்கியக்களம்



அவிசாவளை நிருபர்

கேகாலை மாவட்டத்தின் முதாவது இலக்கியக்களம் நேற்றுமுன்தினம் எஹலியகொடை தமிழ் வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

இலக்கியச் சந்திப்பானது மலையகத்தின் மூத்த படைப்பாளியும் சாகித்ய ரத்னா விருதுப்பெற்றவருமான மு. சிவலிங்கம் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் வரவேற்புரையை எஹெலியகொடை தமிழ் வித்தியாலய அதிபர் ராசையா தெய்வராஜ் வழங்க, கருத்துக்களை '"என் எழுத்துக்களால் நான் கண்ட சமூக மாற்றம்" எனும் தலைப்பில் மலையக எழுத்தாளர் மொழிவரதனும், சிறுகதை எழுத்தாளரும் ஆசிரியருமான சிவனு மனோகரனும், அபிவிருத்தி உத்தியோகஸ்தர் A.C.R.ஜோன் ஆகியோரும் வழங்கினர், "செயற்பாட்டு இலக்கியத்தின் சிந்தனையும் செயற்பாடும்" எனும் தலைப்பில் காவேரி கலாமன்றத்தின் நிறைவேற்று இயக்குனர் வண. T.S. யோசுவா வழங்கினார்.

அடுத்து, அருட்பணி பெனி. யே.ச. எழுதிய " ஒரு தோட்டம் ஒரு பள்ளிக்கூடம் சில வீடுகள்" எனும் நாவலின் மதிப்பீடு இடம்பெற்றது. இதனை கிளிநொச்சி கலைமகள் தமிழ் வித்தியாலய அதிபர் பெருமாள் கணேசனும், நுவரெலிய பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகஸ்தர் எஸ். சுதாஜினியும் வழங்கினர்.

# இரசாயன உரம் இன்மையால் தேயிலை தோட்ட உரிமையாளர்கள் பாதிப்பு

பலாங்கொடை தினகரன் நிருபர்)

தேயிலை கன்றுகளை தயாரிக்கும் பலாங்கொடை பகுதி தேயிலை தோட்ட உரிமையாளர்கள் டி65 ரக இரசாயன உரம் சந்தையில் இன்மையால் பெரும் சிரமத்துக்குள்ளாகியுள்ளதாக உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர்.

தேயிலை கன்றுகளை பைகளில் இட்டு குறிப்பிட்ட தினங்கள் நிறைவு பெற்றவுடன் டி65 ரக உரத்தினை நீரில் கலந்து தேயிலை கன்றுகளுக்கு ஊற்ற வேண்டுமென தேயிலை கன்றுகளை தயாரிக்கும் உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர்.

எனினும் இரசாயன உரம் தடை செய்யப்பட்டதையடுத்து தேயிலை கன்றுகளுக்கு பயன்படுத்தும் இரசாயன உரமான டி65 உரம் இல்லையென அவர்கள் தெரிவித்தனர். இதன் காரணமாக அவர்கள் பல கஷ்டங்களை அனுபவித்து வருவதாகவும் மேலும் தெரிவித்தனர்.

# கிழக்கின் குரல்



138 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில்

## மட்டக்களப்பில் முன்னெடுக்கப்படவுள்ள 200 MW (மெகாவோட்ஸ்) மின் உற்பத்தி





ஜவ்பர்கான் மட்டக்களப்பு குறூப் நிருபர்

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெளிநாட்டு முதலீட்டாளர்களைக் கொண்டு 138 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் சூரிய சக்தியினைப் பயன்படுத்தி 200 MW (மெகாவோட்ஸ்) மின்சாரத்தை உற்பத்தி செய்யும் திட்டத்திற்கான துரித நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயும் விசேட கூட்டம் நேற்றையதினம் கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டுமான வசதிகள் இராஜாங்க அமைச்சரும் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு இணைத்தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையில் மட்டக்களப்பு மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. அதற்கிணங்க இத்திட்டத்தினை விரைவாக முன்னெடுப்பது மற்றும் அதற்கான அனுமதி, இட ஒதுக்கீடு போன்ற பல முக்கிய விடயங்கள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இத்திட்டமானது எமது நாட்டில் முதலீடு செய்ய ஆர்வமாகவுள்ள முதலீட்டாளர்களுக்கான ஆர்வத்தினை தூண்டுவதாக அமைவதுடன் குறித்த திட்டம் அமையவுள்ள இடத்தில் பல தொழில் வாய்ப்புக்களையும் உண்டுபண்ணவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதன் மூலமாக எதிர்காலத்தில் எமது மாவட்டத்திற்கு தேவையான மின்சாரத்தினை தடையின்றி வழங்கக்கூடிய சந்தர்ப்பமும் எமது நாட்டிற்கான மின்சார உற்பத்திக்கு சிறிதளவான பங்களிப்பினை வழங்கக்கூடிய வாய்ப்பும் உருவாகவுள்ளது.

குறித்த கூட்டத்தின் போது மாவட்ட அரசாங்க அதிபர் கருணாகரன் உட்பட பிரதேச செயலாளர்கள், உதவித் திட்டமிடல் பணிப்பாளர்கள் , துறைசார் அதிகாரிகள், முதலீட்டாளர்கள், தொழில்நுட்பவியலாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## பெண் தலைமைத்துவ குடும்பத்தவர்களுக்கு உலர் உணவுப்பொதிகள் வழங்கி வைப்பு



( பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர் )

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ.பேரவையினால் பாலமுனை வை.எம்.எம்.ஏ கிளைக்கு வழங்கி வைக்கப்பட்ட. உலர் உணவுப்பொதிகளை வசதி குறைந்த விதவைக் குடும்பத்தவர்களுக்கு வழங்கி வைக்கும் நிகழ்வு பாலமுனையில் நடைபெற்றது.

பாலமுனை வை.எம்.எம்.ஏ கிளையின் உப தலைவர் கவிஞர் எம்.எப்.பர்சாத் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பேரவையின் அம்பாறை மாவட்டப் பணிப்பாளர் றியாஸ் இஸ்மாயில். தேசிய உப தலைவர் எஸ்.தஸ்தகீர். செயற்திட்ட தவிசாளர் கே.எல். சுபையிர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது பத்து பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கான ஆறாயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப்பொதிகள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

## பெருநாள் தொழுகைக்கு வந்த பெண் மரணம்

கல்குடா தினகரன் நிருபர்

புனித நோன்புப் பெருநாள் தொழுகையில் ஈடுபட்ட பெண்ணொருவர் மரணமடைந்துள்ள சோகச் சம்பவமொன்று நேற்றுமுன்தினம் (3) இடம்பெற்றுள்ளது.

வாழைச்சேனை பிறைந்துறைச்சேனை பதுரியா பள்ளிவாசலில் வைத்தே இந்த மரணச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குடும்பத்தோடு பெருநாள் தொழுகைக்காக வந்த பிறைந்துறைச்சேனை பகுதியைச் சேர்ந்த 74 வயதுடைய முகம்மது இப்றாஹீம் மைமூனாச்சி எனும்

9 பிள்ளைகளின் தாய் ஒருவரே பள்ளிவாசலில் வைத்து மரணமடைந்துள்ளார்.

இதேபோன்று, ஒரு நோன்புப் பெருநாள் தினத்தில் மரணமடைந்த பெண்ணின் மகள் ஒருவர் விபத்தொன்றில் மரணமடைந்த சோகச் சம்பவம் ஒன்றும் இடம்பெற்றதாக குடும்பத்தினர் தெரிவித்தனர்.

இவ்வாறு மரணமடைந்த பிறைந்துறைச்சேனையைச் சேர்ந்த மைமூனாச்சியின் ஜனாஸா நேற்றுமுன்தினம் (3) வாழைச்சேனை ஹைராத் பள்ளிவாசல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கிராம உத்தியோகத்தர்கள் சுகயீன விடுமுறை போராட்டம்



தம்பலகாமம் குறூப் நிருபர்

திருகோணமலை மாவட்டம், கிண்ணியா பிரதேச செயலாளர் பகுதியில் உள்ள கிராம சேவகர்கள் இன்று (04) சுகயீன விடுமுறை போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள். இதன் காரணமாக கிண்ணியா பகுதியில் உள்ள 31 கிராம சேவகர் பிரிவு அலுவலகங்களும் மூடப்பட்டுள்ளதுடன் மக்களுக்கான சேவைகளும் ஸ்தம்பிதமடைந்துள்ளன. பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தே குறித்த கிராம உத்தியோகத்தர்கள் சுகயீன விடுமுறையில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு கோரியும் இன்றைய தினம் கொழும்பில் இடம் பெறும் கிராம உத்தியோகத்தர்களின் தொழிற் சங்கத்துக்கு வலுசேர்க்கும் முகமாகவும் இந்த சுகயீன விடுமுறை போராட்டம் இடம்பெற்றுள்ளமையும் தெரியவருகிறது.

டெங்கு நோய் தொடர்பாக

## பொது மக்கள் அவதானமாக செயற்படுமாறு டாக்டர் ஐ.எல்.எம். றிபாஸ் கோரிக்கை

(ஒலுவில் விசேட நிருபர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் டெங்கு நோய் தொடர்பாக பொது மக்கள் மிக அவதானமாக செயற்படுமாறு, கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் ஐ.எல்.எம். றிபாஸ் தெரிவித்தார்.

தற்போது அடிக்கடி மழை பெய்யது வருவதால் டெங்கு நுளம்பு பரவக் கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும், அண்மைக்காலமாக டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டு வருவதாகவும் கூறினார்.

பொதுச் சுகாதார பரிசோதகர்கள், பொலிஸார் மற்றும் சிவில் பாதுகாப்பு குழுவினர், டெங்கொழிப்பு செயலணி, சமூக மட்ட தலைவர்கள் ஆகியோர் ஒவ்வொரு வீடு வீடாகச் சென்று டெங்கு நோய் தொடர்பாக மக்களுக்கு விழிப்பூட்டல் செய்யவுள்ளதாகவும் கூறினார்.

நுளம்பு உருவாகாமல் தடுப்பதற்கு சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்துக்கொள்தல், அவற்றின் வதிவிடத்தை முற்று முழுதாக அழித்தல், வதிவிடத்தில் இனம் பெருகாது கட்டுப்படுத்தல் என்பன முக்கியமானது.



டெங்கு நுளம்பு பரவுவதற்கு ஏதுவான வெற்றுக்காணிகளை வைத்திருப்பவர்கள் இரண்டு வார காலத்திற்குள் துப்பரவு செய்ய வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

பொதுமக்கள் விழிப்புடன் செயல்பட்டு வீடுகளில் தேங்கியுள்ள குப்பைகள், நீர் தங்கியுள்ளஇடங்கள் போன்றவற்றை அகற்றி டெங்கு நுளம்புகள் பெருகுவதற்கு இடம் கொடுக்காத வகையில் துப்புரவாக தமது இடங்களை வைத்து கொள்ளுமாறு கேட்டுள்ளார்.

கொக்கட்டிச்சோலை – சாமந்தியாறு பகுதியில்

## யானை தாக்கி ஒருவர் மரணம்



புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

கொக்கட்டிச்சோலை சாமந்தியாறு பகுதியில் யானை தாக்கி ஒருவர் மரணமான சம்பவம் 3ம் திகதி இரவு இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் கொக்கட்டிச்சோலை கிராமத்தினைச் சேர்ந்த 5 பிள்ளைகளின் தந்தையான வெள்ளத்தம்பி குமரகுரு (வயது 72) என்பவரே உயிரிழந்துள்ளார்.

இரவு மூன்று யானைகள் குறித்த பகுதிக்குள் நுழைந்து, வீட்டில் இருந்த மரங்களையும், பயிர்களையும் சேதப்படுத்திவிட்டு, குறித்த நபரின் வீட்டின் முன்னால் உள்ள காணியில் உலாவியுள்ளது.

இதன்போது, குறித்த நபர் வீட்டை விட்டு வெளியில் சென்ற போது, யானை தாக்கியுள்ளது. இதில் சம்பவ இடத்திலேயே குறித்த நபர் மரணமடைந்துள்ளார்.

## மாளிகைக்காடு பிரதேசத்தில் பாரிய குப்பை மேடு

( மாளிகைக்காடு குறூப் நிருபர்)

காரைதீவு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மாளிகைக்காடு அல் ஹுசைன் வித்தியாலயத்திற்கு அருகில் பாரிய குப்பை மேடொன்று உருவாகி வருகின்றது.

மாதக் கணக்கில் காரைதீவு பிரதேச சபையினால் குப்பைகள் அகற்றப்படாததனால் நாளுக்கு நாள் குப்பைகள் சேரும் அளவு அதிகரித்து இன்று கட்டாக்காலி மாடுகளின் வாழிடமாக மாறி சகிக்க முடியாத துர்நாற்றம் வீசுகின்றது.

பாரிய சுகாதார சீர் கேடு இடம்பெற்று வருவதுடன் தொற்று நோய்களும் பரவ வாய்ப்பு ஏற்படலாம் என்ற அச்சமும் பிரதேசவாசிகளிடம் தோன்றியுள்ளது.

இந்த குப்பை மேடு காணப்படும் இடத்திற்கு அண்மையில் மாளிகைக்காடு அல் ஹுசைன் வித்தியாலயம் , சுகாதார சிகிச்சை நிலையம், மாளிகைக்காடு பொதுச் சந்தை மற்றும் தனியார் கல்வி நிலையம் என்பன அமைந்துள்ளன.

தினசரி நூற்றுக்கும் அதிகமான பாடசாலை மாணவர்கள் , ஆசிரியர்கள் , பாதசாரிகள் , பொதுமக்கள் மற்றும் நோயாளிகள் பயன்படுத்தும் வீதியிலேயே இந்த குப்பை மேடு அமைந்துள்ளதால் தினசரி பலவிதமான சுகாதார பிரச்சினைகளுக்கு பலரும் முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தில் கூடிய கவனம் செலுத்தி இக்குப்பை மேட்டை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பிரதேசவாசிகள் கேட்டுள்ளனர்.

## அகில இலங்கை மொழித்தினங்களை நடத்த கல்வி அமைச்சு நடவடிக்கை

நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்

கொரோனா காரணமாக கடந்த பல வருடமாக நடைபெறாமல் இருந்த அகில இலங்கை மொழித் தினங்களை நடாத்த கல்வி அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதோடு அவை குறித்த சுற்றுநிருபங்களையும் அனுப்பி வருகின்றன..

அகில இலங்கை தமிழ்மொழித்தின போட்டிகள் தொடர்பான விபரங்கள் ஏற்கனவே அமைச்சின் உத்தியோகபூர்வ வலைத்தளத்தில் இடப்பட்டுள்ளதோடு தேவையான பாடசாலைகள் அதனை பதிவிறக்கம் செய்ய முடியுமெனவும் கேட்டுள்ளது.

பாடசாலை மட்டம் கோட்டமட்டம் வலயமட்டம் மாவட்டமட்டம் மாகாண மட்டம் மற்றும் தேசியமட்டமென போட்டிகள் இடம்பெறவுள்ளதுடன் ஒவ்வொரு மட்டத்திலும் திறமைகாட்டுவோருக்கு சான்றிதழ் வழங்கப்பட்டு வருவது ஒவ்வொரு ஆண்டிலும் இடம்பெறுவது வழக்கமாகும். ஒருபாடசாலையின் வளர்ச்சியில் பெறுபேற்று அடைவுமட்ட வளர்ச்சியில் (output) இணைப்பாடவிதான செயற்பாடுகள்(co curriculam )முக்கியத்துவம் பெறுகின்றன.

மொழித்தினம் இல்ல விளையாட்டுப்போட்டிகள் சுற்றுலா மாணவர்மன்றம் மாணவர் பாராளுமன்றம் ஆகியலை இணை பாபாடவிதான செயல்பாடுகளாக விளங்குகின்றன.

இணைப்பாடவிதான செயல்பாடுகள் மூலம் மாணவர் மத்தியில் இவைமறைகாயாக மறைந்து கிடக்கும் ஆற்றல்கள் வெளிப்படுத்தப்படுகின்றன..

இவ்வாறான செயல்பாடுகளில் ஈடுபட்ட பலர் இன்று பத்திரிகையாளர்களாக பேச்சாளர்களாக விளையாட்டுவீரர்களாக மிளிர்ந்து நிற்பதை நாம் காணுகிறோம்.

இதேவேளை முஸ்லிம்சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நீண்டகால இடைவெளிக்குப் பிறகு தேசிய மீலாதுன் நபிதின போட்டிகளை நடாத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கோண்டு வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

## வெள்ளியன்று நவோத்ர சகஸ்ர சத மகா சங்காபிஷேகம்

( காரைதீவு குறூப் நிருபர் )

வரலாற்று பிரசித்தி பெற்ற மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்பாள் ஆலயத்தில் முதலாவது நவோத்ர சகஸ்ர சத மகா சங்காபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை (06) நடைபெறவுள்ளது.



ஆலயத்தின் முதலாவது கும்பாபிஷேகம் கடந்த ஏப்ரல் மாதம் ஆறாம் தேதி சிறப்பாக நடைபெற்றமை அறிந்ததே.

தற்போது மண்டலாபிஷேக பூஜைகள் நடைபெற்று வருகின்றன. ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஷ்வர குருக்கள் தலைமையில் 1008 சங்குகளுடன் நாளை காலை 08 மணிக்கு எட்டு மணிக்கு சங்காபிஷேக கிரியைகள் ஆரம்பமாகி, முற்பகல் 11 மணியளவில் சங்காபிஷேகம் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

சங்காபிஷேகத்தில் கலந்து கொள்ளும் அடியார்களுக்கு மீனாட்சி அம்மனின் திருவுருவப்படம் பொறித்த அட்டை வழங்கப்பட இருக்கின்றது என ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது.

## குருக்கள் மடம் குரு நானக் சேவா ஆலயத்தில் வழிபாடுகளில் ஈடுபட்ட வெளிநாட்டு பக்தர்கள்

(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

குருக்கள்மடம் குரூ நன்க் சேவா ஆலயத்தில் வழிபாடுகளில் ஈடுபட்ட வெளிநாடுகளின் பக்தர்கள்.

மட்டக்களப்பு மாவட்டம் குருக்கள்மடம் குருத்துவார் (குரு நானக்) ஆலயத்திற்கு வெளிநாட்டுகளின் பக்கதர்கள் குழு ஒன்று செவ்வாய்கிழமை(03) மாலை வருகை தந்து வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

இந்தியாவிலிருந்து வருகை தந்த சீக்கியர்களால் நிருமாணிக்கப்பட்டு வழிபாடு செய்யப்பட்டு வருவது குருக்கள்மடம் குருத்துவார் (குரு நானக்) ஆலயமாகத் திகழ்கின்றது. இந்நிலையில் இந்தியாவிலிருந்து சென்று தற்போது கனடாவில் வாழ்ந்து வரும் பிரபல யோகா பயிற்றுவிப்பாளரும், குரு நானக் பக்தருமான சுவாமி அவர்கள் ஜேர்மன், மற்றும ஜப்பான், ஆகிய நாடுகளைச் சேர்ந்த அவரின் சீடர்களுடன் ஆலயத்திலும், குருநானக் மதகுரு அவர்கள் காலத்தில் தேன்றிய தேத்தா மரத்தையும் வழிபாடு செய்தார்.

500 வருடங்களுக்கு முன்ன சீக்கிய மதகுகு குருநானக் அவர்கள் மன்னார், அனுராதபுரம், மட்டக்களப்பு, குருக்கள் மடம் ஆகிய பிரதேசங்களூடாக கதிர்காமத்திற்கு கால்நடையாகச் சென்றவேளை அவர் குருக்கள்மடம் கிராமத்தில் தங்கியிருந்து சென்றதாகவும், அதன் ஞாபகார்தமாக குருக்கள்மடத்தில் குறித்த குருத்துவார் (குரு நானக்) ஆலயம் அமைக்கப்பட்டு வழிபாடு செய்யப்பட்டு வரப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## மருத்துவ உபகரணங்கள் வழங்கி வைப்பு

முள்ளிப்பொத்தானை குறூப் நிருபர்

திருக்கோணமலை மாவட்ட லயன் கழகத்தினரால் கழக உறுப்பினர்கள் அனைவரினதும் பங்களிப்புடன் கொரோனா மற்றும் ஏனைய அவசர சிகிச்சைகளுக்கான மருத்துவ உபகரணங்கள் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு வழங்கிவைக்கப்பட்டது.

திருக்கோணமலை மாவட்ட லயன் கழக ஆளுநர் லயன் பூஜித மற்றும் மாவட்ட பிராந்தியத் தலைவர் லயன் டாக்டர் ப.சுரேஷன் கந்தவேல் ஆகியோரின் தலைமையில் இந்நிகழ்வுகள் நடைபெற்றன.

இதன்போது மூன்று நவீன தொழில்நுட்ப கட்டில், ஒக்சிசன் சிலிண்டர் மற்றும் மருத்துவ உபகரணங்கள் வைத்தியசாலை பணிப்பாளர் டாக்டர் ஐகத்திடம் வழங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்விற்கு முன்னாள் ஆளுநர் லயன் ஜனரஞ்சன், பிராந்தியத் தலைவர் லயன் டாக்டர் ப.சுரேஷன் கந்தவேல், லயன் க.திருச்செல்வம்,வெளிமாவட்ட லயன் கழக உறுப்பினர்கள், லயன் சிரேஷ்ட உறுப்பினர்கள், நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட அனைத்து லயன் கழக உறுப்பினர்கள் என பலர் கலந்துகொண்டனர்.



# சர்வதேச செய்திகள்

## வடகொரியா மீது புதிய தடை விதிக்கத் திட்டம்

ஐ.நா பாதுகாப்பு சபை, வட கொரியா மீது புதிய தடைகளை விதிக்கும் தீர்மானம் குறித்து இம்மாதமே வாக்களிக்க வேண்டும் என்று அமெரிக்கா கேட்டுக்கொண்டுள்ளது.



அதற்கான நகல் தீர்மானத்தைக் கடந்த மாதம் அமெரிக்கா வெளியிட்டிருந்தது.

வட கொரியாவில் இறக்குமதியாகும் புகையிலைத் தொகுப்புகளைத் தடைசெய்யுமாறும், வட கொரியாவின் எண்ணெய் ஏற்றுமதிகளைப் பாதியாகக் குறைத்துக்கொள்ளும்படியும் அது பரிந்துரைத்திருந்தது.

ஆனால் வட கொரியா மீது கூடுதலான தடைகளை விதிக்கக்கூடாது என்று ரஷ்யாவும் சீனாவும் ஏற்கனவே மறைமுகமாகக் குறிப்பிட்டுள்ளதாய்க் கூறப்படுகிறது.

வட கொரியா அண்மையில் புதிய புவியீர்ப்பு ஏவுகணைச் சோதனைகளை நடத்தியது குறித்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் அமெரிக்கத் தூதர் லிண்டா தோமஸ்–கிரீன்பீல்ட் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையை மே மாதம் முழுவதும் அமெரிக்கா வழிநடத்துகிறது. ஆகவே இம்மாதம் அந்தத் தீர்மானத்தை முன்வைக்கப்போவதாக அது கூறியது.

## நோயாளியை பிணப்பையில் இட்ட 4 அதிகாரிகள் நீக்கம்



ஷாங்ஹாயில் உள்ள பராமரிப்ப இல்லம் ஒன்றில் இருந்து உயிரிழந்ததாக நினைத்து வயதான நோயாளி ஒருவரை பிண வண்டியில் ஏற்றிய நிலையில் நான்கு அதிகாரிகளை சீன மாவட்ட நிர்வாகம் பணி நீக்கம் செய்துள்ளது.

சவச்சாலை ஊழியர்கள் இருவர் பிணப்பை ஒன்றை வாகனத்துக்குள் வைக்கும் வீடியோக்கள் கடந்த ஞாயிறன்று இணையளத்தில் வெளியானது.

பின்னர் அந்த ஊழியர்கள் பிணப்பையை திறந்தபோது நோயாளி இன்னும் உயிரோடு இருப்பதாக ஒருவர் கூறுவது வீடியோவில் பதிவாகியுள்ளது. இந்த சம்பவம் சீன சமூக ஊடகத்தில் கோபத்தைத் தூண்டியுள்ளது.

ஷங்ஹாயின் புடுவோ மாவட்ட அதிகாரிகள் இந்த சம்பவத்தை உறுதி செய்திருப்பதோடு, அந்த நோயாளி மருத்துவமனையில் தற்போது நிலையான உடல் நிலையோடு இருப்பதாக தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் ஐந்து அதிகாரிகள் மற்றும் ஒரு மருத்துவர் மீது விசாரணைகள் நடத்தப்படுவதாக மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

## பாக். தண்ணீர் நெருக்கடிக்கு தீர்வுகாண சீனா ஒத்துழைப்பு

சீன – பாகிஸ்தான் பொருளாதார வழித்தடத் திட்டத்தில் கராச்சி சுற்று வட்ட ரயில்வே திட்டத்தை உள்ளடக்குமாறு சீனாவிடம் கோரிக்கை விடுத்துள்ள பாகிஸ்தான், துறைமுக நகரான கராச்சி நீண்ட காலமாக முகம் கொடுத்து வரும் சுத்தமான தண்ணீர் பற்றாக்குறைக்கு தீர்வு காணும் வகையில் உவர் நீர் சுத்திகரிப்பு கட்டமைப்பை ஸ்தாபிக்க உதவுமாறும் கேட்டுள்ளது.



இந்நிலையில் பாகிஸ்தானுக்கான சீன விவகாரங்களுக்குரிய பொறுப்பதிகாரி பாங் சுன்க்ஸூ, பாகிஸ்தானில் தண்ணீர் தொடர்பான வேலைத் திட்டங்களுக்கு சீனா ஒத்துழைப்பு நல்கும் என உறுதியளித்துள்ளார்.

பாகிஸ்தானுக்கான சீன விவகாரங்களுக்குரிய பொறுப்பதிகாரி பாங் சுன்க்ஸூவிடன் திட்டமிடல், அபிவிருத்தி மற்றும் சிறப்பு முயற்சிகளுக்கான மத்திய அமைச்சர் பேராசிரியர் அஹ்சன் இக்பால் நடாத்திய சந்திப்பின் போதே இந்த உறுதிமொழி அளிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் அதிக மக்கள் தொகை கொண்ட நகரான கராச்சி நீண்ட காலமாக கடுமையான தண்ணீர் பற்றாக்குறை நெருக்கடிக்கு முகம் கொடுத்து வருவது குறிப்பிடத்தக்கது.

## இந்திய 'கோதுமை' ஏற்றுமதி அதிகரிப்பு

கடந்த ஒரு தசாப்தத்திற்கு மேலான காலத்தில் இந்திய விவசாயி ராஜசிங் பவார் அரச கையிருப்புக்கு பதில் வர்த்தகர்களுக்கு தமது புதிய கோதுமை பயிரை விற்பனை செய்துள்ளார். உலக கோதுமை விலை இந்திய விநியோகஸ்தர்களுக்கு இலாபமீட்டும் ஒன்றாக மாறியிருப்பதே இதற்குக் காரணமாகும்.




உக்ரைன் மீதான ரஷ்ய படையெடுப்பைத் தொடர்ந்து பயிர்ச்செய்கையாளர்களின் பயிர்களுக்கு அதிக விலை கிடைப்பதோடு இது அரச தானிய பெறுகை நிறுவனத்திற்கு இருந்த அழுத்தத்தை குறைத்துள்ளது.

"நீண்ட காலத்திற்கு பின் குறைந்தபட்ச மானிய விலையை விடவும் அதிக விலைக்கு வாங்க வர்த்தகர்கள் முன்வந்துள்ளனர்" என்று 55 வயதான பவார் தெரிவித்தார்.

## முன்னோக்கிச் செல்லும் இந்திய - அமெ. உறவு

அடுத்த தசாப்தங்களில் மிக முக்கியமான மற்றும் அடித்தளம் கொண்ட கூட்டணியாக இந்தியா மற்றும் அமெரிக்கா இருக்கும் என்று அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டனி பிளிங்கன் தெரிவித்துள்ளார்.



அரச, வெளிநாட்டு செயற்பாடுகள் மற்றும் அது சார்ந்த நிகழ்ச்சிகள் தொடர்பான செனட் உப குழு விசாரணையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்திய – அமெரிக்க உறவு பற்றி பிளிங்கன் கூறும்போது, "பல நாடுகள் தற்போது தங்களின் சில உறவுகள் மற்றும் அவர்களின் சில நலன்களை குறிப்பாக ரஷ்யாவுடனான உறவு பற்றி மீளாய்வு செய்கின்றன. இந்தியாவை பொறுத்தவரை அவர்களுடனான உறவு பல தசாப்தங்கள் நீண்டது" என்றார்.

# ரஷ்ய எண்ணெய் மீது தடை: ஐரோப்பிய திட்டம் வெளியீடு

உக்ரைன் போருக்கு எதிரான பதில் நடவடிக்கையாக ரஷ்ய எண்ணெய்க்கு ஐரோப்பிய ஒன்றியம் படிப்படியாக தடை விதிக்கும் என்று ஐரோப்பிய ஆணைய தலைவர் உர்சுலா வொன் டெர் லெயேன் தெரிவித்துள்ளார்.

எனினும் இந்த முன்மொழிவுக்கு ஏகமனதாக ஒப்புதல் தேவை என்பதோடு இது கடும் விவாதத்தை ஏற்படுத்தும் என்று நம்பப்படுகிறது.

பிரான்ஸின் ஸ்ட்ரஸ்பேர்கில் உள்ள ஐரோப்பிய பாராளுமன்றத்தில் உரையாற்றிய வொன் டெர் லெயேன் இதனைத் தெரிவித்தார். இதில் 27 அங்கத்துவ நாடுகளில் சில நாடுகள் எரிசக்திக்காக ரஷ்யாவில் அதிகம் தங்கி இருப்பதால் இந்தத் தடை இலகுவானதாக அமையாது என கூறப்படுகிறது.



எனினும் ஆறு மாதத்திற்குள் ரஷ்யாவின் மசகு எண்ணெய்யை முழுமையாக கைவிடவும் ஆண்டு இறுதியில் சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய்யை கைவிடவும் ஐரோப்பிய ஒன்றியம் திட்டமிட்டுள்ளது.


"ஒழுங்கான வடிவம் ஒன்றில் ரஷ்ய எண்ணெய்யை கைவிடுவதை நாம் உறுதி செய்வோம்" என்று வொன் டெர் லெயேன் கூறினார். ரஷ்யாவுக்கு எதிரான ஆறு கட்ட தடைகளை ஐரோப்பிய பாராளுமன்றத்தில் முன்வைத்து உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

எனினும் ரஷ்ய எரிபொருள்கள் மீதான தடைக்கு ஹங்கேரி எதிர்ப்பு தெரிவித்துள்ளது. இந்நிலையில் ரஷ்ய எண்ணெய்யில் அதிகம் தங்கியுள்ள ஸ்லோவாக்கியா மற்றும் ஹங்கேரிக்கு இந்த தடையில் இருந்து விலக்கு அளிப்பது பற்றி அவர் எந்த கருத்தும் கூறவில்லை. எனினும் இந்த நாடுகள் மாற்று ஆதாரம் ஒன்றை பெறுவதற்கு நீண்ட கால அவகாசம் வழங்கப்பட வாய்ப்பு உள்ளது.

## 33 ஆண்டுகளுக்கு முந்தைய கொலைக்கு சிறை தண்டனை

அமெரிக்காவின் சிட்னியில் உள்ள குன்றுகளில் மூன்று தசாப்தங்களுக்கு முன் சடலமாக மீட்கப்பட்ட அமெரிக்க நாட்டவரான ஸ்கொட் ஜோன்சனின் கொலையாளிக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

33 ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்ற இந்தக் கொலை தொடர்பில் ஸ்கொட் வைட்டுக்கு கடந்த செவ்வாயன்று அதிகபட்சம் 12 ஆண்டுகள் மற்றும் ஏழு மாதங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.



ஜோன்சனின் மரணம் ஒரு தற்கொலை என்று ஆரம்பத்தில் கூறப்பட்டபோதும் அவரது குடும்பத்தினர் அதனை நம்பாததோடு அதற்கு எதிராக தொடர்ந்து போராடினர்.

1988 ஆம் ஆண்டு இந்தக் கொலை இடம்பெற்றபோது 18 வயதாக இருந்த வைட், தாம் ஜோன்சனை மதுபான விடுதி ஒன்றில் சந்தித்ததாக குறிப்பிட்டுள்ளார். இதனைத் தொடர்ந்து இருவரும் அந்த குன்று பகுதிக்கு சென்றிருப்பதோடு அங்கு இருவருக்கு சண்டை ஏற்பட்டதாகவும் ஜோன்சன் குன்றிலிருந்து விழுந்ததாகவும் வைட் கூறியுள்ளார்.

எனினும் ஜோன்சன் தாக்கப்பட்டதாலேயே குன்றிலிருந்து விழுந்திருப்பதாக நீதிபதி குறிப்பிட்டுள்ளார்.

## தம்பதியைக் கொன்றவருக்கு மரணதண்டனை நிறைவேற்றம்

கால் நூற்றாண்டுக்கு முன்னர் தம்பதியரை கொலை செய்ததற்காக மூன்று வெவ்வேறு தடவைகள் மரண தண்டனை விதிக்கப்பட்ட ஆடவர் ஒருவருக்கு கடந்த செவ்வாய்க்கிழமை அமெரிக்காவின் மிசோரி மாநிலத்தில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.



56 வயதான கார்மன் டெக் மீது உள்ளூர் நேரப்படி மாலை 6.10 மணிக்கு விச ஊசி செலுத்தப்பட்டதாக சீர்திருத்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டில் அமெரிக்காவில் இதுவரை மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட ஐந்தாவது நபராக டெக் உள்ளார்.

டெக் 1996 ஆம் ஆண்டு செயின்ட் லுவிஸ் புறநகரில் ஜேம்ஸ் மற்றும் செல்மா என்ற வயதான தம்பதியை கொலை செய்துள்ளார்.

இந்தக் குற்றத்தை அவர் ஒப்புக் கொண்டார்.

இது தொடர்பில் 2002, 2005 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற வழக்குகளில் அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டார்.

## வடகொரியா மீண்டும் ஏவுகணை சோதனை

வட கொரியா, அதன் கிழக்குக் கரையை நோக்கி அடையாளம் தெரியாத ஏவுகணையைப் பாய்ச்சியிருப்பதாகத் தென் கொரியா கூறியுள்ளது.

வட கொரியா இவ்வாண்டு மட்டும் 14 முறை அத்தகைய பெரிய அளவிலான ஏவுகணைச் சோதனைகளை நடத்தியுள்ளது.

பாய்ச்சப்பட்ட ஏவுகணையைப் பற்றிய விபரம் உடனடியாகக் கிடைக்கவில்லை. அது புவியீர்ப்பு ஏவுகணையாக இருக்கக்கூடும் என்று ஜப்பானியக் கடற்கரை காவல் படை தெரிவித்தது.

வட கொரியத் தலைவர் கிம் ஜொங் உன் ஒரு வாரத்துக்கு முன்னர் தமது நாட்டின் அணுவாயுத ஆற்றலை மேம்படுத்துவதில் வேகம் காட்டப்படும் என்று உறுதியளித்தார்.



## சீனாவின் நகரங்களில் கூடுதல் கட்டுப்பாடுகள்

சீனாவின் செங்சாவ் நகரம் நேற்று புதன்கிழமை முதல் இம்மாதம் 10ஆம் திகதி வரை புதிய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. நகர வட்டாரத்தில் உள்ள பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதால் வகுப்புகள் இணையம் வாயிலாக நடத்தப்படும்.



அரசாங்க அமைப்புகள், நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிபுரிவோர் வீட்டிலிருந்தே வேலை செய்யவேண்டும்.

செங்சாவ் நகரில் உள்ள நோய்ப் பரவல் நிலைமையைப் பொறுத்து 10ஆம் திகதியன்று விதிமுறைகளில் மாற்றங்கள் செய்யப்படலாம். அங்கு 12 மில்லியன் பேருக்கும் அதிகமானோர் வசிக்கின்றனர்.

இந்நிலையில், சீனத் தலைநகர் பீஜிங்கில் தொடர்ந்து வைரஸ் தொற்றுக் கட்டுப்பாடுகள் நடப்பில் உள்ளன. அங்கு 24 மணிநேர இடைவெளியில் 50க்கும் மேற்பட்டோருக்குக் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இன்று முதல் பீஜிங் சர்வதேச விமான நிலையத்திற்குள் நுழைய, பயணிகள் வைரஸ் தொற்று இல்லை எனும் ஆவணத்தைக் கொண்டிருக்க வேண்டும்.

சீனாவின் வர்த்தக மையமான ஷங்ஹாய் நகரில் தனிமைப்படுத்தப்பட்ட இடங்களுக்கு வெளியே 60க்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர். அங்கு ஒரு மாதத்துக்கும் மேல் முடக்கநிலை நடப்பில் உள்ளது.



## ஈரானில் கள்ளச் சாராயம் உட்கொண்டு 8 பேர் பலி

ஈரானின் பண்டார் அபாஸ் நகரில் வீட்டில் காய்ச்சப்பட்ட மதுபானத்தை உட்கொண்டவர்களில் 8 பேர் உயிரிழந்துள்ளனர்.

அந்த மதுபானத்தை உட்கொண்ட 51 பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெறுவதாக சுகாதார அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்களில் 17 பேர் கவலைக்கிடமான நிலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் இருப்பதாகவும் 30 பேர் இரத்தச் சுத்திகரிப்பு சிகிச்சை மேற்கொள்வதாகவும் குறிப்பிடப்பட்டது.

மதுபானத்தைக் கள்ளத்தனமாகக் காய்ச்சியதாக நம்பப்படும் 8 சந்தேக நபர்களைக் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். அவர்கள் அந்த மதுபானத்தை விநியோகம் செய்திருப்பதாகவும் நம்பப்படுகிறது.

இஸ்லாமிய நாடான ஈரானில், மதுபானம் விற்பதும் உட்கொள்வதும் தடைசெய்யப்பட்டுள்ளது. அங்கு முஸ்லிம் சமயத்தினர் மதுபானம் உட்கொண்டால் 80 பிரம்படிகள் தண்டனையாக விதிக்கப்படும்.

# நகர்வலம்



## பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா மகா சமாதி தினம் ஆராதனா மஹோற்சவம்



பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் மகா சமாதி தினம் ஏப்ரல் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆகும். அன்று காலை 5 மணி தொடக்கம் பகல் ஆராத்தியுடன் ஸ்ரீ சத்ய சாயி அறங்காவலர் ஸ்ரீ லங்கா) சபை ஆதரவில் கொழும்பு ஸ்ரீ சத்ய சாயி பாபா மத்திய நிலைய அனுசரணையுடன் கொழும்பு புதுச்செட்டித் தெருவிலுள்ள சாயி நிலையத்தில் ஆராதனா மஹோற்சவம் இடம்பெறவுள்ளது. ஆராதனா மஹோற்சவம் புட்டபர்த்தியில் பாபாவின் மகா சமாதியில் பூஜீத்த சத்ய சாயி பாபாவின் ஐம்பொன் விக்கிரகத்தின் முன்பாக வருடா வருடம் நடைபெறும். 'மகா ரூத்ரா' யாகத்துடன் பரிபூரண மகா அபிஷேகம், சாயி ஆராதனா மஹோற்சவ பூஜை , சாயி பஜனை மற்றும் மங்கள திரி ஆராத்தி சகிதம் என்பன நடைபெறவுள்ளன. நாராயண சேவையும் (அன்னதானம்) ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.





மத்துகம கலைமகள் தேசிய பாடசாலையில் அண்மையில் இடம்பெற்ற மாணவத் தலைவர்களுக்கான பயிற்சி பட்டறையின்போது பிடிக்கப்பட்ட படங்கள்.



கண்டி, கலஹா பெருந்தோட்டப் பகுதியைச் சேர்ந்த லிட்டில்வெளி தமிழ் வித்தியாலயத்தில் தரம் ஐந்து புமைப்பரிசில் பரீட்சையில் எட்டு மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். இடமிருந்து வலமாக பீ.ரொசான் (184) எஸ் திலுக்சி (163),எல் கபிலன் (155) ஜே சுவிஷ்கன்(153) பீ. சதீஸ் (152),ஆர் ஹஷ்வித்(149), பீ கமிஷ்கா,(156) எஸ் மிதுஷிகா (158) ஆகியோரைப் படத்தில் காணலாம். பாடசாலை அதிபர் எஸ். யோகராஜ் மற்றும் பொறுப்பாசிரியர்களான ஆர் ராமதாஸ், பி. விஜயநாயகி ஆகியோரையும் படத்தில் காணலாம்.

### கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில்

## பேராசிரியர் சோ. சந்திரசேகரம் நினைவுப்பகிர்தல்

பேராசிரியர் சோ.சந்திரசேகரத்தின் நினைவுப்பகிர்தல் நிகழ்வு எதிர்வரும் 08ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப.5.00 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்க தலைவர் சட்டத்தரணி நடராஜர் காண்டீபன் தலைமையில் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பேராசிரியர் சபா ஜெயராசா, பேராசிரியர் (தகைசால் ஓய்வு நிலைப் பேராசிரியர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) வி.ரி.தமிழ்மாறன் (முன்னாள் பீடாதிபதி சட்டபீடம் கொழும்புப் பல்கலைக்கழகம்), முனைவர் உ. நவரத்தினம் (ஓய்வு நிலை பணிப்பாளர் தேசிய கல்வி நிறுவகம்), வீ.தனபாலசிங்கம் (மூத்த ஊடகவியலாளர்), மா.கணபதிப்பிள்ளை (ஓய்வுநிலை பிரதி அதிபர் றோயல் கல்லூரி), தவத்திரு சக்திவேல் அடிகள் (சமூகச் செயற்பாட்டாளர்), எம்.எஸ். எம். முக்தார் (ஓய்வு நிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் மேல் மாகாணம்), பேராசிரியர் இராஜலச்சுமி சேனாதிராஜா (கொழும்புப் பல்கலைக்கழகம்) தெ. மதுசூதனன் (கல்வி சார் இதழாசிரியர்) ஆகியோர் கருத்துரை ஆற்ற உள்ளனர். நன்றி உரையை பொதுச் செயலாளர் ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி நிகழ்த்தவுள்ளார்.

### சங்க உறுப்பினர்களாக இருந்து

## அமரத்துவம் அடைந்தவர்களின் நினைவுப்பகிர்தல்

கொழும்புத் தமிழ்ச் சங்க உறுப்பினர்களாக இருந்து அமரத்துவம் அடைந்தவர்களின் நினைவுப்பகிர்தல் நிகழ்வு 2022.05.07ம் திகதி சனிக்கிழமை பி.ப.5.00 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்க தலைவர் சட்டத்தரணி நடராஜர் காண்டீபன் தலைமையில் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. தமிழ்த்தாய் வாழ்த்தினை செல்வி பௌர்ணமி ஆதவன் வழங்குவார். அமரத்துவம் அடைந்தவர்களான டபிள்யு. எஸ். செந்தில்நாதன், எஸ். தியாகராசா(STR), கா. வைத்தீஸ்வரன், க. அரசரத்தினம் ஆகியோரது அஞ்சலி உரையை முறையே ஜி.இராஜகுலேந்திரா (நிர்வாகக்குழு உறுப்பினர்) , திருமதி.யசோதரா பாலேஸ்வரன் (ஓய்வுநிலை இசை ஆசிரிய ஆலோசகர்), தெ.மதுசூதனன் (நுண்கலைக்குழுச் செயலாளர்), சின்னதுரை தனபாலா (தலைவர் நாவலர் சபை), ஆ.இரகுபதி பாலஸ்ரீதரன் (நிர்வாகக்குழு உறுப்பினர்), க.இறைவன் (தமிழ்ச் சங்க உறுப்பினர்), கந்தையா பத்மானந்தன் (பேரவை உறுப்பினர்), மா.கணபதிப்பிள்ளை (துணைத்தலைவர் கொழும்புத் தமிழ்ச் சங்கம்) ஆகியோர் ஆற்ற உள்ளனர். நன்றி உரையை பொதுச் செயலாளர் ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி நிகழ்த்தவுள்ளார்.

## சீமெந்து விலை அதிகரிப்பு பலர் தொழில் இழப்பு

**உக்குவளை விஷேட நிருபர்**

மாத்தளை மாவட்டத்தில் சீமெந்து விலை அதிகரிப்பை தொடர்ந்து பலர் தொழிலை இழந்து பெரும் பொருளாதார நெருக்கடிகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சீமெந்து மேலும் கட்டட நிர்மாண பணிகளுக்கு தேவையான கருங்கல், சுண்ணாம்பு, பலகை, கம்பு உட்பட சகல பொருட்களின் விலையும் அதிகரித்துள்ளது. இதன்காரணமாக பொதுமக்கள் கட்டடநிர்மாண பணிகளை மேற்கொள்ளாமல் தவிர்ந்து வருவதால் மேசன்கள், தச்சர்கள், கூலித்தொழிலாளர்கள் உட்பட பல்லாயிர கணக்கானோர் தொழில் வாய்ப்புக்களை இழந்து தவிக்கின்றனர். 2021ஆம் ஆண்டு ஜுன் மாதம் தொடக்கம் 2022 பெப்ரவரி மாத இறுதிவரை கட்டட நிர்மாணபணிகளை மேற்கொண்டு வந்தவர்கள் அண்மைக்காலமாக தொழிலை இழந்துள்ளனர். எனவே தற்போதைய நிலையில் கட்டட நிர்மாண பணிகளை மேற்கொண்டு வரும் அரச மற்றும் தனியார் நிர்மாணபணிகள் முற்றாக நிறுத்தப்படுமாகவிருந்தால் தங்களது குடும்ப பொருளாதாரம் பாதிக்கப்படுமென தெரிவிக்கின்றனர்.



இலங்கை நிர்வாக மற்றும் நிபுணத்துவ செயலாளர்களின் சங்கம், இலங்கையில் செயலாளர்கள் மற்றும் நிர்வாக வல்லுநர்களுக்காக பதிவுசெய்யப்பட்ட ஒரே சங்கமாகும். 1978 ஆம் ஆண்டு மறைந்த எரிக். பி. எம். டி. சில்வாவினால் இச்சங்கம் நிறுவப்பட்டது. சர்வதேச நிர்வாக வல்லுநர்கள் வாரத்தை முன்னிட்டு கொடி அங்குரார்ப்பணம் செய்து வைக்கும் வைபவம் துருக்கி தூதரகத்தில் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான துருக்கி குடியரசின் தூதுருக்கு முதல் கொடியை சங்கத்தின் தலைவி அஸ்ரா ரெயால்தீன் வழங்கினார். உப தலைவர் வி. ருச்சிரா அபேவர்தன, செயலாளர் ஷ்ரீன் ராஜீ, பொருளாளர் நிர்மலி பெர்னாண்டோ, ஆலோசகர் க்வென்டோலின் நிலவீர, முன்னாள் தலைவி சேண்ட்ரா தோமஸ் மற்றும் தூதரகத்தின் செயலாளர் காஞ்சனா ராஜபக்ஷ ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர்.




### இலங்கைக்கு நிவாரணம் வழங்கிய

## தமிழக முதல்வருக்கு மணவை நன்றி தெரிவிப்பு



இலங்கைக்கு நிவாரணமாக பொருட்களும் இந்திய நாணயத்தில் ஒரு கோடி ரூபா நிதியுதவியும் வழங்கிய தமிழக முதல்வர் மு.க ஸ்டாலினுக்கு இலங்கை, இந்திய வர்த்தக தொடர்பாளர் மணவை அசோகன் நன்றி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடிக்கு தமிழக மக்கள் சார்பாகவும் திராவிட முன்னேற்றக் கழகம் சார்பாகவும் தமிழக அரசு தன்னாலான பொருள் உதவிகளையும் நிதியுதவிகளையும் வழங்கியுள்ளது, தொடர்ந்து வழங்கி வருகிறது. இதற்கு அவருக்கு நன்றி கூறுகின்றோம்.

இலங்கை வாழ் அனைவருக்கும் மொழி, இனம் கடந்து அரசியல் பாகுபாட்டை கடந்து மனிதாபிமான ரீதியில் உதவிகள் வழங்கியுள்ளீர்கள் தாங்கள், தலைவர் கலைஞரின் மகன் என்பதை நிருபித்து விட்டீர்கள். கலைஞர் இருந்திருந்தால் இப்படித்தான் செயல்பட்டிருப்பார் என்பதை உணர்த்தியமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம். இவ்வாறு மணவை அசோகன் தெரிவித்துள்ளார்.

## விபத்தில் இராணுவ சிப்பாய் பலி

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

முச்சக்கர வண்டியொன்றும் மோட்டார் சைக்கிலொன்றும் நேருக்கு நேர் மோதிய விபத்தில் இராணுவ சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளதாக மதவாச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று மாலை 6.30 மணியளவில் மதவாச்சி கடவத்கம வித்தியாலயத்திற்கு அருகில் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவித்தனர். 24 வயதுடைய மதவாச்சி கடவத்கம பகுதியை வசிப்பிடமாக கொண்ட பனாகொட இராணுவ முகாமில் கடமைபுரியும் இராணுவ வீரர் ஒருவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார் என்பது தெரியவந்துள்ளது. சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது. விடுமுறையில் வீட்டுக்கு வந்திருந்த இராணுவ வீரர் சம்பவதினத்தன்று தேவை நிமித்தம் மதவாச்சி நகருக்கு சென்று மீண்டும் வீடு நோக்கி வந்து கொண்டிருக்கும் போது இச்சம்பவம் இடம்பெற்றுள்ளமை தெரியவந்துள்ளது. சடலம் அநுராதபுரம் போதனா வைத்திய சாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மதவாச்சி பொலிஸ் நிலைய போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கேரள கஞ்சா மீட்பு

**கோப்பாய் குறூப் நிருபர்**

இந்தியாவிலிருந்து யாழ்.மண்டைதீவுக்கு கடத்திவரப்பட்ட சுமார் 490 கிலோ கேரள கஞ்சா நேற்று(04) அதிகாலை மீட்கப்பட்டுள்ளதுடன், குருநகரைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன் பெறுமதி 10 கோடி ரூபா எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

நீண்ட இடைவெளியின் பின்னர் அதிகளவான கஞ்சா பிடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கண்டல் தாவர நடுகை

**புத்தளம் தினகரன் நிருபர்**

உலக ஈர நில தினத்தை முன்னிட்டு மத்திய சுற்றாடல் அதிகார சபையின் புத்தளம் மாவட்ட காரியாலயம் ஏற்பாடு செய்த கண்டல் தாவர நடுகையும், கரையோரம் சுத்தம் பண்ணும் நிகழ்வும் கண்டக்குளி குடாவ பிரதேசத்தில் அண்மையில் இடம்பெற்றது.

கற்பிட்டி பிரதேச செயலாளர் டி.ஏ.பி. தனன்சூரிய, மத்திய சுற்றாடல் அதிகார சபையின் புத்தளம் மாவட்ட பணிப்பாளர் டி.எம்.கே.திசாநாயக்க, கரையோரம் பேணல் கல்பிட்டி பொறுப்பதிகாரி ஏ.ஆர்.எம்.ஹலீம், புத்தளம் மாவட்ட சுற்றாடல் முன்னோடி ஆணையாளர் ஏ.எச்.எம்.எம்.ஷாபி, புத்தளம் தெற்கு கோட்ட சுற்றாடல் முன்னோடி ஆணையாளர் ஏ.திருவரங்கநாதன், கற்பிட்டி தெற்கு கோட்ட சுற்றாடல் முன்னோடி ஆணையாளர் எச்.எம்.சுஹைப், கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலை சுற்றாடல் முன்னோடி தங்கப் பதக்கதாரிகள் மற்றும் மற்றும் வெளிநாட்டு சுற்றாடல் ஆர்வலர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# தருமை ஆதீனத்தின் மீது காலாகாலமாக பல சக்திகள் வெறுப்பிலேயே உள்ளன

தருமை ஆதீனத்தின் மீது இன்றல்ல, காலாகாலமாக தமிழ் வழி கும்பாபிஷேகம்,பிரிவினைவாத முற்போக்கு, இடது மற்றும் NGO க்கள் என பல சக்திகள் வெறுப்பிலேயே உள்ளன. இதற்கு காரணம் என்ன? ஆகம புறம்பானவைகளையோ,வேத எதிர்ப்பையோ, பிராமண வெறுப்பையோ, வடமொழி வெறுப்பையோ தருமை ஆதீனம் என்றும் செய்ததில்லை. சம்ஸ்கிருதமும் தமிழும் சைவத்தின் இரு கண்கள் என்று போற்றினார்கள்.

இன்றுவரை தமிழ் வழி கும்பாபிஷேகம்,ஆகம விரோத அர்ச்சக நியமனங்கள் அனைத்தையும் எதிர்ப்பது அல்லது அதை ஏற்காத நிலைப்பாடுடைய பாராம்பரிய சைவமடம் தருமை ஆதீனமாகும். எனவே,சமயத்தை அரசியலாக ஆக்கிய தரப்புகளுக்கு, இந்த மடத்தின் மீதான வன்மம் பெருகிக் கொண்டேததான் போகும்.

அதுவும்,தற்போது 27 வது சன்னிதானமாக ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரியார் சுவாமிகள் பதவியேற்ற பிறகு சோழமண்டலத்தில் வீழ்ந்து கிடந்த புகழ்பெற்ற கோவில்களுக்கு வேகமாக கும்பாபிஷேகம் செய்து வருகிறார்கள்.

திருமுல்லைவாயில் கும்பாபிஷேகத்தில் ஆதீனத்தை தங்கள் குருவாக ஏற்று மீனவ சமூகமான சிவன்படவர்கள் கோயில் பணி செய்தார்கள். அதிபத்த நாயனார் வம்சாவளி நீங்கள் என்றெல்லாம் போதித்து, அவர்களை உழவார பணிகளில் ஈடுபடுத்தினார் சன்னிதானம். யாகசாலை அமைக்கப்பட்டதில் இருந்து மீன்பிடிக்க போகாமல், அசைவத்தை புறக்கணித்து பக்தியோடு வழிபட்டார்கள்.

இப்படி பொதுவெளியில் இறங்கி, இந்து சமூகத்தை தன் தவவலிமையால் உள்ளிழுக்கும் குருக்களை இங்கே செயல்படவிடாமல் தடுக்கும் மிகப் பெரிய திட்டமே உள்ளது என்பதெல்லாம் மறுக்க முடியாத உண்மை.

அத்தோடு தென்னிந்தியா முழுக்க ஞானரத யாத்திரையை அறிவித்து போய்க் கொண்டே இருக்கிறார் சன்னிதானம். அங்கிருக்கும் எல்லா கோவிலுக்கும் சென்று மக்களை சந்தித்து அருளாசி வழங்கியபடியே இருக்கிறார். இத்தனையும் செய்வதை விட நூற்றாண்டு தர்மத்திலிருந்து விலகி இவர்களது அரசியலுக்கு அவர் வளைந்தும் கொடுக்கவில்லை.

இதெல்லாம் நிச்சயமாக தமிழக அரசியல் களத்துக்கு மட்டுமல்ல, ஆன்மீக களத்துக்கே உறுத்தலாகத்தான் இருக்கும். ஆனாலும் எல்லா அரசியல்வாதிகளும் வருகிறார்கள்,எல்லா அதிகாரிகளும் வருகிறார்கள். அதே போலத்தான் தமிழக ஆளுநரும் வருகை புரிந்தார்.

எனவே,எப்போது என பார்த்துக் கொண்டேயிருந்தவர்களுக்கு இதை அரசியல் பிரச்சனையாக மாற்றி தமிழக அரசைத் தூண்டி நூற்றாண்டுகளாக நடக்கும் பட்டின பிரவேசத்துக்கு தடைவாங்கியுள்ளார்கள்.

நான் ஆரம்பத்திலிருந்தே சொல்வது இதுதான்.தமிழ் வழி கும்பாபிஷேகம், அனைத்து சாதி அர்ச்சகர், பட்டன பிரவேச தடை.



இவை எல்லாமே ஒன்றொடு ஒன்று தொடர்பு கொண்டவை. இது பக்தியை வளர்க்கும் என்று புரட்சி பேசுவதெல்லாம் அபத்தமானது. இது சமயத்தை வேரோடு சாய்க்கும். இதை நாம் புரிந்து கொள்ளவில்லை என்றால் வீழ்வதை யாராலும் தடுக்க முடியாது.

மனிதனை மனிதன் தூக்குவது என்ற லாஜிக்கே இதில் கிடையாது. சைவ மரபில் குருவையே சிவமாக பார்க்கும் விசேஷ அருள்நிலையில் இருந்து நடக்கும் நிகழ்வு இது. ஆதீனங்களை வெறுமனே மனிதர் என்று மடத்து சிஷ்யர்களோ,மக்களோ பார்க்கவில்லை.

அவருக்குரிய குருமரபு திருக்கயிலாயப் பரம்பரை ஆகும்..சிவத்தையே குரு வழியில் பார்க்கும் மரபு இது. இதை நம்பாதவர்கள் அதை ஏற்க வேண்டியதில்லை, இவற்றைச் செய்ய வேண்டியதில்லை. ஆனால் நம்புகிறவர்கள் இந்த நிகழ்வை நடத்தும் போது,அதை எந்த அரசியல் சட்டத்தாலும் தடுத்து நிறுத்த முடியாது..

மடத்தை சுற்றிய நான்கு வீதிகளும் ஆதீனத்துக்கு சொந்தமானவை. அங்கே ஆதீன சிஷ்யர்களும்,மக்களும் சேர்ந்து நடத்தும் விழாவை அதுவும் நூற்றாண்டு பாரம்பரியத்தை யாரால் தடுக்க முடியும்?

திருச்சிற்றம்பலம்.

**சிவசிதம்பரம்.**

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் ஆண்டு;

# யாழ் இந்து அறநெறி பாடசாலைகளில் வாராந்த சிறப்புச் சொற்பொழிவு

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் ஆண்டிலே (2022) இளம் இந்துச் சிறார்களிடையே நாவலர் பெருமான் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும்முகமாக, யாழ்.மாவட்ட இந்து சமய அறநெறிப் பாடசாலைகளில் 'வாராந்தச் சொற்பொழிவும் மாதந்தோறும் நாயன்மார் குருபூஜை நிகழ்வும்' சிவஸ்ரீ பால. திருகுணானந்தக்குருக்கள் (ரொறன்ரோ, கனடா) அவர்களின் அனுசரணையுடன் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் ஒழுங்கமைப்பில் நடைபெற்று வருகின்றது.

மேற்படி நிகழ்ச்சித் தொடர் வரிசையிலே, 18 ஆவது சொற்பொழிவு நிகழ்வு தொல்புரம் ஆதிமுத்துமாரி அம்மன் அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் நாளை 06.05.2022 வெள்ளிக்கிழமை பி.ப.3.30 மணிக்கு இந்து கலாசார உத்தியோகத்தர் திருமதி அஜிதா கோயிநாத் தலைமையில் இடம்பெறவுள்ளது .

நாவலர் குருபூஜை மற்றும் தலைமையுரை நிகழ்வுகளைத் தொடர்ந்து, 'நாவலர் பெருமானின் நூற்பணிகள்' எனுந் தொனிப்பொருளில் சைவப்புலவர் பிரசங்கபூஷணம் கந்த.சத்தியதாசனின் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்வு நடைபெறும். அதனைத் தொடர்ந்து சொற்பொழிவிலிருந்து



வினாக்கள் தொடுக்கப்பட்டு மாணவர்களுக்கான பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

**நீர்வேலியில் சிறப்புச்சொற்பொழிவு:**

யாழ்ப்பாணம் நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் நடத்தும் வாராந்தச் சிறப்புச்சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் நாளை 06.05.2022 வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறும். ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக்குருக்களின் ஆசியுரையினை தொடர்ந்து பரிபாலன சபைத் தலைவர் த.சோதிலிங்கம் தலைமையுரை ஆற்றுவார். சிறப்புச்சொற்பொழிவினை இளம் சைவப்புலவர் நித்தியபாபுதரன் 'கந்தனும் விசாகமும்' என்னும் விடயப்பொருளில் நிகழ்த்துவார்.

**சரவணையில் மஹோற்சவ காலச் சிறப்புச்சொற்பொழிவு:**

யாழ்ப்பாணம் நாரந்தனை சரவணை கர்ணந் தோட்டம் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு நடாத்தப்படும் சிறப்புச்சொற்பொழிவு ஆலயப் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 07.05.2022 சனிக்கிழமை தொடக்கம் 18.05.2022 புதன்கிழமை வரை நடைபெறும்.

மாலை 6.00 மணிக்குச் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் 07.05.2022 சனிக்கிழமை சிறப்புச்சொற்பொழிவினை இளம் சைவப்புலவர் ச.நவநீதன் 'திருக்கோவில் வழிபாடும் பயனும்' எனும் பொருளில் நிகழ்த்துவார்.

08.05.2022 ஞாயிற்றுக்கிழமை சிறப்புச்சொற்பொழிவினை சைவப்புலவர் கந்த. சத்தியதாசன் 'கோபுர தரிசனம் கோடி புண்ணியம்' எனும் பொருளிலும் 09.05.2022 திங்கட்கிழமை சிறப்புச் சொற்பொழிவினை சைவப்புலவர் பொன். சந்திரவேல் 'கிரியைகள் உணர்த்தும் வாழ்வியல்' எனும் பொருளிலும் நிகழ்த்துவார்.

- ★ 0.05.2022 செவ்வாய்க்கிழமை_சிறப்புச்சொற்பொழிவு, இளம்சைவப்புலவர் ச.நவநீதன் (வேல் உணர்த்தும் தத்துவம்)
- ★ 11.05.2022 புதன்கிழமை சிறப்புச்சொற்பொழிவு, சைவப்புலவர் கந்த. சத்தியதாசன் (நாலாயிரம் கண் படைத்திலனே)
- ★ 12.05.2022 வியாழக்கிழமை சிறப்புச் சொற்பொழிவு, சைவப்புலவர் பொன். சந்திரவேல் (ஈழத்தில் முருக வழிபாட்டின் சிறப்புக்கள்)
- ★ 13.05.2022 வெள்ளிக்கிழமை சிறப்புச்சொற்பொழிவு, இளம் சைவப்புலவர் நித்தியபாபுதரன் (நக்கீரரும் முருகப்பெருமானும்)
- ★ 14.05.2022 சனிக்கிழமை சிறப்புச்சொற்பொழிவு, சைவப்புலவர் கந்த. சத்தியதாசன் (நாயன்மார் காட்டிய நன்நெறிகள்)
- ★15.05.2022 ஞாயிற்றுக்கிழமை சிறப்புச்சொற்பொழிவு, சைவப் புலவர் ச.முகுந்தன் (கந்த புராணமும் ஆறுமுகநாவலரும்)
- ★16.05.2022 திங்கட்கிழமை சிறப்புச் சொற்பொழிவு, இளம் சைவப்புலவர் நித்தியபாபுதரன் (முருகப்பெருமானும் அருணகிரிநாதரும்)
- ★17.05.2022 செவ்வாய்க்கிழமை சிறப்புச்சொற்பொழிவு, இளம் சைவப்புலவர் ச.நவநீதன் (கந்த புராணம் உணர்த்தும் வாழ்வியல்)
- ★18.05.2022 புதன்கிழமை சிறப்புச்சொற்பொழிவு, இளம்சைவப்புலவர் நித்தியபாபுதரன் (கந்தனும் விசாகமும்)

சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

# இலங்கையின் பரந்தளவான தேவைகளை நிறைவேற்றி வரும் இந்திய உதவிகள்

2022 ஆம் ஆண்டில் இந்தியாவினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட 3 பில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிக பெறுமதியான பொருளாதார உதவியானது இலங்கை மக்களினதும் அரசாங்கத்தினதும் பரந்தளவிலான தேவைகளை நிறைவேற்றுவதில் மிகவும் வலுவான ஆதாரமாக காணப்படுகின்றது.

உணவுப் பொருட்கள், மருந்துகள் மற்றும் ஏனைய அத்தியாவசிய பொருட்களை கொள்வனவு செய்வதற்காக ஒதுக்கப்பட்ட ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவித் திட்டமானது ஏற்கனவே நடைமுறையில் உள்ளதுடன், அத்திட்டத்தின் கீழ் புதுவருடத்தை முன்னிட்டு வழங்கப்பட்ட 16000 மெட்ரிக் தொன் அரிசி நாடளாவிய ரீதியில் உள்ள சதோச விற்பனை நிலையங்கள் ஊடாக விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

இச்சலுகைக் கடன் அடிப்படையில் இந்தியாவால் வழங்கப்படவுள்ள பொருட்கள் குறித்து இலங்கை அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது. அத்துடன் இலங்கை அரசாங்கத்தின் முன்னுரிமைகளுக்கு முக்கியத்துவமளித்து இந்திய அரசாங்கம் இந்த விநியோகங்களை மேற்கொண்டு வருகின்றது. இவ்வாறான கடன் உதவித் திட்டத்தின் கீழ் அரிசி மற்றும் உணவுப் பொருட்கள், மருந்துகள் மற்றும் உற்பத்தித்துறை சார்ந்த மூலப்பொருட்கள் போன்றவையும் ஏனைய பொருட்களுடன் மேலதிக தொகுதிகளாக விநியோகிக்கப்படுகின்றன.

அது மாத்திரமல்லாமல் டீசல், பெற்றோல் மற்றும் விமான எரிபொருள் போன்ற பெற்றோலிய பொருட்களை கொள்வனவு செய்வதற்கு 500 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான மற்றொரு கடன் உதவித் திட்டம் வழிசமைப்பதுடன் இதன் காரணமாக பல்வேறு வகை எரிபொருட்களுடனான 9 தொகுதிகளை வழங்குவதற்கு வழிகோலப்பட்டுள்ளது. இவ்வாறு வழங்கப்பட்ட பெற்றோல் மற்றும் டீசல் போன்றவை நாடளாவிய ரீதியில் உள்ள 1300 CEYPETCO எரிபொருள் நிரப்பு நிலையங்கள் ஊடாக வழங்கப்பட்டு இலங்கையின் 25 மாவட்டங்களிலும் உள்ள மக்களுக்கு விநியோகிக்கப்படுகின்றது. இக்கடன் உதவித் திட்டத்தின் கீழ் கிட்டத்தட்ட 400,000 மெட்ரிக்தொன் எரிபொருள் இதுவரை விநியோகிக்கப்பட்டிருப்பதுடன் மேலும் பல தொகுதி எரிபொருள் விரைவில் வந்தடையவுள்ளன.



ஆசிய கணக்குத் தீர்வக ஒன்றியத்தின் கீழ் இந்திய ரிசர்வ் வங்கிக்கு இலங்கை மத்திய வங்கியால் செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகையான 1 பில்லியன் அமெரிக்க டொலர் கொடுப்பனவை 2022 மார்ச் வரையில் ஒத்திவைத்தமையின் காரணமாக இலங்கையின் அந்நிய செலாவணி இருப்பானது மேலும் வலுவடைந்துள்ளது. இந் நிதிசார் நடவடிக்கையானது தற்போதைய 400 மில்லியன் அமெரிக்க டொலர் நாணய பரிமாற்றம் ஊடாக மேலும் வலுவூட்டப்பட்டதுடன் 2022 ஏப்ரல் 18ஆம் திகதி முதல் மூன்று மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு வடிவங்களிலான பொருளாதார உதவிகள் ஏனைய ஆதரவுகள் மூலமாக மேலும் வலுவாக்கப்பட்டுள்ளன. 2022 ஏப்ரல் 29ஆம் திகதி ஒரு தொகுதி மருந்துகள் மற்றும் மருத்துவப் பொருட்கள் உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லே அவர்களால் சுகாதார அமைச்சர் கெளரவ சன்ன ஜயசுமன அவர்களிடம் கொழும்பில் கையளிக்கப்பட்டது. இத்தொகுதி மருந்துப் பொருட்கள் பேராதனை போதனா வைத்தியசாலைக்கு வழங்கப்படவுள்ளன. இலங்கை மக்களின் நலன்களுக்கு இந்திய அரசாங்கம் வழங்கும் முக்கியத்துவத்தினை இவ்வாறான பல்நோக்கு அடிப்படையிலான உதவிகள் நிரூபிக்கின்றன.

# ஊடகத்துறையை தொழிலாகக் கொள்ளாமல் பணியாக போற்றி வாழ்ந்தவர் மோகனதாஸ்

மட்டக்களப்பு மாநகரின் தென் எல்லைக் கிராமமான துறைநீலாவணையை சேர்ந்த இளம் ஊடகவியலாளர், ஆசிரியர், பல்துறைக் கலைஞர், துடிப்பான இளைஞர் பாக்கியராஜா மோனகதாஸ் தனது 34 ஆவது வயதில் சுகவீனம் காரணமாக கடந்த 23.04.2022 அன்று காலமானார்.

'ஊடகம் என்பது ஒரு தொழில் அல்ல, எம்மை நம்பியிருக்கும் மக்களுக்கு இருபத்து நான்கு மணி நேரமும் களத்தினின்று தியாக உணர்வோடு சேவை செய்ய வேண்டிய சமூக சேவையாகும். காலத்திற்கு காலம் சமூகத்தின் பிரச்சினைகளை, சமூகம் எதிர் கொள்ளும் சவால்களை, அவர்களது உரிமைகளை தட்டிக் கேட்பவர்களாக, எழுத்தினூடாக அவர்களது உரிமைகளை பெற்றுக் கொடுப்பவர்களாக, உண்மையான பிரதிநிதிகளாக இருப்பவர்கள் கலைஞர்களும், படைப்பாளிகளும், ஊடகவியலாளர்களுமே ஆவார்கள். சமூகம் சார்ந்த சிந்தனையும், சமூகம் சார்ந்த செயற்பாடுகளுமே என்னை ஊடகத்துறைக்குள் இழுத்து விட்டது'

இவ்வாறு அண்மையில் மறைந்த இளம் ஊடகவியலாளர் பாக்கியராஜா மோகனதாஸ் குறிப்பிட்டிருந்தார்.

2012 ஆம் ஆண்டு ஊடகத்துறைக்குள் நுழைந்து கொண்ட மோகனதாஸ் குறுகிய காலத்திற்குள் கலை, அரசியல், சமூகம் சார்ந்து 800 இற்கும் மேற்பட்ட படைப்புக்களை எழுதிக் குவித்துள்ளார். அவர் எழுத்தையும், ஊடகத்தையும் உயிராக மதித்து தனது சேவையை செவ்வனே செய்தவர். தேசியப் பத்திரிகைகள் ஊடாக இலங்கையில் பிரபலமான அரசியல்வாதிகள் முதல், உள்ளூர் சமூக சேவையார்கள் வரை நேர்காணல் செய்து சமகால அரசியல் மற்றும் மக்கள் தொடர்பான பிரச்சினைகள் பற்றி வெளிக்கொணர்ந்தவர். தனது 34 வயதில் மரணிக்கும் வரை



ஓயாது எழுத்தையும், ஊடகத்தையும் நேசித்து வாழ்ந்தவர். இவர் கடந்த மார்ச் மாதம் 'படைப்பாக்க ஆளுமைகள்' எனும் நூலை வெளியிட்டிருந்தார். அந்நூலில் இலங்கையிலுள்ள பல்துறை சார்ந்த கலைஞர்களின் நேர்காணல்கள் இடம்பெற்றுள்ளன.

மட்டக்களப்பு துறைநீலாவணையைச்சேர்ந்த சிவராணி_ பாக்கியராஜா தம்பதிகளுக்கு மூத்த மகனாக 1988 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30 ஆம் திகதி மோகனதாஸ் பிறந்தார். இவருக்கு நிலக்சன் என்ற சகோதரனும், தவப்பிரியா என்ற சகோதரியும் இருக்கின்றார்கள். கனிவான பேச்சு, பணிவான பண்பு தனது துறையில் சாதிக்க வேண்டும் என்ற விடமுயற்சி கொண்டவர் ஊடகவியலாளர் பாக்கியராஜா மோகனதாஸ். இலங்கையில் வெளிவருகின்ற அனைத்து தேசிய பத்திரிகைகளிலும் பிராந்திய நிருபராக சேவையாற்றியவர், அது மட்டுமல்ல பல இணையத்தளங்களிலும் தனது ஆற்றலை வெளிப்படுத்தியவர்.

தரம் ஒன்று தொடக்கம் உயர்தரம் வரை துறைநீலாவணை மகா வித்தியாலயத்தில் கல்வி பயின்று உயர்தரத்தில் தேறி 2008 ஆம் ஆண்டு பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகி, கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் நான்கு வருட நுண்கலைமாணி, நாடகமும், அரங்கியலும் கலையினை கற்று நுண்கலை மாணி பட்டத்தினையும் பூர்த்தி செய்தவர். இவர் பாடசாலையில் படிக்கும் காலங்களில் தமிழ் மீது கொண்ட பற்றின் காரணமாக நிறையப் புத்தகங்களை வாசிப்பதை பழக்கமாக கொண்டிருந்தார். அதுவே அவரை எழுத்துத்துறைக்குள் வருவதற்கு வித்திட்டது.

கவிதைகள், கட்டுரைகள், மேடை நாடகங்கள், சிறுகதைகள் ஆகியவற்றை எழுதியுள்ளார். முதன் முதலாக பத்திரிகைக்காக பாரம்பரியக் கட்டியக்காரனின் இன்றைய நிலை, பாரம்பரியக் கலையின் இன்றைய நிலை, இலக்கிய அரங்கப் பாரம்பரியம் எனும் மூன்று கட்டுரைகளை வெளியிட்டிருந்தார்.

மோகனதாஸ் மரணிக்கும் வரை கடந்த ஒன்பது வருடங்களாக அவரது பேனா ஓய்ந்ததில்லை. வார இதழ்களிலும் சரி, தினசரி இதழ்களிலும் சரி ஏதாவது ஒரு கட்டுரை வெளிவந்து கொண்டேயிருந்தது. இவரது கட்டுரைகள் அனைத்தும் சமூகத்தில் கவனிக்கப்படவேண்டிய ஆனால் பிறரால் கவனிக்கப்படாத விடயங்களையே வெளிப்படுத்துகின்றன. குறிப்பாக விளிம்பு நிலை சமூகத்தின் பாரம்பரியக் கலையிலக்கிய ஆற்றுகைகள், வடிவங்கள், முக்கியத்துவம், இருப்பு, சமூகப்பண்பாடு, பன்மைத்துவம் போன்ற விடயங்களையே வெளிப்படுத்துகின்றன. சாதாரண சமூகங்கள், மக்கள் வாழ்கின்ற இடங்களுக்குச் சென்று அவர்களுடன் வாழ்ந்து, அவர்களுடன் பேசி அவர்களது ஆதங்கங்கள், செயற்பாடுகளை, சவால்களை, கலையிலக்கிய அனுபவங்களை, பண்பாட்டு மரபுகளை தனது கட்டுரைகள் ஊடாக வெளிப்படுத்தியிருந்தார்

இன்னும் இருந்து பல சாதனைகளைப் படைக்கவேண்டிய இளம் ஊடகவியலாளர் பாக்கியராஜா மோகனதாஸ் தனது 34 ஆவது வயதில் சுகவீனம் காரணமாக மறைந்தவை பெரும் துயரமாகும்.

**செ.துஜியந்தன்**
(பாண்டிருப்பு தினகரன் நிருபர்)

# உயிர்வாழ்வு சான்றிதழ் ஒப்படைக்கப்படாவிட்டால் ஓய்வூதியம் நிறுத்தப்படும்

## பிரதேச செயலாளர் எம்.பிரதீபன்



(தலைமன்னார் விஷேட நிருபர்)

மன்னார் பிரதேச செயலகப் பிரிவில் ஓய்வூதியம் பெறுவோர் இவ்வருடத்தில் உயிர்வாழ்வு நற்சான்றிதழ் ஒப்படைக்கப்படாதவிடத்தில் அவர்களின் ஓய்வூதியம் நிறுத்தப்படும் அபாயம் தோன்றும் என மன்னார் பிரதேச செயலாளர் எம்.பிரதீபன் இவ்வாறு தெரிவித்தார்.

மன்னார் பிரதேச செயலக அரச சேவை ஓய்வூதியவர்களின் நம்பிக்கை நிதியத்தின் பத்தாவது ஆண்டு பொதுக்கூட்டம் மன்னார் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இதன் தலைவர் சிறீசற்குணநாதன் தலைமையில் நடைபெற்றது

இதன்போது இதில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட மன்னார் பிரதேச செயலாளர் எம்.பிரதீபன் இங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்

இக்கூட்டத்தில் கலந்து கொள்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

நாங்களும் ஓய்வூதியம் பெற்றபின் இவ்வாறான கூட்டங்களில் இணைய வேண்டியவர்களாகவே இருப்போம்.

தற்பொழுது இக்கூட்டத்தில் அமர்ந்திருக்கும் அரச ஓய்வூதியர்களாக இருக்கும் நீங்கள் பிரச்சினை காலங்களில் யுத்தக்காலக்கட்டத்திலும் மக்களுக்காக சேவை செய்தவர்களாக இருந்தீர்ப்பீர்கள்.

இப்படிப்பட்ட உங்களின் கூட்டத்தில் பங்குபற்றுவதன் மூலம் நான் உங்களுக்கு தரும் ஒரு கௌரவமாக நினைக்கின்றேன்.

ஒரு அரச ஊழியர் தனது பணியிலிருந்து ஓய்வுபெற்றுச் சென்றதும் இவ்வாறான கூட்டங்களில் கலந்து கொள்வது மிக குறைவாகக் காணப்படும்.

அப்படியிருந்தும் உங்களில் பலர் இவ்வாறான கூட்டங்களில் கலந்து கொள்வது பெருமைக்குரியது.

நீங்கள் இவ்வாறான உங்கள் கூட்டங்களை வைப்பதற்கு இடவசதிகள் இல்லாது திண்டாடி வருவது தெரிந்த விடயம். உங்கள் காலத்தில் கட்டப்பட்ட இக்கட்டிடத்தில் நீங்கள் கூட்டங்கள் மற்றும் உங்கள் செயற்பாடுகளை மேற்கொள்வதில் எமக்கு எவ்வித ஆட்சேபனையும் கிடையாது.

எமது பிரதேச செயலகப் பிரிவில் 1200 பேர் ஓய்வூதியம் பெற்று வருகின்றனர். நான் இங்கு பிரதேச செயலாளராக பதவியேற்றபோது ஓய்வூதிய திட்ட அலுவலகர் ஒருவர் நியமிக்கப்படாது இருப்பதை கண்டு கொண்டேன்.

எமது பிரதேச செயலகத்தில் ஓய்வூதியம் பெறுவர்கள் தொடர்பான பல பிரச்சினைகள் அவர்களின் கோவைகள் சரி செய்யப்படாமல் இருந்து வந்ததைத் தொடர்ந்து ஒரு உத்தியோகத்தரை நியமிப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டிருந்தேன்.

தற்பொழுது இரண்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளதால் மன்னார் ஓய்வூதியர்களின் குறைகள் இப்பொழுது தீர்ந்திருக்கும் என நம்புகின்றேன்.

ஓய்வூதியரின் எண்பது கோவைகள் பூர்த்தி செய்யப்படாது இருந்தது தற்பொழுது இது நாற்பதாக குறைந்து இதற்கான கோவைகள் எமது கணக்காளர் மற்றும் ஓய்வுதிய உத்தியோகத்தர் இவர்களால் சரிபார்க்கப்பட்டு வருகின்றன. தற்பொழுது ஓய்வூதியர்களின் உயிர்வாழ்வு சான்றிதழ் பிரச்சனை இருந்து வருகின்றது. பலரின் உயிர்வாழ்வு சான்றிதழ்கள் கிடைக்கப் பெற்றிருக்கின்றபோதும் ஒரு சிலரின் சான்றிதழ் இன்னும் எமக்கு கிடைக்கப் பெறாது இருந்து வருகின்றது.

வெளி மாவட்டங்களிலிருந்து கொண்டு இங்கு ஓய்வூதியம் பெறுபவர்களின் பிரச்சனையும் இருந்து வருகின்றது.

இவர்களின் சரியான தகவல்கள் எமக்கு கிடைக்கப் பெறாது இருந்து வருகின்றது.

இவர்கள் உயிருடன் இருக்கின்றார்களா அல்லது இவர்கள் இல்லாது இவர்களினது ஓய்வூதியம் அனுப்பப்பட்டுக் கொண்டு இருந்தால் இதற்கு நாங்கள் பொறுப்பாளிகளாக மாற வேண்டிய நிலை ஏற்படும். இதனால் பலதரப்பட்ட பிரச்சனைகள் உருவாகும் நிலை ஏற்படும்.

ஓய்வூதியர்களின் உயிர்வாழ்வு சான்றிதழ் எமக்கு கிடைக்கப்பெறாதவர்களின் அறிக்கைகளை கிராம அலுவலகர் ஊடாக கேட்டுள்ளோம். இதன் அறிக்கைகள் கிடைக்காத வேளையில் இவர்களின் ஓய்வூதியம் நிறுத்தப்படும் அபாயமும் ஏற்படலாம். கடந்த கொவிட் காலத்தில் இவைகள் சரியான முறையில் கவனிக்கப்படாமையால் இம்முறை ஓய்வூதிய திணைக்களம் இது விடயத்தில் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க நேரிட்டுள்ளது.

மன்னார் பிரதேச செயலகப் பிரிவில் இதுவரை 15 பேரின் உயிர்வாழ்வு நற்சான்றிதழ் இன்னும் எமக்கு கிடைக்கப்பெறவில்லை என இவ்வாறு தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மன்னார் பிரதேச செயலக கணக்காளர் எஸ்.அரிகரன் சிறப்பு அத்தியாக கலந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

# சடலம் மீட்பு

மாங்குளம் குருப் நிருபர்

முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முள்ளிவாய்க்கால் பகுதியில் கிணற்றிலிருந்து ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து கடற்றொழில் நடவடிக்கைக்காக வந்த ஒருவரே கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது. சம்பவிடத்துக்கு வருகை தந்த முல்லைத்தீவு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்

உயிரிழந்தவர் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த 37 வயதுடைய கே.பிரதீப் என தெரியவருகிறது.

# வீதியில் மயங்கி வீழ்ந்து சிறுவன் மரணம்

யாழ்.விசேட நிருபர்

யாழ்ப்பாணம் வடமராட்சி பகுதியில் சிறுவன் ஒருவன் வீதியில் மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளான்.

துன்னாலை பகுதியை சேர்ந்த மகிந்தன் நிரோஜன் (வயது 08) எனும் சிறுவனே உயிரிழந்துள்ளான்.

சிறுவன் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை வீட்டிலிருந்து வெளியே சென்று ஆலயமொன்றின் அருகிலுள்ள வீதியில் மயங்கி விழுந்துள்ளான்.

அதனை அவதானித்தவர்கள் சிறுவனை மீட்டு, பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் அனுமதித்த போதிலும் , சிறுவன் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் அறிக்கையிட்டனர். உடல் கூற்று பரிசோதனைக்காக சிறுவனின் சடலம் வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.


## பொருட் கொள்வனவு அறிவித்தல்

N-60

### அரசாங்க அச்சுத் திணைக்களம்

அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் பெறுகைக்குழுத் தலைவா் பின்வரும் பண்டங்கள் தொடா்பில் உற்பத்தியாளா்கள், அவா்களின் பிரதிநிதிகள் அல்லது அவா்களது அங்கீகாரம் பெற்ற உள்ளூா் முகவா்களிடமிருந்து விலைமனுக்களை கோருகின்றாா்.

| 01. Item | Qty | Bid Fee | Reference No |
|---|---|---|---|
| Stretch Films | 2000 Rolls | 2,000.00 | SCP02/NCB27/ Stretch3/2022-18 |

Thickness - 20 microns (Minimum)
Width - 500 mm
Length - 300 mtrs - per roll

**02. Item - Strapping Rolls For Fully automatic Heavy Duty Strapping Machines**

| Qty | Bid Fee | Reference No |
|---|---|---|
| 700 Rolls | 2,000.00 | SCP02/NCB26/STR3/2022-17 |

Length - 2000 mtr - per roll
Thickness - 0.7 mm
Width - 9 mm

**Closing Date of Bid :** 20.05.2022 - 2.00 pm.

மேற்குறிப்பிட்ட விலைமனு தொடா்பில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 2,000.00 கொண்டதும் அத்துடன் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி தினத்துக்கு முந்திய தினம் 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கப்பெறும் எழுத்து மூலமான விண்ணப்பத்தின் பேரில் அரசாங்க அச்சுத் திணைக்கள, வழங்கல் பிரிவில் கடமை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை விலைமனு தொடா்பான ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம். மேலதிக விபரங்கள் கடமை நாட்களில் மு.ப.8.30 மணி முதல் பி.ப.4.15 மணி வரை எமது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பெறுகைக்குழுத் தலைவா்.

**அரசாங்க அச்சுத் திணைக்களம்,**
**இல. 118, டாக்டா் டனிஸ்டா் டீ சில்வா மாவத்தை,**
**கொழும்பு 08.**

**2022.05.06**
**தொலைபேசி : 011-2694898**
**இணையத்தளம் : www.documents.gov.lk**

## தெஹிவளை - கல்கிஸ்சை மாநகர சபை

## கேள்வி அறிவித்தல்

### வாகனத் தரிப்பிடத்தை கேள்வியிடல் – 2022/2023
### மற்றும்
### இரத்மலானை புதிய சந்தைக் கட்டிடத்தொகுதியின் கடை அறையொன்றின் விற்பனை உரிமையை குத்தகைக்கு வழங்குதல்

தெஹிவளை – கல்கிஸ்சை மாநகர சபைக்குரித்தான பின்வரும் இடங்களிலுள்ள வாகன தரிப்பிடங்களில் கட்டணங்களை அறவிடுவதற்காக 2022-2023 வருடங்களுக்கான விலைகள் மற்றும் தெஹிவளை – கல்கிஸ்சை மாநகர சபைக்குரித்தான இரத்மலானை புதிய சந்தைக் கட்டிடத்தொகுதியின் 17ஆம் இலக்கக் கடையின் விற்பனை உரிமையை குத்தகைக்கு வழங்குவதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.வாகனத் தரிப்பிட கட்டணங்களை அறவிடுதல் **2022/2023** விலைமனுக்கள் கோருதல் தொடா்பான விபரங்கள்

| | | குறைந்தபட்ச வருடாந்த கேள்வி (ரூபா) | கேள்விப் பிணை முறி (மீளளிக்கப்படும்) (ரூபா) |
|---|---|---|---|
| 1 | நுகேகொட ஹைலெவல் வீதியில் மேம்பாலத்திற்குக் கீழ் | 1,650,000.00 | 33,000.00 |
| 2 | கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை (களுபோவில போதனா வைத்தியசாலை) அருகில் | 1,900,000.00 | 38,000.00 |
| 3 | தெஹிவளை சந்தியிலுள்ள மேம்பாலத்திற்குக் கீழ் | 1,350,000.00 | 27,000.00 |

இரத்மலானை சந்தைக் கட்டிடத்தொகுதி கடை அறையை குத்தகைக்கு வழங்குவதற்கு இயைபான அட்டவணை மீளளிக்கப்படாத விண்ணப்பப் படிவக் கட்டணம் - ரூபா 1000.00

| தொ. இல. | சதுர அடி அளவு | கடை அறை | மாதாந்த வாடகை | குறைந்தபட்ச கேள்வி (ரூபா) | கேள்விப் பிணை முறி (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 1 | (10x14) = 140 | 17 | 15000.00 | 350,000.00 | 17,500.00 |

உங்களால் கேள்விப் படிவங்கள் சமா்ப்பிக்கப்படும் போது பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைவாக கேள்விப் படிவங்களைச் சமா்ப்பித்தல் வேண்டும்.

01. தெஹிவளை – கல்கிஸ்சை மாநகர சபையினால் வழங்கப்படும் கேள்வி ஆவணங்களில் மாத்திரமே கேள்விகள் சமா்ப்பிக்கப்படல் வேண்டும். மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்துவதன் பேரில் மாநகர சபையின் தரை தளத்திலுள்ள கலப்பு வருமானப் பிரிவிலிருந்து 2022-05-18ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை கேள்வி ஆவணங்களைக் கொள்வனவு செய்யலாம். அவ்வாறே அவ்வாவணங்களை அப்பிரிவிலேயே உங்களுக்கு பரீட்சித்துப் பாா்ப்பதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. ஒரு கேள்வி ஆவணத் தொகுதியின் மூலம் ஒரு இடத்திற்கு மாத்திரமே கேள்வியைச் சமா்ப்பிக்கலாம்.
02. தெஹிவளை – கல்கிஸ்சை மாநகர சபையில் தற்போது ஏதாவது வாகனத் தரிப்பிடத்தின் கட்டணத்தை அறவிடுவதற்காக கேள்வியைப் பெற்றுக்கொண்டுள்ள ஒருவருக்கு கேள்விப் படிவங்கள் வழங்குவதனால் வாகனத் தரிப்பிடத்திற்கான நிலுவைத் தொகையை முழுமையாகச் செலுத்திய பற்றுச்சீட்டைச் சமா்ப்பித்தல் மற்றும் மாநகர சபைக்குரித்தான வேறு ஆதனங்களை குத்தகைக்கு எடுத்து அதற்குரித்தான தொகையை முறையாகச் செலுத்தியிருந்தால் மட்டுமே கேள்விப் படிவங்கள் வழங்கப்படும்.
03. தெஹிவளை – கல்கிஸ்சை மாநகர சபைக்குரித்தான இரத்மலானை புதிய சந்தைக் கட்டிடத்தொகுதியின் 17ஆம் இலக்க கடை அறையின் விற்பனை உரிமையை குத்தகைக்குப் பெற்றுக்கொள்வதற்கு மேல் மாகாணத்தில் கடந்த 03 வருட காலத்தில் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டவா்கள் மட்டுமே விலைமனுக்களைச் சமா்ப்பிக்கலாம்.
04. கடை அறைக்கான ஆகக் குறைந்த கேள்வித் தொகை அட்டவணையின் கடை அறைக்கு எதிரே காட்டப்பட்டுள்ளது. வெற்றிகரமான விலைமனுதாரரால் அந்த கேள்வித் தொகை ஒரே முறையில் செலுத்தப்படல் வேண்டும்.
05. கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவுறுத்தப்படும் நேரமானது 2022-05-18ஆம் திகதி பி.ப. 3.00 மணியாகும் என்பதுடன் கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிந்த உடனடுத்து அவை திறக்கப்படும். அச்சந்தா்ப்பத்தில் கேள்விதாரா் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள பிரதிநிதியொருவா் கலந்துகொள்ளலாம். குறித்த நேரத்திற்குப் பின் கிடைக்கப்பெறும் அனைத்துக் கேள்விகளும் நிராகரிக்கப்படும்.
06. வாகனத் தரிப்பிடத்தில் கட்டணத்தை அளவிடுவதற்கான கேள்விக் காலம் 01 வருடமாகும்.
07. தெஹிவளை – கல்கிஸ்சை மாநகர சபையின் 0112 738701 / 0112738702 எனும் தொலைபேசி இலக்கங்களின் 112 எனும் நீடிப்பின் ஊடாக கலப்பு வருமான பிரிவைத் தொடா்புகொண்டு விலைக்கோரல் தொடா்பான தகவல்களை விசாரித்தறியலாம்.
08. இது தொடா்பிலான இறுதித் தீா்மானத்தை தெஹிவளை – கல்கிஸ்சை மாநகர சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

**எம்.எம்.சீ.கே.கே. மான்னப்பெரும,**
**மாநகர ஆணையாளா்,**
**தெஹிவளை - கல்கிஸ்சை மாநகர சபை.**
**2022-05-05ஆம் திகதி.**

## சுகாதாரம், போஷணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு

### அபேக்ஷா வைத்தியசாலை - மஹரகம இலங்கை

## பெறுகை அறிவித்தல்

01. இந்த வைத்தியசாலைக்குத் தேவையான உருப்படிகளைக் கொள்வனவு செய்வதற்காக தகைமை வாய்ந்த வழங்குநா்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| கேள்வி இலக்கம் | உபகரணத்தின் பெயா் | மீளளிக்கப்படும் கட்டணம் |
|---|---|---|
| 1 | காகிதாதிகள் மற்றும் சுத்திகரிப்புப் பொருட்கள் | ரூபா 2,000.00 |
| 2 | பொலித்தீன் குப்பை உறைகள் | ரூபா 2,000.00 |
| 3 | Real Time PCR Machine | ரூபா 2,000.00 |
| 4 | Ten Colour Flowcytometer | ரூபா 2,000.00 |
| 5 | Bio Safety Cabiner Class II | ரூபா 2,000.00 |
| 6 | Fully Automated Cougulometer | ரூபா 2,000.00 |
| 7 | Slip type Air Conditioner | ரூபா 2,000.00 |
| 8 | Therapeutic Nutrition Formula | ரூபா 2,000.00 |

02. இலங்கை சந்தைக்காக ஆய்வுகூட உபகரணங்களை உற்பத்தி செய்து வழங்குவதற்காக பெயரிடப்பட்டவா்கள் அல்லது அங்கீகரிக்கப்பட்ட முகவா்கள் மட்டும் மேற்படி கேள்விக்காக முன்வர தகைமை பெறுவா்.

**கேள்வி மாதிரிப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளும் வேளையில்**

I. மஹரகம அபேக்ஷா வைத்தியசாலை பணிப்பாளருக்கு அனுப்பும் வேண்டுகோள் கடிதம்
II. சகல கேள்வி மாதிரியின் பொருட்டும் மீளளிக்கப்படாத 2000.00 ரூபா ரொக்கப் பணத்தை மஹரகம அபேக்ஷா வைத்தியசாலை கணக்காளருக்குச் செலுத்தப்பட வேண்டும்.
III. வியாபாரப் பதிவுச் சான்றிதழின் சான்றுபடுத்திய பிரதியொன்றைச் சமா்ப்பித்தல் வேண்டும்.
IV. 2022-06-06ஆம் திகதி முதல் 2022-05-26ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையின் நிதிப் பிரிவிலிருந்து கேள்வி ஆவணங்களைச் சமா்ப்பித்தல் வேண்டும்.

**கேள்விப்படிவங்களைச் சமா்ப்பிக்கும் வேளையில்**

I. இலங்கையினுள் மேற்படி ஒப்பந்த வழங்கலுக்காக செல்லுபடியாகும் பதிவு சான்றிதழின் பிரதியைச் சமா்ப்பித்தல் வேண்டும்.
II. அனைத்துக் கேள்வியின் பொருட்டும் 2% வீதத்துக்கான கேள்விப் பிணை முறியைச் சமா்ப்பித்தல் வேண்டும். (கேள்விப் பிணைக்காக காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது)
III. கேள்விப் படிவங்களும் இரு பிரதிகளில் (மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியாக) சமா்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் கேள்வியைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் இயைபுடைய உருப்படியின் பெயரை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.
IV. அனைத்துக் கேள்விகளும் வழங்கப்பட்டுள்ள கேள்வி ஆவணங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள மாதிரியில் பூா்த்தி செய்திருத்தல் வேண்டும்.
V. 2018-05-26ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகளை மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையின் பிராந்திய பெறுகைக் குழு தலைவருக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையின் கணக்காளா் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். முழுமையற்ற மற்றும் தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.
VI. கேள்விகள் திறக்கப்படும் வேளையில் விண்ணப்பதாரா் அல்லது அதிகாரபூா்வ பிரதிநிதியொருவா் மட்டும் கலந்துகொள்ளலாம்.

03. விலைகள் சகிதமான கேள்விப் படிவங்களை 2022-05-26ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு மஹரகம அபேக்ஷா வைத்தியசாலை பணிப்பாளா் அலுவலகத்தில் திறக்கப்படும். மேலதிக விபரங்களை மஹரகம அபேக்ஷா வைத்தியசாலை கணக்காளரிடம் பெற்றுக்கொள்ளலாம். பிராந்திய பெறுகைக் குழுவின் தீா்மானமே இறுதித் தீா்மானமாகும்.

தொலைபேசி இல. : 0112839589/0112840252/0112839589
தொலைநகல் : 0112839589

**தலைவா்,**
**பிராந்திய கேள்விச் சபை,**
**அபேக்ஷா வைத்தியசாலை,**
**மஹரகம.**

## சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

2022ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்காகப் பின்வரும் சம்பளச் சபைகளின் முடிவுகளினால் மேவப்பட்ட வேலையாளர்களுக்கு ஏற்புடைத்தான சம்பள விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**பீ.கே.பிரபாத் சந்திரகீர்த்தி**
**தொழில் ஆணையாளர் அதிபதி**

தொழில் திணைக்களம்
கொழும்பு - 05
2022ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29ஆம் திகதி

| | |
|---|---|
| **கொக்கோ, ஏலக்காய், மிளகு என்பன வளர்த்தல் மற்றும் உற்பத்தி தொழில்** | **வேலையாள் ஒரு நாளுக்கு ரூ.1129.21** |

இதற்கு மேலதிகமாக 2005ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க வரவு, செலவு திட்ட நிவாரணப்படிச் சட்டத்தின் நியதிகளின் படியும் மற்றும் 2016ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க வரவு, செலவுத்திட்ட நிவாரணப்படிச் சட்டத்தின் நியதிகளின் படியும் வழங்கப்பட வேண்டிய கொடுப்பனவை ஒவ்வொரு தொழில்தருநரும் குறித்த தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டும்.

## பகிரங்க ஏலவிற்பனை

வெலிபல் பினான்ஸ் நிறுவனத்தில் உத்தரவாத அடிப்படையில் அடகு வைத்து கடன் பெற்று, உரிய காலத்தினுள மீட்கப்படாத தங்க நகைகள் இல: 310, காலி வீதி, கொழும்பு 03 இல் 2022 மே மாதம் 26 திகதி மு.ப. 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விட்கப்படும்.

**எந்தவொரு முன்னறிவித்தலும் இன்றி ஏலத்தை நிறுத்தவோ, பின்தள்ளி போடவோ வெலிபல் பினான்ஸ் நிறுவனத்திற்கு உரிமை உள்ளது**

**தங்க கடன் பிரிவு, வெலிபல் பினான்ஸ் பீ எல் சீ**
இல: 310, காலி வீதி, கொழும்பு 03

**வெலிபல் பினான்ஸ்**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

கமத்தொழில் அமைச்சு

### தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல்

காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம் (**CSIAP**)
செயற்றிட்ட இல.: **P163742**

01. இலங்கை சனநாயக சோஷலிச குடியரசானது உலக வங்கி - சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து (IDA) விவசாய அமைச்சின் காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டத்தின் கிரயச் செலவிற்காக 125 ஐ.அமெ. டொலர்கள் பெறுமதியான கடனைப் பெற்றுள்ளதுடன் இக்கடன் பெறுகைகளின் பாகமொன்றை பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள தகுதியான பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிட உத்தேசித்துள்ளது.

02. பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள பெறுகைக்காக தகுதியும் தகைமையுமுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விவசாய அமைச்சின் கால நிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டத்தின் (CSIAP) சார்பாக, பிராந்திய பெறுகைக் குழுத்தலைவர் (கிழக்கு மாகாணம்) முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

| இல. | ஒப்பந்த இல. | வேலையின் விபரம் | CIDA பதிவு | மீளளிக்கப் படாத கட்டணம் (இல. ரூபா) | விலைக் கோரல் பிணை முறியின் பெறுமதி (LKR) மற்றும் செல்லுபடித் திகதி |
|---|---|---|---|---|---|
| 01 | LK-MOA- 251419-CW- RFB / CSIAP/ EP/Ampara/ Yalpoth /01 | அம்பாறை மாவட்டத்திலுள்ள யல்பொத வெவயின் புனரமைப்பு வேலைகள் | C 4 அல்லது அதற்கு மேல் (நீர்ப்பாசனம் மற்றும் கால்வாய் வடிகாலமைப்பு) | 6,500.00 | 600,000.00 2022 ஒக்டோபர் 24ஆம் திகதி வரை |
| 02 | LK-MOA- 266364-CW- RFB / CSIAP/ EP/Am para/ Siyambalagas wewa and Podi wewa/03 | அம்பாறை மாவட்டத்திலுள்ள சியம்பலகஸ் வெவ மற்றும் பொடி வெவயின் புனரமைப்பு வேலைகள் | C 4 அல்லது அதற்கு மேல் (நீர்ப்பாசனம் மற்றும் கால்வாய் வடிகாலமைப்பு) | 6,500.00 | 280,000.00 2022 ஒக்டோபர் 24ஆம் திகதி வரை |
| 03 | LK-MOA- 266368-CW- RFB / CSIAP/ EP/Am para/ Ulpassawewa and Maruthanveli Tank /04 | அம்பாறை மாவட்டத்திலுள்ள உல்பஸ்ஸ வெவ மற்றும் மருதன்வெளி குளத்தின் புனரமைப்பு வேலைகள் | C 4 அல்லது அதற்கு மேல் (நீர்ப்பாசனம் மற்றும் கால்வாய் வடிகாலமைப்பு) | 6,500.00 | 600,000.00 2022 ஒக்டோபர் 24ஆம் திகதி வரை |
| 04 | LK-MOA-266102-CW-RFB / CSIAP/ EP/Ampara/ Nelum wewa /05 | அம்பாறை மாவட்டத்திலுள்ள நெலும் வெவயின் புனரமைப்பு வேலைகள் | C 4 அல்லது அதற்கு மேல் (நீர்ப்பாசனம் மற்றும் கால்வாய் வடிகாலமைப்பு) | 6,500.00 | 280,000.00 2022 ஒக்டோபர் 24ஆம் திகதி வரை |
| 05 | LK-MOA-276983-CW-RFB / CSIAP/ EP/Ampara/ Kirankovai Tank/06 | அம்பாறை மாவட்டத்திலுள்ள கிரான்கோவை குளத்தின் புனரமைப்பு வேலைகள் | C 4 அல்லது அதற்கு மேல் (நீர்ப்பாசனம் மற்றும் கால்வாய் வடிகாலமைப்பு) | 6,500.00 | 480,000.00 2022 ஒக்டோபர் 24ஆம் திகதி வரை |
| 06 | LK-MOA-276979-CW-RFB / CSIAP/ EP/Ampara/ Wedagama wewa/07 | அம்பாறை மாவட்டத்திலுள்ள வெதகம வெவயின் புனரமைப்பு வேலைகள் | C 4 அல்லது அதற்கு மேல் (நீர்ப்பாசனம் மற்றும் கால்வாய் வடிகாலமைப்பு) | 6,500.00 | 500,000.00 2022 ஒக்டோபர் 24ஆம் திகதி வரை |
| 07 | LK-M OA-277000-CW-RFB / CSIAP/ EP/Ampara/ Karande wewa /08 | அம்பாறை மாவட்டத்திலுள்ள கரந்தே வெவயின் புனரமைப்பு வேலைகள் | C 4 அல்லது அதற்கு மேல் (நீர்ப்பாசனம் மற்றும் கால்வாய் வடிகாலமைப்பு) | 6,500.00 | 750,000.00 2022 ஒக்டோபர் 24ஆம் திகதி வரை |

03. தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறை மூலம் விலைமனுக்கோரல் நடைமுறைப்படுத்தப்படும்.

04. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை திருகோணமலை, உப்புவெளி, லவ் லேன், காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம் (கிழக்கு மாகாணம்), பிரதி செயற்றிட்ட பணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 026-2054999, தொலைநகல்: 026-2054999, மற்றும் அதே இடத்தில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையான வேலை நாட்களில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம்.

05. ஒப்பந்தத்தை வழங்கப் பெறுவதற்குத் தகைமை கொண்ட வெற்றிகரமான விலைமனுதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெற்றிருத்தல் கூடாது என்பதுடன் விலைமனு ஆவணத்திலுள்ள தேவைப்பாடுகளைக் கொண்டிருத்தல் வேண்டும். மேலும் சித்திகரமான விலைமனுதாரர் விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் திகதி வரை செல்லுபடியாகக் கூடிய நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் (CIDA) மேற்படி அட்டவணையில் காட்டப்பட்டுள்ள நீர்ப்பாசனம் மற்றும் கால்வாய் வடிகாலமைப்பு துறையில் மேற்குறிப்பிடப்பட்ட தரம் மற்றும் அதற்கு மேற்பட்ட தரப் பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும். விலைமனுதாரர்கள் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு விலைகளைக் கோரலாம் ஆனால் ஒப்பந்தக்காரர்கள் நிதியியல் மற்றும் ஏனைய கொள்ளளவு வரையறைகளின் பிரகாரம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

06. மேற்படி அட்டவணையில் காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை (தொகைக்கு மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணையைப் பார்க்கவும்) 2022 மே 05ஆம் திகதி முதல் 2022 மே 26ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 2.00 மணி வரையில் ரொக்கப் பணமாகச் செலுத்திய பின்னர், மேற்படி 4ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள முகவரியிலுள்ள பிரதி செயற்றிட்டப் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை தகுதியுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம்.

07. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்றும் மற்றும் வேலைத் தள விஜயமும் 2022 மே 18ஆம் திகதி மேற்படி 4ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வளமுள்ள விலைமனுதாரர்கள் இயைபுடைய அதிகாரிகளின் உதவியுடன் வேலைத் தளத்தை தங்கள் சொந்த செலவில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

08. விலைமனுக்களுடன் விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ள விபரத்தின் பிரகாரம் மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் தரப்பட்டுள்ள தொகைக்கான நிபந்தனையற்ற விலைக்கோரல் உத்தரவாதமொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். செல்லுபடியாகும் உத்தரவாதமற்ற எந்தவொரு விலைமனுவும் பதிலளிக்கப்படாத விலைமனுவாகக் கருதப்படும் என்பதுடன் எவ்வித விசாரணைகளுமின்றி நிராகரிக்கப்படும்.

09. விலைமனு ஆவணத்தின் சகல பக்கங்களும் விலைமனுதாரரால் கையொப்பமிடப்பட்டு உத்தியோகபூர்வ முத்திரை பொறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

10. விலைமனுக்கள் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியை வெவ்வேறான உறைகளில் இட்டு பின் அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து அதன் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் விபரம் மற்றும் ஒப்பந்த இலக்கம் என்பன குறிக்கப்படுதல் வேண்டும்.

11. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை 2022 மே 30ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், பிராந்திய பெறுகைக் குழு (கிழக்கு மாகாணம்), காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம், பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர் அலுவலகம் (கிழக்கு மாகாணம்), லவ் லேன், உப்புவெளி, திருகோணமலை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

12. கிடைக்கப்பெற்ற விலைமனுக்கள் 2022-05-30ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முடிவுறுத்தப்படும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.

**டாக்டர் ஆர்.எம். ஆரியதாச,**
**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு (கிழக்கு மாகாணம்),**
**காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம்,**
**பிரதி செயற்றிட்டப் பணிப்பாளரின் அலுவலகம் (கிழக்கு மாகாணம்),**
**லவ் லேன்,**
**உப்புவெளி,**
**திருகோணமலை.**

**2022-05-05ஆம் திகதி.**

## இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு அரசாங்கம்

**நெடுஞ்சாலைகள் அமைச்சு**

### வீதி அபிவிருத்தி அதிகார சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல்

**INVITATION FOR PURCHASING OF TRAILER MOUNTED MOBILE LED SIGN BOARDS FOR THE EXPRESSWAY OPEERATION, MAINTENANCE & MANAGEMENT DIVISION**

**CONTRACT No.: RDA/EOM&M/PRC/2022/ELE/13**

1. பின்வரும் அம்சத்தின் கொள்வனவிற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் சார்பாக அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடுகள், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவின் பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

| ஒப்பந்த இலக்கம் | அம்சம் | அளவு (எண்ணிக்கைகள்) | விலைமனுப்பிணை (ரூபாவில்) |
|---|---|---|---|
| RDA/EOM&M /PRC/2022/ELE/13 | Trailer mounted Mobile Led Sign Boards | 06 | 150,000.00 |

2. ஆர்வமும் தகுதியுமுடைய விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை பண்டாரகம, வல்கம, கஹட்டகஹஹேன, வீதி அபிவிருத்தி சபை, பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவு, அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடு, பெறுகைப் பிரிவிலிருந்து பெற்று (தொலைபேசி: 038-2289122. தொலைநகல்: 038-2289560) 2022.05.05 ஆம் திகதியிலிருந்து 2022.05.25 (போயா நாட்கள் மற்றும் வார இறுதிகள் நீங்கலானவை) அலுவலக நேரங்களில் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.

3. 2022.05.05 ஆம் திகதியிலிருந்து 2022.05.25 ஆம் திகதி வரையும் (போயா நாட்கள் மற்றும் வார இறுதிகள் நீங்கலானவை) மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2.30 மணி வரையும் 3,000 ரூபா + பெசேவ ஆகிய மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர், பண்டாரகம, வல்கம, கஹட்டகஹஹேன, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, **EOM&M** பிரிவு பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணமொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.

4. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் ஒன்றில் பதிவுத் தபாலில் 2022.05.26 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் இரு பிரதிகளில் பணிப்பாளர் **(EOM&M Division)** பணிப்பாளருக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது நேரடியாகவே ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்தப் பெயரை தயவு செய்து குறிப்பிடவும்.

5. விலைமனுக்கள் அவைகளை பண்டாரகம, வல்கம, கஹட்டகஹஹேன, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, **EOM&M** பணிப்பாளரின் அலுவலகத்தில் மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**EOM&M பிரிவின் பெறுகைக் குழு,**
**பணிப்பாளர் (EOM&M பிரிவு) மே/பா,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**
**கஹட்டகஹஹேன, வல்கம, பண்டாரகம.**

## இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு

TRC

## பொது அறிவிப்பு

**2G & 3G செயல்படுத்தப்பட்டமொபைல் போன்களை மட்டுமே பயன்படுத்தும் பார்தி ஏர்டெல் லங்கா (பிரைவேட்) லிமிடெட் (ஏர்டெல்) நெட்வொர்க்கின் சந்தாதாரர்களுக்கு அறிவிப்பு**

3G மொபைல் நெட்வொர்க்கை **24.06.2022** திகதி நிறுத்துவதற்கு இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும். ஆணைக்குழு தனது அனுமதியை பார்தி ஏர்டெல் லங்கா (பிரைவேட்) லிமிடெட் (ஏர்டெல்) நிறுவனத்திற்கு வழங்கியுள்ளதாக பொதுமக்களுக்கு இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது. 3G நெட்வொர் நிறுத்தப்பட்ட பின் 2G & 3G செயல்படுத்தப்பட்டமொபைல் போன்களை மட்டுமே பயன்படுத்தும் ஏர்டெல் சந்தாதாரர்களின் 3G இணைப்பு மட்டும், நெட்வொர்க் நிறுத்தப்பட்ட தேதிக்குப் பிறகு தானாகவே துண்டிக்கப்படும். ஏர்டெல் 2G நெட்வொர்க்கின் குரல் மற்றும் குறுஞ்செய்தி இணைப்பு அனைத்து 2G மற்றும் 3G வாடிக்கையாளர்களுக்கும் தடையின்றி தொடர்ந்தும் செயல்படும்.

3G நிறுத்தம் முதன்மையாக, சிறந்த வேகம் மற்றும் திறனை வழங்கும் 4G சேவைகளை வழங்குவதற்கு அதிர்வெண்களைப் பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. ஏர்டெல்லின் 3G நெட்வொர்க்கின் நிறுத்தம் காரணமாக இடைநிலைக் காலத்தின் முடிவில் ஏற்படும் சேவை இடையூறுகளைத் தவிர்ப்பதற்காக ஏர்டெல்லுக்கு 15 மாத காலக்கெடு வழங்கப்பட்டுள்ளது. பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு மாறுதல் கட்டத்தின் போது ஏர்டெல் அதன் 3G சந்தாதாரர்களில் குறைந்தது 90% ஐ தங்கள் 4G நெட்வொர்க்கில் உள்வாங்கக் கடமைப்பட்டுள்ளது.

1. ஏர்டெல் சந்தாதாரர்கள் 3G நிறுத்தப்படுவதற்கு முன்னதாக 4G நெட்வொர்க்கிற்கு மாறுவதை ஊக்குவிக்க பொது விழிப்புணர்வு பிரச்சாரங்களை நடத்துங்கள்.
2. அதன் 3G சந்தாதாரர்களுக்கு 4G கைபேசிகளை தவணை அடிப்படையில் மானிய விலையில் வழங்குவதற்கான ஒவ்வொரு முயற்சியையும் எடுங்கள்
3. முதல் 06 மாதங்களுக்கு கவர்ச்சிகரமான கட்டணப் பொதிகள், பல்வேறு சலுகைகள், தொடர்ச்சியான ஊக்கத்தொகைகளை வழங்குவதன் மூலம் மாற்றத்தை இயக்கவும்
4. அதன் 3G சந்தாதாரர்களுக்கு, குறிப்பிட்ட காலக்கெடுவிற்கு முன், 4G செயல்படுத்தப்பட்ட கைபேசிகளை மாற்ற, வழக்கமான இடைவெளியில், SMS அனுப்புவதன் மூலம் அவர்களுக்குத் தெரிவிக்கவும்

நீங்கள் ஏர்டெல் சந்தாதாரராக இருந்து, இன்னும் 2G மற்றும் 3G வசதியுள்ள / போனை மட்டுமே பயன்படுத்தினால், சலுகை விதிமுறைகளின் கீழ் புதிய மொபைல் / போனுடன் 4G இணைப்பைப் பெற, உடனடியாக 780 என்ற குறுகிய குறியீடு மூலம் ஏர்டெல்லைத் தொடர்புகொள்ளலாம். இந்தச் சலுகையை **01.06.2022** வரை மட்டுமே நீங்கள் அனுபவிக்க முடியும் என்பதை நினைவில் கொள்ளவும்.

குறிப்பிட்ட காலக்கெடுவில் 4G மொபைல் / போனைப் பெறுவதில் ஏதேனும் சிரமம் ஏற்பட்டால், இந்த ஆணையத்தில் புகார் அளிக்கலாம்.

**பணிப்பாளர் நாயகம்**
**இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு**
**இல. 276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 08.**
**மின்னஞ்சல்:** smcomp@trc.gov.lk **தொலைநகல்: 011 2689341 தொலைபேசி: 011 2689345**



# பரா தடகள வீரர் ராஜிந்தர் ஜே.கே.க்கு தங்கம்



ஸ்ரீநகர்/ஐபிஎன்எஸ்: சிறப்புப் பராதடகள வீரர் ராஜீந்தர் சிங், தேசிய போசியா சம்பியன்ஷிப்பில் ஜே&கே அணிக்காக தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.

பெத்காம் காட்போரா டிரால் பகுதியைச் சேர்ந்த ராஜிந்தர் சிங், முதுகுத் தண்டு காயம் காரணமாக கடந்த 22 ஆண்டுகளாக சக்கர நாற்காலியில் சிக்கித் தவித்து வருகிறார். நடக்க முடியாவிட்டாலும், விளையாட்டு மற்றும் சமூகப் பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர் ராஜீந்தர் சிங்.

சண்டிகரில் உள்ள சிட்காரா பல்கலைக்கழகத்தில் சமீபத்தில் நடைபெற்ற ஆறாவது தேசிய பாரா போசியா சாம்பியன்ஷிப்பில், BC5 பிரிவில் ஜே&கேக்காக ராஜிந்தர் தங்கம் வென்றார்.

"தேசிய அளவில் ஜே&கே தங்கப் பதக்கம் வென்றதில் மகிழ்ச்சி அடைகிறேன். நான் கடினமாக உழைத்து, ஜே&கேக்காக ஏதாவது செய்ய என்னால் முடிந்தவரை முயற்சி செய்து வருகிறேன். நான் இறுதியாக தங்கத்தை வென்றேன், "என்று ராஜீந்தர் கூறினார்.

"நான் தொடர்ந்து கடினமாக உழைப்பேன் மற்றும் சர்வதேச அளவில் ஜே & கேக்கு விருதுகளை கொண்டு வர முயற்சிப்பேன்," என்று அவர் கூறினார். ராஜிந்தர் இதற்கு முன்பு பாரா தெற்காசிய செஸ் சாம்பியன்ஷிப்பில் இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளார், மேலும் சமூக நடவடிக்கைக்காக 2014 இல் மாநில விருதையும் பெற்றுள்ளார்.

# மெய்வல்லுநர் போட்டி நடத்துவது தொடர்பான கலந்துரையாடல்

**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**

அக்கரைப்பற்று கல்விப் பணிமனைக்குட்பட்ட பாடசாலைகளில் வலய மட்ட மெய்வல்லுநர் மற்றும் பெரு விளையாட்டுக் போட்டிகளை றமழான் கால விடுமுறையை தொடர்ந்து நடாத்துவது தொடர்பான கலந்துரையாடல் அண்மையில், அக்கரைப்பற்று கல்வி வலய உடற்கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளர் எஸ்.எம்.ஜெமீல் தலைமையில் அக்கரைப்பற்று வலயக் கல்விப்பணிமனையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

44th OBSERVER SLT-MOBITEL SCHOOL CRICKETER OF THE YEAR 2022
Recognizing talent, inspiring greatness
SLTMOBITEL The Connection

44th OBSERVER SLT- MOBITEL
மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை-2022

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் OBSERVER SLT- MOBITEL மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2022
இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2022
தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது : ....................
வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐
தேசிய மட்ட வீராங்கனை : ....................
(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)
பாடசாலை : ....................
வாக்களித்தவர் பெயர் : ....................
முகவரி : ....................
மொபைல் இல. : ....................

SUNDAY OBSERVER

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:
1வது பரிசு : ரூ. 2,500
2வது பரிசு: ரூ. 1,500
3வது பரிசு : ரூ. 1,000

44வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10 எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

நிபந்தனைகள்:
SLT- MOBITEL நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்குபெற முடியாது.
ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 07-05-2022
இல. 06

Non-Stop லொக்கா
நீங்கள் விரும்பும் 9 App இற்கும் வேண்டியளவு data மற்றும் மேலதிகமாக 2GB.
398 ரூபா இற்கு #170#
அழைத்து அல்லது SELFCARE APP ஊடாக இப்போதே அக்டிவ் செய்யுங்கள்.
SLTMOBITEL

# பங்களாதேஷ் தொடருக்கான இலங்கை அணி அறிவிப்பு

## 8ம் திகதி டாக்கா பயணம்



பங்களாதேஷ் அணிக்கு எதிராக நடைபெறவுள்ள இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடருக்கான 18 வீரர்கள் கொண்ட குழாத்தை இலங்கை கிரிக்கெட் கடந்த (4) உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

அறிவிக்கப்பட்டுள்ள இலங்கை அணியில் கடைசியாக நடைபெற்ற இந்திய அணிக்கு எதிரான டெஸ்ட் குழாத்திலிருந்து 7 மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

உபாதைக்கு உள்ளாகியுள்ள பெதும் நிஸ்ஸங்க அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளதுடன், லஹிரு திரிமான்ன, ஓய்வுபெற்ற வேகப்பந்துவீச்சாளர் சுரங்க லக்மால், சரித் அசலங்க, ஜெப்ரி வெண்டர்சே, லஹிரு குமார மற்றும் துஷ்மந்த சமீர ஆகியோர் நீக்கப்பட்டுள்ளனர்.

இந்த ஆண்டு இறுதியில் நடைபெறவுள்ள ரி 20 உலகக்கிண்ணத்தை கவனத்திற்கொண்டு துஷ்மந்த சமீர டெஸ்ட் போட்டிகளில் விளையாடமாட்டார் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. எனவே, இவர் விளையாடமாட்டார் என்பதுடன், லஹிரு குமாரவுக்கு இந்திய தொடரில் உபாதை ஏற்பட்டிருந்தது. எனவே, இவரும் அணியில் இணைக்கப்படவில்லை.

வெளியேற்றப்பட்டுள்ள வீரர்களுக்கு பதிலாக, நடைபெற்றுமுடிந்த தேசிய சுபர் லீக்கில் அதிகூடிய ஓட்டங்களை பெற்றுக் கொண்ட கமிந்து மெண்டிஸ் அணியில் இடம் பிடித்துள்ளார். இவருடன் கமில் மிஷார மற்றும் ஓசத பெர்னாண்டோ ஆகியோர் துடுப்பாட்ட வீரர்களாக அணியில் இணைக்கப்பட்டுள்ளார்கள்.

இலங்கை அணியில் ஏற்கனவே ரொஷேன் சில்வா இணைக்கப்பட்டிருந்த போதும், அவர் அணியில் இணையவில்லை என்பதால், கமிந்து மெண்டிஸிற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக இலங்கை கிரிக்கெட் குறிப்பிட்டுள்ளது. அதேநேரம், உபாதைக்கு முகங்கொடுத்திருந்த ரமேஷ் மெண்டிஸ் குணமடைந்து மீண்டும் அணியில் இடம்பிடித்துள்ளார்.

இவருடன் சுழல் பந்துவீச்சாளராக, புதுமுக இடதுகை சுழல் பந்துவீச்சாளர் சுமிந்த லக்ஷான் டெஸ்ட் அணியில் இடம்பிடித்துள்ளார். முன்னணி வேகப்பந்துவீச்சாளர்கள் நீக்கப்பட்டுள்ள நிலையில், இளம் இடதுகை வேகப்பந்துவீச்சாளர் டில்ஷான் மதுசங்கவுக்கு அணியில் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. டில்ஷான் மதுசங்கவுடன், கசுன் ராஜித மீண்டும் அணிக்குள் அழைக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறான மாற்றங்களுடன் திமுத் கருணாரத்ன தலைமையில் களமிறங்கவுள்ள இலங்கை அணியில், அஞ்செலோ மெதிவ்ஸ், தினேஷ் சந்திமால், குசல் மெண்டிஸ், தனன்ஜய டி சில்வா மற்றும் நிரோஷன் டிக்வெல்ல ஆகியோரும் அணியில் இடம்பிடித்துள்ளனர். அத்துடன், மேற்குறித்த வீரர்களை தவிர்த்து இந்திய தொடரில் இணைக்கப்பட்டிருந்த ஏனைய வீரர்களும் இலங்கை அணியில் இடம்பிடித்துள்ளனர்.

பங்களாதேஷ் தொடருக்கான இலங்கை அணி எதிர்வரும் 8ம் திகதி புறப்படவுள்ளதுடன், முதல் டெஸ்ட் போட்டிக்கு முன்னர் 2 நாட்கள் கொண்ட பயிற்சிப்போட்டியொன்றில் விளையாடவுள்ளது. இரண்டு அணிகளுக்கும் இடையிலான முதல் டெஸ்ட் போட்டி அடுத்த மாதம் 15ம் திகதியும், இரண்டாவது டெஸ்ட் போட்டி 23ம் திகதியும் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**இலங்கை அணி**

திமுத் கருணாரத்ன (தலைவர்), காமில் மிஷ்ரா, ஓசத பெர்னாண்டோ, அஞ்செலோ மெத்திவ்ஸ், குசல் மெண்டிஸ், தனஞ்சய டி சில்வா, கமிந்து மெண்டிஸ், நிரோஷன் டிக்வெல்ல, தினேஷ் சந்திமால், ரமேஷ் மெண்டிஸ்,

சாமிக்க கருணாரத்ன, சுமிந்த லக்ஷான், கசுன் ராஜித, விஷ்வ பெர்னாண்டோ, அசித பெர்னாண்டோ, டில்ஷான் மதுசங்க, பிரவீன் ஜயவிக்ரம, லசித் எம்புல்தெனிய

# இரத்தினபுரி மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கு பயிற்சி செயலமர்வு



**பலாங்கொடை தினகரன் நிருபர்**

இரத்தினபுரி மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களாக பணியாற்றுவோருக்கான பயிற்சி செயலமர்வு ஒன்று அண்மையில் இரத்தினபுரி சீவலி விளையாட்டரங்கில் சிறப்பாக இடம்பெற்றது.

இந்த செயலமர்விலே இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள உதைபந்தாட்ட மத்தியஸ்தராக கடமையாற்றுவோர் கலந்து கொண்டனர்.

இந்த செயலமர்வின் பிரதான ஆலோசகராக கடமையாற்றிய இலங்கையின் முதல் நிலையில் உள்ள உதைபந்தாட்ட மத்தியஸ்தரான தரங்கவும், உதவியாளராக பணி புரியும் மத்தியஸ்தரான ஜயலத் ஆகியோர் பங்குகொண்டு பயிற்சிகளை அளித்தமை குறிப்பிடத்தக்கது.

# திருகோணமலை மாவட்ட சாரணர்களுக்கான விளையாட்டு நிகழ்வு



**கந்தளாய் தினகரன் நிருபர்**

திருகோணமலை மாவட்ட சாரணர்களுக்கான விளையாட்டு நிகழ்வு திருகோணமலை மாவட்ட திரிசாரணர்களால் ஒழுங்கமைக்கப்பட்டு நடாத்தப்பட்டது.

இவ் விழா கடந்த சனிக்கிழமை(30) திருகோணமலை இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஜெனார்தனன் கலந்து கொண்டார்.இதன் போது அதிதியினால் திரிசாரணர்களுக்கு வெற்றிக் கிண்ணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

மிகநேர்த்தியான ஒழுங்கமைப்பும் ஏற்பாடுகளும் திரிசாரணர்களின் தலைமைத்துவப் பண்பினையும் ஆளுமையையும் வெளிப்படுத்தி நின்றது.

# பாலமுனை ட்ரை ஸ்டார் விளையாட்டுக் கழகம் எல்லே சம்பியன்



**அட்டாளைச்சேனை மத்திய நிருபர்**

அ ட்டாளைசசேனை பிரதேச செயலகத்தினால் நடாத்தப்பட்ட பிரதேசமட்ட எல்லே சுற்றுப் போட்டியில், பாலமுனை ட்ரை ஸ்டார் விளையாட்டுக் கழகம் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டு, அம்பாறை மாவட்ட போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. பாலமுனை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற எல்லே சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில், பாலமுனை அல்அறபா விளையாட்டுக் கழகத்துடன் மோதிய ட்ரை ஸ்டார் விளையாட்டுக் கழகம் 3:2 என்ற ரீதியில் வெற்றியீட்டியது.

அட்டாளைச்சேனை பிரதேச செயலக விளையாட்டுப் பிரிவின் ஏற்பாட்டில் நடைபெற்ற எல்லே சுற்றுப் போட்டியை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அஹமட் சாபிரின் ஆலோசனை, வழிகாட்டலில், விளையாட்டு உத்தியோகத்தர் எம்.எச்.அஷ்வத் நெறிப்படுத்தினார்.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற எல்லே இறுதிப் போட்டியின் போது, பாலமுனை ட்ரை ஸ்டார் விளையாட்டுக் கழக வீரர்கள் சிறப்பாக விளையாடி தங்களது திறமையை வெளிக்காட்டினர்.அட்டாளைச்சேனை பிரதேச கழகங்களுக்கிடையிலான எல்லே சுற்றுப் போட்டியில் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள பாலமுனை ட்ரை ஸ்டார் விளையாட்டுக் கழக வீரர்களுக்கு கழகத் தலைவர், உடற்கல்வி ஆசிரியர் ஐ.எல். பாயிஸ் வாழ்த்துவதையும், பாராட்டினையும் தெரிவித்துக் கொண்டார்.

# நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டு கழக அணி சம்பியன்னானது



**யாழ்.விளையாட்டு நிருபர்**

யாழ் பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்டவிளையாட்டுக் கழகங்ஙளுக்கு இடையிலான கால் பந்தாட்டத் தொடரில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுககழக அணி சம்பியன்னானது .

யாழ்.துரையாப்பா விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் நாவாந்துறை சென்நீக்கிலஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது. ஆட்ட நேர முடிவில் இரண்டு அணியினரும் தலா ஒரு கோலினை பதிவு செய்ய ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

ஆட்டம் வெற்றி தோல்வி தீர்மானிக்க தண்ட உதைகள் வழங்கப்பட்டது.இதில் நாவாந்துறை சென்நீக்கிலஸ் விளையாட்டுக்கழக அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது

# இலங்கையுடனான டெஸ்ட் தொடரில் களமிறங்கும் முஸாதெக் ஹுசைன்



இலங்கை அணிக்கு எதிராக நடைபெறவுள்ள முதல் டெஸ்ட் போட்டிக்கான குழாத்தில் துடுப்பாட்ட வீரர் முஸாதெக் ஹுசைன் சைகாட்டை பங்களாதேஷ் கிரிக்கெட் சபை இணைத்துள்ளது.

இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கு இடையில் நடைபெறவுள்ள 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடருக்கான பங்களாதேஷ் அணி ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

குறிப்பிட்ட இந்த அணியில் சுழல் பந்துவீச்சாளர் மெஹிதி ஹாஸன் முதல் டெஸ்ட் போட்டியில் விளையாடமாட்டார் எனவும், இரண்டாவது போட்டியில் விளையாடுவதும் சந்தேகத்துக்கிடமாகியுள்ளது எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 மே மாதம் 5ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.